April 2025

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு




சித்திரை
சிறப்பிதழ்

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு





VARSHA™


இன்பம் தொடர
இதயம் குளிர

தமிழ் புத்தாண்டு
வாழ்த்துக்கள்

# தமிழ்

நற்றமிழரின் நாடித்துடிப்பு

**April 2025**

சுவடி — 15
ஓலை — 2




## வணக்கம் பல

**வா**னமண்டலம் என்றைக்கும் அதிசயம் மிகுந்தது. ஆராயத் தக்கது. அற்புத உலகத்துக்குச் சென்ற இருவர், மீண்டும் பூமிக்குத் திரும்புவதற்கு நடந்த போராட்டத்தை உலகமே உற்று நோக்கிக் கொண்டிருந்தது. சில நாட்களில் பூமிக்குத் திரும்ப வேண்டியவர்கள், நாட்கள் பல கடந்து, மாதங்களாக நீண்டும் கூட அவர்கள் திரும்புவதற்கான காலம் தள்ளிப் போய்க் கொண்டே இருந்தது. அவர்கள் பத்திரமாகப் பூமிக்கு திரும்பிய நிகழ்வை உலகமே வியந்து பார்த்து மகிழ்ந்து கொண்டாடியது.

அமெரிக்க அதிபர் மாற்றத்தால், போர் முடிவுக்கு வரும் என்று பரவலாகப் பேசப்பட்டது. எதிர்பார்க்கப்பட்டது. அமெரிக்க அதிபரால் இதுவரை போர் நிறுத்தத்துக்கான வழிவகை செய்யப்படவில்லை. பதிலாகப் போர் தீவிரமடைய வழிவகுத்தாற்போல் ஆகிவிட்டது. போர்ச் சூழல், அந்நாட்டு மக்களுக்கும் மிகப்பெரிய பாதகத்தை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை உணர்ந்து, அமெரிக்க அதிபர் மட்டுமல்ல, அனைத்து நாட்டு அதிபர்களும் ஒன்றாகக் கூடி, இவ்விஷயத்தில் சிறந்ததொரு முடிவை எடுத்து மக்களின் மன நிம்மதிக்கு வழிகோல வேண்டும்.

சித்திரை பிறக்கிறது. சிறப்பான வாழ்வு தரவிருக்கிறது. உலகெங்கும் தமிழ்ப் புத்தாண்டாகக் கொண்டாடப்படும் சித்திரைத் திருநாள், தமிழர்களின் இல்லங்களிலும் உள்ளங்களிலும் மகிழ்ச்சியை மலரச் செய்யட்டும்! வருகின்ற இந்தச் சித்திரைத் திருநாள் உலகெங்கும் வாழும் தமிழர்களுக்கு மட்டுமல்லாது, அனைவருக்கும் அன்பையும், சமத்துவத்தையும் தர வேண்டும் என்று வேண்டுவோமாக!

சித்திரைத் தேரோட்டம் என்பது தமிழ் மக்களிடம் மிகவும் பிரபலமானதும் பெருமைக்குரியதும் மகிழ்ச்சிக்குரியதுமான ஒன்று! ஆலயங்களில் தேரோட்டம் போல, அகங்களிலும் மகிழ்ச்சித் தேர் ஓடட்டும்! வருகின்ற திருநாளில் அனைவரும் ஒன்றாய்க் கூடியமர்ந்து அல்லதை நீக்கி, நல்லதைச் செய்து வாழ்வில் வளம் பல பெருக்க மக்கள் மனங்களில் ஓடட்டும்! மகிழ்ச்சி வடம், மனிதநேய வடம் என இருவடங்களைப் பிடித்து உலகெங்கும் ஓடிட, இத்திருநாள் சிறப்புற மலரட்டும்! அந்தவகையில், சித்திரைச் சிறப்பதழாக மலர்கின்ற இம்மாத 'அய் தமிழில்' சிறப்பான கட்டுரைகளுடன், கவிதைகளுடன் வழமைபோல் சிறப்புடன் மலர்கிறது. வாருங்கள்! வரவேற்று வாசியுங்கள்! நேசியுங்கள்! உலகெங்கும் உள்ள தமிழ் மக்கள் அனைவருக்கும் சித்திரைத் திருநாள் நல்வாழ்த்துக்கள்!

நேசப்பகிர்தலுடன்

ஆசிரியர் குழு

## உள்ளே...


தொடு தூரம்

அதிபர் ஆடும் சடுகுடு

தமிழே தமிழே

அழியும் அரசியல் நாகரிகம்

சேரமான் கனவு

தல வலம்

அறிவோம் தமிழர் பெருமை

சிவகாமியின் சபதம்

நீர் நிலை

மருத்துவ தமிழ்

வாழ்க்கை வாழ்வதற்கே



**IThamil Monthly Magazine**

**Chief Editor & Publisher**
Sivanesan

**Editor**
Khottravan

**Editorial Team**
Ganesan
Navani
Shanthakumar

**Art Editor**
Sriram

**Art & Marketing Director**
Jaya

**Printers**
Kanagam Pathippagam

**Contact us:**
*editor@ithamil.com*



(பொறுப்பு துறப்பு: இதழில் வெளியாகும் படைப்புகள் அனைத்தும் படைப்பாளரின் பெருமைக்கும் பொறுப்புக்கும் உரியது. படைப்புக்கள் யாவும் படைப்பாளிகளின் கருத்துக்களே. அதற்கு எவ்வகையிலும் அய் தமிழ் பொறுப்பேற்காது.)

# தொடு

## பத்திரமாக பூமிக்குத் திரும்பிய சுனிதா வில்லியம்ஸ்

சர்வதேச விண்வெளி நிலையத்தில் கடந்த 286 நாட்களாக தங்கியிருந்த சுனிதா வில்லியம்ஸ், பத்திரமாக பூமிக்குத் திரும்பினார். இந்திய நேரப்படி சுமார் 3.30 மணிக்கு அவர் பயணித்த ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம், புளோரிடா மாகாணத்திற்கு அருகில், கடலில் இறங்கி, மிதந்தது.

விண்கலத்தில் இருந்து வெளியே வந்த சுனிதா வில்லியம்ஸ் சிரித்தபடி கையை அசைத்து தனது மகிழ்ச்சியை வெளிப்படுத்தினார்.



புட்ச் வில்மோர் மற்றும் சர்வதேச விண்வெளி நிலையத்தின் சக பணியாளர்களான அமெரிக்க விண்வெளி வீரர் நிக் ஹேக், ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்சாண்டர் கோர்புனோவ் ஆகியோருடன் இந்திய நேரப்படி மார்ச் 18ம் தேதி காலை 10.35 மணிக்கு, சுனிதா உள்ளிட்டோர் பயணிக்கும் டிராகன் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்து பிரிந்தது.மார்ச் 19ஆம் தேதி அதிகாலை 3.30 மணியளவில் அவர்கள் பூமி திரும்பினர். 17 மணிநேர பயணத்திற்குப் பிறகு பூமியை அடைந்தனர்.




இந்த ஸ்பேஸ்எக்ஸ் டிராகன் விண்கலம் வளிமண்டல மறுநுழைவு என அழைக்கப்படும் ஆபத்தான கட்டத்தைக் கடந்து பூமியை நோக்கி பயணித்தது. பிறகு பல்வேறு கட்டங்களாக பாராசூட்கள் விரிக்கப்பட்டு, அதன் வேகம் குறைக்கப்பட்டு, நீரில் இறங்கி, மிதந்தது.

இதற்குப் பிறகு இந்த நான்கு விண்வெளி வீரர்களும் அமெரிக்க நேரப்படி இரவு 11:19 மணிக்கு ஹூஸ்டனில் உள்ள ஜான்சன் விண்வெளி மையத்தின் எலிங்டன் ஃபீல்டுக்கு வந்து சேர்ந்துள்ளனர்.

இங்கு அவர்களுக்கு விண்வெளி பயணத்திற்குப் பிறகான மருத்துவப் பரிசோதனைகளும், பயிற்சிகளும் அளிக்கப்படும் என்று ஊடக செய்திகள் தெரிவிக்கின்றன. அவர்கள் வந்த விண்கலம் ஸ்பிளாஷ்டவுன் என்ற செயல்முறையின் மூலம் கடல் பகுதியில் இறங்கியது. அதாவது, விண்கலம் இறங்கும்போது கடலில் உள்ள தண்ணீர் மிகப்பெரும் அளவில் தெறிக்கும் என்பதால், அந்த செயல்முறையை 'ஸ்பிளாஷ்டவுன்' என்கின்றனர்.




சற்றுத் தொலைவில் படகுகளில் காத்திருந்த மீட்புக் குழுவினர் நான்கு விண்வெளி வீரர்களையும் பத்திரமாக மீட்டனர்.

தொடர்பு துண்டிக்கப்பட்ட சில நிமிடங்கள்

டிராகன் விண்கலம் பூமியின் வளிமண்டலத்துக்குள் நுழைந்தபோது சற்று நேரத்துக்கு கட்டுப்பாட்டு அறையுடனான தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. இது வழக்கமான நடைமுறையாகும். அப்போது விண்கலத்தைச் சுற்றி 1927 டிகிரி செல்சியஸ் வெப்பநிலை இருந்தது. டிராகன் விண்கலத்தின் வெப்பத்தடுப்பு ஓடுகள் உள்ளே இருந்த விண்வெளி வீரர்களைப் பாதுகாத்தன. சிறிது நேரத்துக்குப் பிறகு தகவல் தொடர்பு மீட்கப்பட்டு கடலில் இறங்குவதற்கான பணிகள் தொடங்கப்பட்டன. தன்னிச்சையாக விண்கலம் பூமியை நோக்கி விரைந்தது.

அப்போது விண்கலம் சுமார் 27,000 கிலோமீட்டர் வேகத்தில் வந்து கொண்டிருந்தது. பின்னர் விண்கலத்தின் வேகத்தைக் குறைக்கும் பாரசூட்கள் விரிந்தன. நாசாவின் கேமராக்களில் இந்த நிகழ்வுகள் தெளிவாகப் படம்பிடிக்கப்பட்டன. பின்னர் படிப்படியாக வேகம் குறைக்கப்பட்டு கடலில் வந்து விழுந்த விண்கலத்தை, நாசாவின் மீட்புப் படகுகள் பத்திரமாக கப்பலுக்கு எடுத்து வந்தன.

துள்ளிக் குதித்த டால்பின்கள்




விண்கலம் கடலில் விழுந்தபோது, அதைச் சுற்றி பல டால்பின்கள் மேற்புறத்தில் நீந்திக் கொண்டிருந்தது நாசாவின் கேமராக்கள் காட்டின. அது மீட்புக் குழுவுக்குக் கிடைத்த பெருமை என்று நாசா விஞ்ஞானிகள் நகைச்சுவையாகக் கூறினர்.



கடலில் இருந்து விண்கலம் மீட்புப் படகில் ஏற்றப்பட்டபோது அதில் இருந்த கடல் நீர் கொப்பளித்து வெளியேறியது.



விண்வெளியில் 'சிக்கியவர்கள்' என்பது உண்மையா?

சுனிதா வில்லியம்சும், புட்ச் வில்மோரும் திட்டமிடப்பட்ட 8 நாட்களை விட அதிக நாட்கள், அதாவது சுமார் 286 நாட்கள் விண்வெளியில் தங்க நேரிட்டது. இருவரும் விண்வெளியில் சிக்கித் தவிப்பதாக விவரிக்கப்பட்ட போதிலும் அது ஒருபோதும் உண்மையில்லை.ஏனெனில், கப்பல்களில் உள்ள உயிர் காக்கும் படகுகள் போலவே, சர்வதேச விண்வெளி நிலையத்திலும் ஒரு விண்கலம் அவசர கால பயன்பாட்டிற்காக எப்போதும் இணைந்தே இருக்கும். போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட கோளாறால் மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட்ட நாசா, சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்ட விண்வெளி வீரர்களின் பாதுகாப்பு கருதி, அதே விண்கலத்தில் பூமிக்குத் திரும்புவதை தவிர்த்துவிட்டது. அதற்குப் பதிலாக, அவர்கள் இருவரும் சர்வதேச விண்வெளி நிலையத்திலேயே தொடர்ந்து தங்கியிருக்கவும், ஏற்கனவே திட்டமிட்டபடி, பூமியில் இருந்து செல்லும் அடுத்த விண்கலத்தில் இருவரும் பூமிக்கு அழைத்து வரவும் நாசா தீர்மானித்தது.

நாசாவின் இந்த முடிவே, சுனிதா வில்லியம்ஸ் பூமிக்குத் திரும்புவதை மாதக்கணக்கில் தள்ளிப் போட்டது. ஆகவே, சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் ஆகிய இருவரும் சர்வதேச விண்வெளியில் அதிக காலம் தங்கி ஆய்வுகளைத் தொடர்ந்தனர். அவர்கள் சுற்றுப்பாதை ஆய்வகத்தில் பல சோதனைகளை மேற்கொண்டதுடன், ஸ்பேஸ் வாக் எனப்படும் விண்வெளி நடையிலும் அவர்கள் பலமுறை ஈடுபட்டனர்.



விண்வெளியில் நீண்ட காலம் தங்கிய முதல் பெண்மணி, சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு வெளியே அதிக மணிநேரம் செலவழித்த பெண் ஆகிய சாதனைகளை சுனிதா வில்லியம்ஸ் படைத்துள்ளார். இது சுனிதா வில்லியம்ஸின் மூன்றாவது விண்வெளிப் பயணம். மூன்று பயணத்திலும் சேர்த்து மொத்தமாக ஒன்பது முறை விண்வெளியில் நடந்துள்ளார் சுனிதா. இந்தக் காலகட்டத்தில் மொத்தம் 62 மணி நேரம் 6 நிமிடங்களை அவர் விண்வெளி நடையில் செலவிட்டுள்ளார்.சர்வதேச விண்வெளி நிலையத்தில் இருந்தபடியே, அமெரிக்க அதிபர் தேர்தலில் வாக்களித்தது, கிறிஸ்துமஸ் கொண்டாடியது, ஏற்கனவே வீட்டில் செலவிட திட்டமிட்டிருந்த கிறிஸ்துமஸுக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பியது, செய்தியாளர் சந்திப்பை நிகழ்த்தியது என பலவற்றையும் அவர்கள் சாதித்துள்ளனர்.

9 மாதங்களுக்குப் பிறகு சுனிதா வில்லியம்சும், புட்ச் வில்மோரும் பூமிக்குத் திரும்பியுள்ளனர். அவர்கள் விரைவில் டெக்சாஸ் மாகாணம் ஹூஸ்டனில் உள்ள ஜான்சன் விண்வெளி மையத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள், அங்கு அவர்கள் மருத்துவ நிபுணர்களால் பரிசோதிக்கப்படுவார்கள்.நீண்ட கால விண்வெளி பயணங்கள் உடலை பாதிக்கின்றன, விண்வெளி வீரர்கள் எலும்பு அடர்த்தியை இழந்து தசை இழப்பை சந்திக்கின்றனர். இரத்த ஓட்டமும் பாதிக்கப்படுகிறது. கண் பார்வையும் பாதிக்கப்படலாம்.

உடல் இயல்பு நிலைக்குத் திரும்ப நீண்ட காலம் ஆகலாம், எனவே சுனிதா வில்லியம்ஸ், புட்ச் வில்மோர் ஆகிய இருவரின் உடலும் புவி ஈர்ப்பு விசையுடன் வாழ்வதற்கு மீண்டும் பழகுவதால் அவர்களுக்கு விரிவான உடற்பயிற்சி முறை வழங்கப்படும்.சர்வதேச விண்வெளி




நிலையத்தில் இருந்தபோது அளித்த பேட்டிகளில், இருவருமே தாங்கள் எதிர்பார்த்ததை விட நீண்ட காலம் தங்குவதற்கு நன்கு தயாராக இருந்ததாகக் கூறியுள்ளனர் .கடந்த மாதம் பேசிய சுனிதா வில்லியம்ஸ், “என் குடும்பத்தினரையும், என் அன்புக்குரிய நாய்களையும் மீண்டும் பார்ப்பதுடன், கடலில் குதிப்பதையும் நான் ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன். பூமிக்குத் திரும்பி பூமியை உணருவது மிகவும் நன்றாக இருக்கும்.” என்றார்.விண்வெளி எத்தகைய கடினமானது என்பதை உணர்த்திய பயணம்

புட்ச் மற்றும் சுனிதாவின் வியத்தகு பணி, விண்வெளி கடினமானது என்பதை நமக்குக் காட்டுகிறது என்று பிபிசியின் அறிவியல் பிரிவு ஆசிரியர் ரெபேக்கா மொரெல்லி கூறுகிறார். நினைத்தது தவறாகப் போகலாம். தவறானது நடக்கலாம். அப்படி நிகழும்போது, சில கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருக்கும் என்கிறார் அவர்.

“எட்டு நாட்களில் முடிய வேண்டிய பணியை ஒன்பது மாதங்களாக நீட்டிக்க வேண்டியிருப்பது நாசாவிற்கு சாதாரணமானது அல்ல. ஆனால் புட்ச் மற்றும் சுனிதா இந்த சூழலுக்கு ஒரு பதிலாக இருக்கின்றனர். புதிய சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொண்டு விண்வெளி நிலையத்தில் வாழ்வது — ஒரு விண்வெளி வீரர் என்பதற்கான ஒரு பகுதியாகும்.”ஒரு திட்டத்தை வைத்திருப்பது — அதை மாற்றுவதற்கும் தயாராக இருக்க வேண்டியது ஆகியவற்றை இந்தப் பயணம் உணர்த்தியிருக்கிறது என்கிறார் ரெபேக்கா.

*900 மணி நேர ஆராய்ச்சி, 150 பரிசோதனைகள்*




சர்வதேச விண்வெளி நிலையத்தில் திட்டமிட்டதற்கு மாறாக பல மாதங்கள் தங்கியிருக்க நேரிட்ட சுனிதா வில்லியம்ஸூம், புட்ச் வில்ஸ்மோரும் அங்கு பல சாதனைகளைப் படைத்திருக்கின்றனர்.

இந்த விண்வெளிப் பயணத்தின் போது அவர்கள் 900 மணிநேர ஆராய்ச்சிகளைச் செய்திருக்கின்றனர். நாசாவின் விண்வெளி செயல்பாட்டு இயக்குநரகத்தின் ஜோயல் மொண்டல்பானோ இந்தத் தகவலைக் கூறியிருக்கிறார். சுனிதா, புட்ச் ஆகியோர் விண்வெளி நிலையத்தில் பணியாற்றிய காலத்தில் 150 பரிசோதனைகளை மேற்கொண்டதாகவும் அவர் கூறியிருக்கிறார்.நாசா விண்வெளி வீரர்கள் செய்திருக்கும் பணி “தேசத்திற்கு நன்மை பயக்கும்“ என்றும், தசாப்தத்தின் இறுதிக்குள் செவ்வாய் கிரகத்தில் மனிதரை தரையிறக்கும் இலக்கை நாசா அடையும் வாய்ப்பை அதிகரிக்கிறது என்றும் மொண்டல்பானோ கூறுகிறார்.

போயிங் ஸ்டார்லைனர் விண்கலத்தால் ஏற்பட்ட காலதாமதம்

61 வயதான வில்மோர், 59 வயதான சுனிதா இருவரும் போயிங் ஸ்டார்லைனர் விண்கலம் மூலமாக கடந்தாண்டு சர்வதேச விண்வெளி



நிலையத்திற்கு சென்றனர். அவர்கள் எட்டே நாட்களில் பூமிக்கு திரும்பி வர வேண்டியது.இந்த ஸ்டார்லைனர் விண்கலம் மனிதர்களுடன் சென்ற போயிங்கின் முதல் விண்கலம் ஆகும். வழக்கமான பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்பு விண்கலம் எவ்வாறு செயல்படும் என்பதை கவனிப்பதற்கான சோதனை ஓட்டமாக இது இருந்தது.

ஆனால் ஸ்டார்லைனர் விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்தை நெருங்கிய போது பல பிரச்னைகளை சந்தித்தது. விண்கலத்தை வழிநடத்தும் அதன் ஐந்து உந்துவிசை அமைப்புகள் செயலிழந்தன. அதிலிருந்த ஹீலியமும் தீர்ந்து போனது. இதன் காரணமாக இவர்கள் இருவரும் பூமிக்கு திரும்புவது தாமதமானது.அதன்பிறகு அமெரிக்க தொழிலதிபர் ஈலோன் மஸ்கின் விண்வெளி நிறுவனமான ஸ்பேஸ் எக்ஸ்—இன் விண்கலத்தைக் கொண்டு அவர்களை பூமிக்குத் திரும்ப அழைத்து வருவது என 2024ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் முடிவு செய்யப்பட்டது.முதலில் அவர்களை இந்த ஆண்டு பிப்ரவரி மாதம் பூமிக்குக் கொண்டு வருவதாகத் திட்டமிடப்பட்டிருந்தது.



பிறகு மார்ச் மாதம் என முடிவு செய்யப்பட்டது."சர்வதேச விண்வெளி மையத்தில் சிக்கியுள்ள இரண்டு விண்வெளி வீரர்களையும் விரைவில் பூமிக்கு அழைத்து வருமாறு அதிபர் கூறியுள்ளார். நாங்கள் அப்படியே செய்வோம். பைடன் நிர்வாகம் இத்தனை காலம் அவர்களை அங்கேயே விட்டுவிட்டது மிகவும் மோசமானது," என்று ஈலோன் மஸ்க் தமது எக்ஸ் தளத்தில் பதிவிட்டார்.

அமெரிக்காவின் ஓஹையோ மாகாணத்தைச் சேர்ந்த இந்தியரான தீபக் பாண்ட்யாவுக்கும் ஸ்லோவேனியாவைச் சேர்ந்த உர்சுலின் போனிக்கும் பிறந்த மூன்று குழந்தைகளில் கடைக்குட்டிதான் சுனிதா வில்லியம்ஸ். இந்தியாவைக் குறிக்கும் விதமாக சமோசாவையும் ஸ்லோவேனியாவைச் சுட்டும் வகையில் அந்த நாட்டுக் கொடியையும் விண்வெளிக்கு சுனிதா எடுத்துச் சென்றார்.

பொறியியல் துறையில் முதுகலைப் பட்டம் பெற்ற இவர், அமெரிக்கக் கப்பல் படையில் விமான ஓட்டியாகப் பணியாற்றினார். ஆகஸ்ட் 1998இல் நாசாவால் தெரிவு செய்யப்பட்டு விண்வெளி வீராங்கனையாகப் பயிற்சியைத் தொடங்கினார்.

டிசம்பர் 9, 2006இல் பணிக்குழு 14இன் உறுப்பினராக விண்வெளிக்குச் சென்று விண்வெளி நிலையத்தில் சேர்ந்தார். பூமிக்குத் திரும்பாமல் அடுத்த பணிக்குழு 15இலும் நீடித்து பங்கெடுத்து மொத்தம் 192 நாள்கள் விண்வெளியில் பணியாற்றி 2007 ஜூன் 22இல் பூமிக்குத் திரும்பினார்.இரண்டாவது முறையாக மறுபடி பணிக்குழு 32இன் பகுதியாக 2012 ஜூலை 15இல் விண்வெளி நிலையத்துக்குப் பயணம் செய்த சுனிதா, மறுபடி அடுத்த பணிக்குழு 33லும் இணைந்து 2012 நவம்பர் 19 அன்று பூமிக்குத் திரும்பினார்.

இதன் பின்னர் போயிங், ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனங்களுடன் இணைந்து அவர்களின் விண்கலங்களை ஓட்டும் பயிற்சியைப் பெற்றார். இதன் நீட்சியாகத்தான் ஸ்டார்லைனர் விண்கலத்தைச் சோதனையோட்டம் செய்ய மூன்றாவது முறையாக 59 வயதான சுனிதா கடந்த ஜூன் 2024இல் விண்வெளிக்குச் சென்றார்.நான்கு விண்கலங்களில் பயண சாதனை: இதுவரை விண்வெளி வீரர், வீராங்கனைகள் அதிகபட்சமாக இரண்டு வெவ்வேறு விண்கலங்களில் மட்டுமே பயணம் செய்துள்ளனர். ஆனால் சுனிதா வில்லியம்ஸ் ஸ்பேஸ் ஷட்டில், சோயூஸ், போயிங் ஸ்டார்லைனர், ஸ்பேஸ்எக்ஸ் க்ரூ டிராகன் ஆகிய நான்கு வெவ்வேறு விண்கலங்களில் பயணம் செய்த



அனுபவத்தைப் பெற்றிருக்கிறார்.என்ன செய்தார் சுனிதா வில்லியம்ஸ்? — * எதிர்காலத்தில் நீண்ட நாள்கள் விண்வெளிப் பயணம் மேற்கொண்டால் விண்வெளியில் பயிர்த் தொழில் செய்து உணவை உற்பத்தி செய்ய முடியுமா என ஆய்வு செய்ய லெட்யுஸ் எனப்படும் கீரைச் செடியை வளர்த்து ஈர்ப்பு விசையின் இழுவை அற்ற விண்வெளியில் தாவர வளர்ச்சி குறித்து ஆய்வுகளை மேற்கொண்டார்.

* ஆவி பறக்கும் சூடான உணவிலிருந்தும் வியர்வை மூலம் ஆவியாகும் நீர் விண்வெளி நிலையத்தின் காற்றில் கலந்துவிடும். இந்த நீரைப் பிரித்து எடுக்கும் புதிய கருவி ஒன்றை வடிவமைத்துள்ளனர். இந்தக் கருவியைப் பரிசோதனை செய்துபார்த்தார்.

* ரோடியம் உயிரி உற்பத்திப் பரிசோதனையில் விண்வெளி நிலையத்தில் ஈஸ்ட் போன்ற பாக்டீரியா வளர்ச்சி குறித்த ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. இதில் பங்கு கொண்டார். விண்வெளி நிலையத்தின் உள்ளே சுவர்களில் வாழும் நுண்ணுயிரிகளை இனம் கண்டு சோதனை செய்தார்.

* பதப்படுத்தி நீண்ட நாள்கள் வைக்கப்பட்ட உணவில் ஊட்டம் குறையும். ஈஸ்ட் போன்ற நுண்ணுயிரிகளைப் பயன்படுத்தி உணவில் உள்ள வைட்டமின்கள் போன்ற ஊட்டச் சத்துகளைத் தயாரிக்கும் உயிரித் தொழில்நுட்ப ஆய்வுகளில் ஈடுபட்டார்.

* இப்படிச் சிறிதும் பெரிதுமாக 150—க்கும் மேற்பட்ட அறிவியல் தொழில்நுட்பப் பரிசோதனைகளில் சுமார் 900 மணி நேர ஆராய்ச்சியை மேற்கொண்டிருக்கிறார்.

நெருக்கடி மிகுந்த விண்வெளி நிலைய வாழ்க்கையும், உடலில் ஏற்படும் மாற்றங்களும்!

கிரீன்விச் நேரத்தின்படி இயங்கும் விண்குடில் வாழ்க்கையில் நாள் ஒன்றுக்கு எட்டு மணி நேரம் தூக்க நேரம். நாம் சாதாரணமாகப் படுப்பதுபோல் எங்காவது படுத்தால் விண்வெளியில் மிதந்து சென்றுவிடுவோம் என்பதால் ஜிப் உடன் பைபோல இருக்கும் படுக்கைக்குள்தான் உறங்க வேண்டும். விழித்திருக்கும் நேரத்தில் பதினைந்து நிமிடத்துக்கு ஒரு வேலை என்கிறபடி தினசரி வேலைப் பட்டியல் பூமியிலிருந்து அனுப்பப்படும். அதன்படி பரிசோதனைகளை மேற்கொள்ள வேண்டும்.




குடிலைச் சுத்தம் செய்ய வேண்டும். அவ்வப்போது கட்டளைப்படி உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும். சில நேரம் புயல் போன்ற இயற்கைச் சீற்றம் உருவாகும்போது, விண்குடிலின் ஜன்னல் வழியே ஒளிப்படம் எடுத்து அனுப்ப வேண்டும். இடையிடையே அவர்களுக்கான நேரம் இருக்கும். அதில் பாட்டு கேட்கலாம், புத்தகம் படிக்கலாம், திரைப்படம் பார்க்கலாம். தினமும் வீட்டில் உள்ள நெருங்கிய உறவினர்களோடு வீடியோ காலில் பேச வாய்ப்பு கிடைக்கும்.

மாதம் ஒருமுறை பூமியிலிருந்து உணவு, நீர், ஆக்ஸிஜன், எரிபொருள், ஆய்வுக் கருவிகள் போன்றவற்றைத் தாங்கிய ஆளில்லா சரக்கு விண்கலம் செல்லும். அதில் உள்ள சரக்கை எடுத்து பத்திரப்படுத்துவதும், குப்பைகளைச் சேகரித்து அழிப்பதும் பணிக் குழுவின் வேலைதான். பூமியிலிருந்து பதம் செய்து டூத்பேஸ்ட்போல பாகு பதத்தில் டியூபில் அடைத்து அனுப்பப்படும் உணவு தவிர காபி, ஜூஸ், பழங்கள், இறைச்சி போன்றவற்றை உண்ணலாம். வாணலி போன்றவற்றில் இட்டு எதையும் சமையல் செய்ய








முடியாது; மைக்ரோவேவ் மூலம் சூடாக்குவது அல்லது இறைச்சியை உலர் வறுக்கும் முறையில் வறுப்பது போன்ற வகையில் மட்டுமே சமையல் செய்ய முடியும். உணவு தயாரிப்பதும் பணிக்குழுவின் வேலையே.விண்வெளியில் துணியைத் துவைக்க முடியாது. எனவே உள்ளாடைகளை ஓரிரு நாள்களுக்கு ஒரு முறை மட்டுமே பயன்படுத்துவார்கள். மற்ற ஆடைகளைச் சுமார் ஒரு வாரம் பயன்படுத்துவார்கள். சரக்கு விண்கலத்தில் அவர்களுக்குத் தேவையான ஆடைகள் செல்லும்.தனிமை, சிறு குழுவுடன் அடைந்த இடத்தில் வாழ்க்கை போன்றவை சிலரின் மனநிலையைப் பாதிக்கலாம். ஆனால், விண்வெளி வீரர், வீராங்கனைகளைத் தெரிவு செய்யும்போதே தனிமை, சிறு குழு வாழ்க்கைக்குத் தயார்படுத்தித்தான் அவர்களை விண்வெளிக்கு அனுப்புவார்கள்.

உடலில் ஏற்படும் மாற்றங்கள்: பூமியில், ஈர்ப்பு விசை காரணமாக நமது உடலில் தலையை நோக்கிச் செல்வதைவிட கால் நோக்கி ரத்தம் கூடுதலாகப் பாயும். விண்வெளியில் ஈர்ப்பு விசை இல்லை என்பதால் உடலின் எல்லா பாகங்களுக்கும் ரத்தம் இயல்புக்கு மாறாகப் பாயும். எனவே விண்வெளிக்குச் சென்ற சில நாள்களுக்குத் தலைவலி, கண் வலி போன்றவை ஏற்படும். நாளடைவில் நமது உடல் விண்வெளி நிலைமைக்குத் தகவமைத்துக் கொண்டுவிடும். இதேபோல ஆங்கில எழுத்து ‘உ’ போல பூமியில் இயல்பாக வளைந்து இருக்கும் முதுகுத் தண்டு விண்வெளியில் நேராக நீண்டு, நமது உயரம் சில செ.மீ.வரை கூடிவிடும். பூமியில் ஈர்ப்பு விசைக்கு எதிராக உடலைத் தாங்கிப் பிடிக்கும் எலும்புக்கு விண்வெளியில் வேலை இல்லை.




எனவே எலும்புச் செல் வளர்ச்சி குறைந்து நாளடைவில் எலும்பு அடர்த்தி குறையும். இது போன்ற உடலியல் மாற்றங்களைச் சரிசெய்ய ஆய்வுகளை மேற்கொள்வார்கள்; அதன் அடிப்படையில் புதிய புதிய உடற் பயற்சியை உருவாக்குவார்கள். இவற்றால் உயிருக்கு ஆபத்து ஏதுமில்லை என்றாலும், பூமி திரும்பியதும் மறுபடி நிலைமை திரும்பச் சில வாரங்கள் முதல் ஒரு மாதம்கூட எடுக்கலாம்.

விண்வெளி ஆபத்துகள் என்ன? — 371 நாள்கள் தொடர்ந்து விண்குடிலில் தங்கியிருந்த அமெரிக்க விண்வெளி வீரர் ஃபிராங்க் ரூபியோவிடம் விண்வெளி வாழ்க்கை ஏற்படுத்தும் உடலியல் மாற்றங்கள் குறித்த ஆய்வுகள் மேற்கொள்ளப்பட்டன. இதுபோல முன்னர் சென்ற அனுபவத்தின் அடிப்படையில் தசை இழப்பு, எலும்பு அடர்த்தி குறைவது, குடல் பாக்டீரியா மாற்றம் போன்ற பல சவால்கள் இனம் காணப்பட்டுள்ளன. எனவேதான், தற்போது தினம் தினம் ஒவ்வொரு விண்வெளி வீரரும் இரண்டரை மணி நேரம் உடற்பயிற்சி மேற்கொள்ள வேண்டும் என்று நிர்ணயிக்கப்பட்டுள்ளது.




விண்வெளியில் மிதக்கும் குப்பை, அவ்வப்போது சீறிச் செல்லும் விண்கற்கள் மோதலால் விண்வெளி நிலையத்துக்கு ஆபத்து ஏற்படலாம். இடர் தவிர் தொழில்நுட்பங்கள் உதவியோடு மோத வரும் பொருள்களை இனம் கண்டு விண்வெளி நிலையத்தின் பாதையைத் திசை திருப்பிச் சமாளிப்பார்கள்.அவ்வப்போது சீறுமே6, 2024 : இந்த நாளில் தான் சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் பயணித்த போயிங் நிறுவனத்தின் ஸ்டார்லைனர் விண்கலத்தின் பயணம் திட்டமிடப்பட்டிருந்தது. வணிக ரீதியான விண்வெளி பயணத்தின் ஒரு பகுதியாக, ஸ்டார்லைனர் விண்கலத்திற்கான சோதனை ஓட்டம் இது என்பதால் வெறும் 8 நாட்கள் மட்டுமே பயணம் திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் விண்கலத்தை ஏவும் ராக்கெட்டில் இருக்கும் ஆக்சிஜன் வால்வில் பிரச்னை கண்டறியப்பட்டதால், இம்முயற்சி ஒத்திவைக்கப்பட்டது.


மே23, 2024 : ஸ்டார்லைனர் விண்கலத்தை இயக்கும் கருவிகள் அமைந்திருக்கும் சர்வீஸ் மாட்யூல் பகுதியில் ஹீலியம் வாயு கசிவு கண்டறியப்பட்டதாக நாசா அறிவித்தது. இதனால் விண்கலத்தை ஏவும் திட்டம் மீண்டும் தள்ளிப்போனது.

ஜூன் 2024 : திட்டமிடப்பட்ட ஸ்டார்லைனர் விண்கலத்தின் பயணம், ராக்கெட் ஏவப்படுவதற்கு சில நிமிடங்களுக்கு முன்னர் ரத்து செய்யப்பட்டு, மீண்டும் ஒத்திவைக்கப்பட்டது. கணினி மென்பொருளில் ஏற்பட்ட கோளாறு இதற்கு காரணமாகக் கூறப்பட்டது.பல கட்ட தாமதங்களுக்குப் பின்னர், ஃபுளோரிடாவின் கேப் கேனவெரல் விண்வெளி நிலையத்திலிருந்து ஸ்டார்லைனர் விண்கலம் விண்ணில் ஏவப்பட்டது. சுனிதா வில்லியம்ஸ் மற்றும் புட்ச் வில்மோர் வெறும் 8 நாட்கள் பயணத்திற்குப் பின்னர் ஜூன் 14—ஆம் தேதி பூமிக்கு திரும்ப திட்டமிடப்பட்டிருந்தது. ஸ்டார்லைனர் பயணத்தின் போது, ஹீலியம் வாயுக்கசிவு கண்டறியப்பட்டது. விண்கலத்தை சரியான திசையில் செலுத்தும் உந்துகருவியிலும் **(Thruster)** சில பிரச்னைகள் அச்சுறுத்தின. இருந்த போதிலும், வெற்றிகரமாக சர்வதேச விண்வெளி நிலையத்துடன் ஸ்டார்லைனர் விண்கலம் இணைக்கப்பட்டதாக நாசா அறிவித்தது.




சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஆகியோர் பூமிக்கு திரும்பும் பயணத்தை ஜூன் 18 வரை தள்ளி வைப்பதாக நாசா அறிவித்தது. ஸ்டார்லைனர் விண்கலத்தில் ஒன்றுக்கும் மேற்பட்ட ஹீலியம் வாயு கசிவு கண்டறியப்பட்டதாக இந்த அறிவிப்பு சுட்டிக்காட்டியது.இருவரையும் பூமிக்கு அழைத்துவர ஸ்டார்லைனர் விண்கலம் தகுதியானது தானா என்பது குறித்து கேள்வி எழுந்தது.

விண்வெளி வீரர்கள் பூமிக்கு திரும்புவதை மீண்டும் தள்ளி வைப்பதாக அறிவித்தது நாசா.





இதற்கிடையே விண்வெளி வீரர்கள் குழு ஸ்டார் லைனர் விண்கலத்தில் ஏற்பட்ட ஹீலியம் வாயு கசிவு மற்றும் உந்துக்கலன் கருவியின் பழுதை சரிசெய்யும் முயற்சியில் ஈடுபட்டனர்.

ஆகஸ்ட் 24, 2024: சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஸ்டார்லைனர் அல்லாத வேறு விண்கலம் மூலமாகத்தான் பூமிக்கு திரும்ப வேண்டும் என நாசா அறிவித்தது. இந்த திட்டம் 2025 ல் தான் நிறைவேற்ற சாத்தியம் இருப்பதாக அறிவிக்கப்பட்டது

செப்டம்பர்2024:ஸ்டார்லைனர் விண்கலம் விண்வெளி வீரர்களின்றி பூமியை வந்தடைந்தது.சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோரை அழைத்து வருவதற்கான மாற்றுத் திட்டம் செயல்படத் தொடங்கியது. இந்நாளில் சர்வதேச விண்வெளி நிலையத்தில் நாசா விண்வெளி வீரர் நிக் ஹாக் மற்றும் ரஷ்ய விண்வெளி வீரர் அலெக்சாண்டர் கோர்புனோவ் சர்வதேச விண்வெளி நிலையத்தை சென்றடைந்தனர். இவர்களை அழைத்துச் சென்றது ஸ்பேஸ் எக்ஸ் நிறுவனத்தின் டிராகன் விண்கலமாகும். க்ரூ9 என்றழைக்கப்பட்ட இந்த குழு விண்வெளிக்கு செல்லும் போது, இரண்டு இருக்கைகள் காலியான நிலையில் விண்கலம் பயணித்தது. இந்த இருக்கைகள் சுனிதா மற்றும் வில்மோருக்காக ஒதுக்கப்பட்டிருந்தன

அக்டோபர் 29,2024 : விண்வெளியில் இருந்தவாறே தீபாவளி பண்டிகையைக் கொண்டாடிய சுனிதா வில்லியம்ஸ், தமது தந்தையை நினைவு கூர்ந்து பூமியில் உள்ள அனைவருக்கும் தீபாவளி வாழ்த்துக்களை பகிர்ந்து கொண்டார்.



நவம்பர் 5,2024 : அமெரிக்க அதிபர் தேர்தலில் விண்வெளியில் இருந்தவாறே தனது வாக்கினை பதிவு செய்தார் சுனிதா வில்லியம்ஸ். பூமியிலிருந்து 400 கி.மீ. தொலைவில் பயணித்துக் கொண்டிருக்கும் சுனிதா வில்லியம்ஸ்—ன் வாக்கு மின்னணு முறையில் பதிவு செய்யப்பட்டது. இதற்கு முந்தைய காலங்களிலும் விண்வெளி வீரர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து பதிவு செய்துள்ளனர்.

டிசம்பர் 25, 2024: இந்த ஆண்டின் கிறிஸ்துமசை சுனிதா உள்ளிட்டோர் விண்வெளி நிலையத்திலிருந்தே கொண்டாடினர். அங்கிருந்து பூமியில் உள்ள தங்களின் அன்புக்குரியவர்களுக்கு கிறிஸ்துமஸ் வாழ்த்தையும் அவர்கள் பகிர்ந்து கொண்டனர்.

ஜனவரி,2025: மாதத்தின் நடுவே சுனிதா வில்லியம்ஸ் மற்றும் வில்மோர் ஸ்பேஸ் வாக் எனப்படும் விண்வெளி நடையில் ஈடுபட்டனர். சக விண்வெளி வீரரான நிக் ஹாகையும் உள்ளடக்கிய இந்த பயணம் சர்வதேச விண்வெளி நிலையத்தில் பராமரிப்பு பணிகளுக்கானதாக இருந்தது.விண்வெளியில் உள்ள வீரர்களை பரிமாற்றம் செய்வதற்காக க்ரூ10 விண்கலம் ஏவப்படுவதற்கு தயாரான நிலையில், சுனிதா வில்லியம்ஸ் உள்ளிட்டோர் பூமி திரும்புவதற்கான திட்டம் இறுதிக்கட்டத்தை எட்டியது.க்ரூ10 திட்டம் விண்கலம் ஏவப்படுவதற்கு 45 நிமிடங்களுக்கு முன்பு நிறுத்தி வைக்கப்பட்டது.

ஹைட்ராலிக் அமைப்பில் ஏற்பட்ட கோளாறு இதற்கு காரணமாக கூறப்பட்டது.புளோரிடாவில் உள்ள கென்னடி விண்வெளி மையத்திலிருந்து க்ரூ10 திட்டத்தின் கீழ் ஸ்பேஸ் எக்ஸ் டிராகன் விண்கலம் விண்வெளியில் ஏவப்பட்டது.க்ரூ10 குழுவினர் சென்ற விண்கலம் வெற்றிகரமாக சர்வதேச விண்வெளி நிலையத்துடன் இணைக்கப்பட்டது. இதன் பின்னர் எற்கெனவே விண்வெளியில் இருந்த குழுவினர், புதிய குழுவினரிடம் பணிகளை ஒப்படைத்தனர்.

மார்ச் 18,2025: க்ரூ9 விண்கலம் சர்வதேச விண்வெளி நிலையத்திலிருந்து புறப்பட்டு பூமியை நோக்கி பயணித்தது. இந்திய நேரப்படி மார்ச் 19ம் தேதி அதிகாலை 3.27 மணிக்கு ஃப்ளோரிடா கடற்பரப்பில் டிராகன் விண்கலம் தரையிறங்கியது.

# கருத்துப் ப(ா)டம்

நன்றி: தினமலர்





# சொல்றாங்க... சொல்றாங்க...



"சசிகலா, ஓ.பி.எஸ்ஸை அ.தி.மு.க.வில் இணைக்க வாய்ப்பே இல்லை!"

**எடப்பாடி பழனிசாமி**


(அந்தம்மா உங்களை முதலமைச்சர் ஆக்கின தருணத்தை நினைச்சு நினைச்சு பார்க்கும்படி சரியான பஞ்ச் கொடுத்துட்டீங்க!)



"திருப்பதி கோயிலில் இந்துக்களுக்கு மட்டுமே பணி!"

**சந்திரபாபு நாயுடு**

(மத உணர்வுகளுக்கு மதிப்புக் கொடுத்தாலே போதும். நாட்டில் எந்தத் தொல்லையும் வராது)



"அப்பா... இதுதான் கட்டப்பா"

**சத்யராஜை தந்தையிடம் அறிமுகப்படுத்திய சல்மான்**

(நல்லவேளை! நம்ம கட்டப்பா, நீ ஏன் மானை சுட்டப்பா? அதனால்தான் கெட்டப்பா! அப்படின்னு சொல்லாம விட்டாரப்பா!)



"கோழைக்கு பலமுறை சாவு, வீரனுக்கு ஒருமுறைதான் சாவு. யாரும் நான் இறந்துவிட்டால் வருத்தப்பட வேண்டாம். நான் கொண்டாட்டமாக வாழ்ந்து விட்டேன். என்னுடைய மரணமும் கொண்டாட்டமாக இருக்க வேண்டும். யாராவது என்னை மிஸ் செய்தால், என் சோசியல் மீடியாவை பாருங்கள், வாழ்க்கையே ஒரு கொண்டாட்டம் தான்!"

**ஷிஹான் ஹுசைனி**

(இதைவிடவா 'மரண' தத்துவம் சொல்ல முடியும்? பாஸ்! நீங்க ரொம்பவே மாஸ்!)



# அதிபர்

## யுக்ரேன் – ரஷ்யா போரை டிரம்ப் உறுதியளித்தபடி நிறுத்த முடியாதது ஏன்?

கடந்த செப்டம்பர் மாதம் நியூயார்க்கில் யுக்ரேன் அதிபர் ஸெலென்ஸ்கியை டொனால்ட் டிரம்ப் சந்தித்த போது, அவர் அமெரிக்கத் தேர்தலில் அதிபர் வேட்பாளராக இருந்தார் . யுக்ரேனில் போரை முன்கூட்டியே முடிவுக்கு கொண்டு வர முடியும் என்று டிரம்ப் அப்போது நம்பிக்கை தெரிவித்தார்.

அதிபராக பதவியேற்கும் முன்பே இதை தீர்த்து வைப்பேன்" என்று டிரம்ப் உறுதியளித்தார். இது, 2023 மே மாதத்தில், "அதிபராக பதவியேற்ற பிறகு முதல் 24 மணி நேரத்துக்குள் போரை நிறுத்தி விடுவேன்" என்ற பேச்சு அவர் அளித்திருந்த முந்தைய உறுதிப்பாட்டை விட ஒரு படி மேலானதாகும்.

தற்போது, டிரம்ப் அதிபராக பதவியேற்று இரண்டு மாதங்களுக்கும் மேலாகிவிட்டது.




"நாங்கள் வெற்றி பெற்றால், நாங்கள் போரை மிக விரைவாக முடிவுக்குக் கொண்டுவரப் போகிறோம் என நான் நினைக்கிறேன்" என்று டிரம்ப் கூறினார். அவர் குறிப்பிட்ட 'விரைவு' என்பதன் அர்த்தம் காலப்போக்கில் மாறிக்கொண்டே இருந்தது. முன்னதாக நடைபெற்ற ஒரு தொலைக்காட்சி விவாதத்தில், "நான்



வெள்ளை மாளிகையில், இந்த அளவுக்கு கடுமையான மற்றும் சிக்கலான மோதலை முடிவுக்கு கொண்டு வர முயற்சிப்பதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதை டிரம்ப் தற்போது உணரத் தொடங்கியிருக்கலாம். ஒரு நாளில் யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவந்துவிடலாம் என சொன்னது, 'சற்று கிண்டலாகவே' இருந்தது என அமெரிக்க அதிபர் ஒரு நேர்காணலில் ஏற்றுக் கொண்டார்.




ஜேம்ஸ் வாண்டேல், ஹன்னா சோர்னஸ்

டிரம்பின் குழுவினர் எதிர்பார்த்த வேகத்தில் முன்னேற்றம் ஏற்படாததற்கு 5 முக்கிய காரணங்கள் உள்ளன.

1. டிரம்பின் அதீத நம்பிக்கை

முதலில், டிரம்ப் தனது தனிப்பட்ட சந்திப்புகள் மற்றும் ராஜ தந்திரத்தின் மீது வைத்திருந்த நம்பிக்கை, தவறானதாக இருக்கக் கூடும்.மற்றொரு நாட்டின் தலைவருடன் அமர்ந்து நேரில் பேசி,



ஒப்பந்தத்துக்கு வருவதன் மூலம், எந்த சர்வதேச பிரச்னையையும் தீர்க்க முடியும் என்பதே அவரது நீண்ட நாள் நம்பிக்கையாக இருந்து வந்தது.டிரம்ப், பிப்ரவரி 12ஆம் தேதி ரஷ்ய அதிபர் விளாதிமிர் புதினுடன் முதலில் பேசினார். ஒன்றரை மணி நேரம் நீடித்த அந்த உரையாடலை அவர் “மிகவும் பயனுள்ளதாய் இருந்தது” என்று கூறினார். பிறகு, மார்ச் 18ஆம் தேதி மீண்டும் இருவரும் பேசினர். ஆனால், டிரம்ப் விரும்பிய 30 நாட்கள் இடைக்கால போர்நிறுத்தம் இந்த தொலைபேசி உரையாடல்களில் உறுதி செய்யப்படவில்லை என்பது தற்போது தெளிவாகிறது.

புதினிடமிருந்து அவர் பெற்ற ஒரே முக்கிய ஒப்பந்தம் என்னவென்றால்,




யுக்ரேனிய மின்சக்தி நிலையங்கள் மீது ரஷ்யா மேற்கொள்ளும் தாக்குதல்களை நிறுத்துவதாகக் கூறிய வாக்குறுதி தான். ஆனால், அந்த உரையாடல் முடிந்த சில மணி நேரங்களுக்குள் ரஷ்யா அந்த வாக்குறுதியை மீறியது என்று யுக்ரேன் குற்றம் சாட்டுகிறது.

2. அவசரம் காட்ட விரும்பாத புதின்

இரண்டாவதாக, ரஷ்ய அதிபர் அவசரப்பட விரும்பவில்லை என்று தெளிவாக கூறியுள்ளார். டிரம்ப் அவருடன் தொலைபேசியில் பேசியதற்கு ஒரு மாதம் கழித்து மட்டுமே, கடந்த வாரம் நடந்த செய்தியாளர் கூட்டத்தில் போர் நிறுத்தப் பேச்சுவார்த்தைகள் குறித்து முதன்முறையாக அவர் கருத்து தெரிவித்தார்.நீண்ட கால தீர்வைப் பற்றி பேசுவதற்கு முன்பு இடைக்கால போர் நிறுத்தத்தை கோரும் அமெரிக்காவின் இரண்டு



கட்ட திட்டத்தை தான் உறுதியாக எதிர்ப்பதாக புதின் வெளிப்படுத்தியுள்ளார்.

மாறாக, எந்தவொரு பேச்சுவார்த்தையும், “போரின் மூலக் காரணங்கள்” என்று அவர் கருதும் விஷயங்களை முதலில் தீர்க்க வேண்டும் என்பதில் புதின் உறுதியாக உள்ளார்.

நேட்டோ விரிவாக்கம் மற்றும் யுக்ரேன் ஒரு இறையாண்மை கொண்ட நாடாக இருப்பது ஆகியவை ஏதாவது ஒரு வகையில் ரஷ்யாவின் பாதுகாப்புக்கு ஆபத்து ஏற்படுத்துவதாக அவர் கூறுகிறார்.எந்தவொரு உடன்பாடும் ஒப்புக் கொள்ளப்படுவதற்கு முன்பு, ரஷ்யா முன்வைக்கும் முக்கியமான கேள்விகளுக்கும் நிபந்தனைகளுக்கும் பதிலளிக்க வேண்டுமென்றும் புதின் வலியுறுத்துகிறார்.

*3. அமெரிக்காவின் அணுகுமுறை*

மூன்றாவது, ஆரம்பத்தில் யுக்ரேன் மீது கவனம் செலுத்த வேண்டும் எனும் அமெரிக்காவின் திட்டம் தவறானதாக இருக்கலாம். ஏனென்றால், அமைதி ஒப்பந்தம் ஏற்படுவதற்கு தடையாக இருப்பது அதிபர் ஸெலென்ஸ்கி தான் என வெள்ளை மாளிகை நம்பியது. ஆனால், டிரம்பின் ஆட்சி தொடங்கிய பிறகு உலகின் அரசியல் சூழல் எவ்வளவு மாற்றமடைந்துள்ளது என்பதை யுக்ரேன் அரசு புரிந்து கொள்ள தாமதித்துவிட்டது என்று மேற்கத்திய ராஜ தந்திரிகள் கூறுகின்றனர்.



யுக்ரேன் மீதான அமெரிக்காவின் அழுத்தம், அதிபர் அலுவலகத்தில் நடந்த கடுமையான உரையாடலுக்கு வழிவகுத்தது. இதனால் அதிக நேரமும், முயற்சியும், அரசியல் மூலதனமும் வீணாகியது. அந்தச் சந்திப்பில் டிரம்ப் மற்றும் துணை அதிபர் ஜே.டி. வான்ஸ் ஆகியோர் யுக்ரேன் தலைவர் ஸெலென்ஸ்கியை கடுமையாக விமர்சித்தனர்.

இதனால் ஐரோப்பா மற்றும் அமெரிக்கா இடையே மீண்டும் முரண்பாடுகள் ஏற்பட்டன. அட்லாண்டிக் கடலுக்கு இருபுறமும் உள்ள நாடுகள் ஒன்றுக்கொன்று எதிராக மாறின. இதுவும் ஒரு முக்கிய ராஜ்ஜீய சிக்கலாகி, அதை சரி செய்ய நேரம் எடுத்தது. அந்த நேரத்தில், விளாதிமிர் புதின் அமைதியாக இருந்து, எல்லாவற்றையும் பார்த்து ரசித்து, தன்னுடைய தருணத்துக்காக காத்திருந்தார்.

*4. ரஷ்யா — யுக்ரேன் நேரடியாக பேசாமல் இருப்பது*

நான்காவதாக, இந்த போரின் மிகுந்த சிக்கலான தன்மை, எந்தவொரு தீர்வையும் எளிதாக்கவில்லை. யுக்ரேன் முதலில் வழங்கிய யோசனை, வான்வழித் தாக்குதல் மற்றும் கடல் வழித் தாக்குதலுக்கான ஒரு இடைக்கால போர் நிறுத்தம் என்பதாக இருந்தது. இது கண்காணிக்க எளிதாக இருக்கும் என்பதே அவர்களின் எண்ணமாக இருந்தது. ஆனால், கடந்த வாரம் ஜெட்டாவில் நடந்த பேச்சுவார்த்தையில், கிழக்குப் பகுதியிலுள்ள 1,200 கிலோமீட்டருக்கும் அதிகமான முன்னணிப் போர் பகுதியையும் உட்படுத்தி உடனடி போர் நிறுத்தம் அமலாக்கப்பட வேண்டும் என்று அமெரிக்கா வலியுறுத்தியது.

இதனால், அந்த போர் நிறுத்தத்தை கண்காணிக்க வேண்டிய அமைப்புகளுக்கு இன்னும் கடினமாகிவிட்டது. இதை விளாதிமிர் புதின் உடனே நிராகரித்தார். ஆனால், மின்சக்தி




VARSHA™
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY Tamil NEW YEAR
HAPPY TAMIL
NEW YEAR
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு




உள்கட்டமைப்புகள் மீதான தாக்குதல்கள் நிறுத்தப்படும் என்ற அந்த எளிமையான முன்மொழிவுக்கு புதின் ஒப்புக்கொண்டிருந்தாலும், அதிலும் பல சிக்கல்கள் இல்லாமல் இல்லை.

இந்த முன்மொழிவின் செயல்பாடுகள் பற்றிய விவாதங்களே, சவுதி அரேபியாவில் இன்று (திங்கட்கிழமை )நடைபெறவுள்ள தொழில்நுட்ப விவாதங்களில் முக்கிய இடம் பிடிக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.ராணுவ மற்றும் ஆற்றல் துறையின் நிபுணர்கள், அணுசக்தி உற்பத்தி நிலையங்கள் உட்பட பாதுகாப்பு வழங்க வேண்டிய மின் நிலையங்களின் விரிவான பட்டியலை தயாரிக்க உள்ளனர்.

அவர்கள் எந்த ஆயுதங்களையும் பயன்படுத்தக் கூடாது என்பதற்கும் ஒருமித்த முடிவுக்கு வர முயற்சி செய்கிறார்கள். ஆனால், ஆற்றல் உள்கட்டமைப்புக்கும் பிற பொதுமக்கள் வசதிகளுக்கும் இடையிலான எல்லையை வரையறுப்பது சுலபமல்ல. அதனால் அந்த விவாதம் கூட சிறிது நேரம் எடுக்கும். முக்கியமாக, யுக்ரேன் மற்றும் ரஷ்யா நேரடியாக பேசுவதில்லை. இருவரும் தனித்தனியாக அமெரிக்காவுடன் மட்டுமே பேச்சுவார்த்தை நடத்தி வருகின்றனர். அமெரிக்கா இருதரப்புக்கும் இடையே பாலமாக செயல்படுகிறது. இதுவும் கால தாமதத்திற்கு காரணமாகிறது.

5. பொருளாதார நன்மைகளில் அதிக கவனம் செலுத்தும் அமெரிக்கா

ஐந்தாவது, போர் நிறுத்தத்தின் மூலம் கிடைக்கும் பொருளாதார நன்மைகளில் அமெரிக்கா அதிகமாக கவனம் செலுத்துவதாகும். டிரம்ப், அமெரிக்க நிறுவனங்களுக்கு யுக்ரேனின் முக்கியமான கனிம வளங்களை பெற வாய்ப்பு அளிக்கும் ஒரு ஒப்பந்தத்தை உருவாக்க முயற்சித்தார். யுக்ரேனின் எதிர்காலத்தில் அமெரிக்கா முதலீடு செய்வதாக சிலர் இதைப் பார்த்தனர். ஆனால், மற்றவர்கள் இதை நாட்டின் இயற்கை வளங்களை மிரட்டி லாபம் பெறுவது போல இந்த அணுகுமுறையை கருதினர்.



ஆரம்பத்தில், எதிர்காலத்தில் ரஷ்யா மீண்டும் ஆக்கிரமிப்பதைத் தடுக்கும் வகையில், யுக்ரேனுக்கு பாதுகாப்பு உத்தரவாதம் வழங்கினால்தான் ஒப்பந்தத்தை ஏற்றுக்கொள்வேன் என்று அதிபர் செலென்ஸ்கி கூறினார். ஆனால் வெள்ளை மாளிகை அதனை நிராகரித்து, அமெரிக்க சுரங்க நிறுவனங்கள் மற்றும் தொழிலாளர்கள் யுக்ரேனில் இருப்பதே பாதுகாப்பை உறுதிப்படுத்துவதாக இருக்கும் என தெரிவித்தது. இறுதியில், ஸெலென்ஸ்கி தனது நிலைப்பாட்டை மாற்றி , பாதுகாப்பு உத்தரவாதம் இல்லாமலேயே கனிம ஒப்பந்தத்துக்கு ஒப்புதல் அளிக்க தயாராகிவிட்டார். ஆனாலும், அமெரிக்கா இன்னும் அந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திடவில்லை.யுக்ரேனிய அணுமின் நிலையங்களுக்கான அணுகல் அல்லது உரிமை பெறுவதற்கான வாய்ப்பையும் சேர்த்து மீண்டும் விதிமுறைகளை மேம்படுத்தலாம் என்று அமெரிக்கா நம்புகிறது.

போர்களை முடிவுக்கு கொண்டு வருவது கடுமையானதும், அதிக நேரம் எடுக்கும் செயல்முறையாகவும் இருக்கும். டிரம்பின் அழுத்தம் இல்லாமல், போர் நிறுத்த விஷயத்தில் இந்த நிலையை அடைந்திருக்க முடியாது. ஆனால், அவர் நினைத்ததுபோல் முன்னேற்றம் வேகமாகவோ எளிதானதாகவோ இல்லை.2018 டிசம்பரில், அதிபர் பதவிக்கு பரப்புரை செய்துகொண்டு இருந்த போது, விளாதிமிர் புதினுடன் நடக்கும் பேச்சுவார்த்தை எளிதாக இருக்கும் என ஸெலென்ஸ்கி கூறினார்.

“மிகவும் எளிமையான முறையில் பேச வேண்டும்,” என்று அவர் யுக்ரேனிய பத்திரிகையாளர் டிமிட்ரோ கார்டனிடம் கூறினார். “உங்களுக்கு என்ன வேண்டும்? உங்கள் நிபந்தனைகள் என்ன?” எனும் கேள்விக்கு, “இதுதான் எங்களுடைய நிலைப்பாடு” என்று நான் பதிலளிப்பேன். பிறகு, இருவருக்கும் பொதுவான ஒரு ஒப்பந்தத்துக்கு வரலாம்.” என்றார். ஆனால், கடந்த இரண்டு மாதங்களில் நடந்த நிகழ்வுகளைப் பார்த்தால், அது ஸெலென்ஸ்கி நினைத்ததைவிட மேலும் கடினமாக இருக்கலாம்.

# கடையூரில் காட்டினாள் கடைக்கண்!

அனைத்தையும் அறிவாள் ஆயினும்
அனைவராலும் அறிய முடியாதவள்!
அறிந்திட முனையும் அன்பரிடத்தில்
அறியாக் குழந்தையெனத் தெரிவாள்!

மின்னலாயிரம் ஒன்றானத் தோற்றம்!
கன்னல்மொழியோ இடியாய்க் காட்டும்!
முன்னும்பின்னும் எங்குமாய் நிற்பவள்!
முன்றிலாடும் தென்றலாய் வருபவள்!

தனம் இனமென்ற பலவுந்தருவாள்!
தினம் தளர்வென்பதை அறிந்திடாத
மனம் தருவாளென்ற அப்பட்டருக்கு
கனமெனக் கடைக்கண் காட்டியவள்!

அற்புத வடிவானவளின் அவதாரத்தை
அற்பத்தில் திளைப்பவர் காண்பரோ?
அவளைக் காண்பதற் கோடிவரினும்கூட
அவளருளின்றி காண்பதற்கு வழியிலை!

புல்பூண்டற்ற பாலை நிலத்திலும்
நல்முத்து விளை ஆழ்கடலிலும்
கடைத்தேற்றக் காத்திருக்கும் அபிராமி
கடையூரில் காட்டினாள் கடைக்கண்!

எங்கும் வியாபித்த அப்பேருருவைக்
எங்கேனும் நாம்தேடிக் காணும்வரை
அசையுருவிலும் அசையா உருவிலும்
அபிராமி வீற்றிருப்பாள் மென்முறுவலில்!

**கொற்றவன்**



# தமிழே

## மொழியும் உரிமையும்

மொழி, மனித குல வரலாற்றின் பதிவு ஊடகம். வாழ்வின் கருவூலம்; நிலம், பொழுது, இயற்கை ஆகியவற்றின் ஆவணம்; மனித குலத்திற்கு இயற்கை கற்றுத் தந்த, மனித குலம் இயற்கையிடம் கற்றுக்கொண்ட அனுபவப் பாடங்களின் கல்விக்கூடம்; மூளைக்கும் மனித மனத்துக்கும் ஆன இணைப்பு.

‘உலகம் என்பது உயர்ந்தோர் மேற்றே’ என்பதால், மனிதர்களை உயர்ந்தோர் ஆக்குவது மொழி. ஆகவே மொழிதான் பூமியை உலகமாக வளர்த்திருக்கிறது. மொழி இல்லாமல் பேச்சு (வழக்கு) இல்லை. ‘வழக்கு எனப்படுவது உயர்ந்தோர் மேற்றே நிகழ்ச்சி அவர் கட்டு ஆகலான’ என்பது தொல்காப்பியம். மொழி , உரிமையோடு வாழ நம்மை வளர்க்கிறது. வளர்ப்பதால் மொழி தாயாகிறது; தாய்மொழி ஆகிறது




பரிணாம வளர்ச்சியில் விலங்கை மனிதராக மாற்றியிருப்பது மொழி. பறவை, விலங்குகளைப் போல அச்சத்தில் குரல் எழுப்பவும் அச்சுறுத்தவும் பயன்பட்ட ஒலியை மொழியாக்கிக் கொண்ட உயிரினம், மனிதகுலம் ஆகியிருக்கிறது. நெருப்பைப் போல சக்கரத்தைப் போல மனிதகுல வரலாற்றில் மாபெரும் மாற்றங்களைத் தொடங்கிவைத்துத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. மொழி. அச்சத்திலிருந்து விடுதலை பெறவும் உரிமை பெறவும் தன்மானத்தோடு வாழவும் மக்களுக்கு எடுத்துச் சொல்லப் பயன்படுகிறது மொழி. ஆனால் மொழி விடுதலை பெறவும் உரிமை பெறவும் மொழியின் தன்மானம் காப்பாற்றப்படவும் அந்த மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவர்கள் போராடவேண்டி இருக்கிறது.

உயிரோடு இருப்பது வேறு; வாழ்வது வேறு. உயிரோடு இருக்க உணவு மட்டும் போதும்; வாழ்வதற்கு உரிமையும் வேண்டும். வாழ்வதற்கான உரிமை சமுதாயம் பண்படும் நிலைக்கு ஏற்ப மேம்படும். பிறப்புரிமை, வாழ்வுரிமை, இயற்கை உரிமை, அடிப்படை உரிமை என்றெல்லாம் உரிமையை வகைப்படுத்துகிறார்கள். மக்கள்



# தமிழே

விட்டுக் கொடுக்க முடியாத, விட்டுக்கொடுக்கக் கூடாத உரிமைகள் அடிப்படை உரிமைகள் ஆகும். சுதந்திரமும் தன்மானமும் இழக்கக் கூடாத உரிமைகள்.மனித உரிமைகள் இயல்பானவை. அவற்றை யாரும் யாருக்கும் வழங்கியதாக உரிமை கொண்டாட முடியாது. அதைப்போலவே யாரும் இன்னொருவர் உரிமையைப் பறிக்கவும் உரிமை பெற்றவர் இல்லை. ஒருவர் வாழ்வதற்கு உரிமை இருக்கிறது. ஆனால் அடுத்தவர் உயிரைச் சாகடித்துவிட்டு வாழ உரிமை இல்லை.

மற்ற உயிரினங்களின் உரிமை என்பது மனிதர்களால் தீர்மானிக்கப்படுவதாக இருக்கிறது. மனிதர்களின் உரிமையைக் காப்பாற்ற மொழி தேவைப்படுகிறது.




‘மனித உரிமைகள் குறித்த பதிவுகளில் மிகவும் தொன்மையானது பாரசீகப் பேரரசன் சைரஸ் கி.மு. 539 — இல் வெளியிட்ட நோக்கப் பிரகடனம் ஆகும். பின்பு அசோகர் காலத்திய (கி.மு. 272— 231) கல்வெட்டுகளும் அதன்பின் முகமது நபியால் கி.பி. 622 — இல் உருவாக்கப்பட்ட மதீனாவின் அரசியல் சட்டமும் கி.பி. 1215 —ஆம் ஆண்டில் ஆங்கிலேயர் வெளியிட்ட ‘சுதந்திரத்துக்கான பெரும் பட்டயமும்‘ (மேக்ன கார்ட்டா லிபர்ட்ரேட்டம்) குறிப்பிடத்தக்கவை.

முனைவர்
## ம. இராசேந்திரன்

ஆனால் மனித உரிமைகள் பற்றிய விளக்கத்திற்குப் பெரிதும் அடிப்படையாக இருப்பது கி.பி. 1525— ஆம் ஆண்டில் விவசாயிகளின் கோரிக்கைகள் தொடர்பில் செருமனியில் வெளியிடப்பட்ட ‘கருப்புக் காட்டின் பன்னிரண்டு அம்சங்கள்’ (ட்வெல்வ் ஆர்ட்டிக்கில்ஸ் ஆஃப் தி பிளாக் ஃபாரெட்ஸ்) என்னும் ஆவணமேயாகும். இதுவே மனித உரிமை தொடர்பான ஐரோப்பாவின் முதல் பதிவு எனக் கருதப்படுகிறது.




உலகப் போர்களைத் தொடர்ந்து ஐக்கிய நாடுகள் அவையும் அதன் உறுப்பு நாடுகளும் உருவாக்கிய சட்ட அமைப்புகளே இன்றைய மனித உரிமைகள் சட்டமாகக் கருதப்படுகிறது. தேவை கருதி ஐக்கிய நாடுகள் அவையில் இடம்பெறும் உறுப்பு நாடுகள் அந்தந்த நாட்டின் அரசமைப்புச் சட்டத்திற்கேற்ப வரையறையையும் வகைப்பாட்டையும் தெளிவுபடுத்தியுள்ளன. அவற்றின்படி மனித உரிமைகளின் பட்டியலில்,

வாழும் உரிமை, உணவுக்கான உரிமை, நீருக்கான உரிமை, கருத்து வெளிப்பாட்டுச் சுதந்திரம், பேச்சுரிமை, சிந்தனைச் சுதந்திரம், ஊடகச் சுதந்திரம், தகவல் சுதந்திரம், சமயச் சுதந்திரம், அடிமையாகா உரிமை, சித்தரவதைக்கு உட்படா உரிமை, தன்னாட்சி உரிமை, சுயநிர்ணயம், ஆட்சியில் பங்குகொள்ள உரிமை, நேர்மையான விசாரணைக்கான உரிமை, நகர்வு சுதந்திரம், கூடல் சுதந்திரம் , குழுமச் சுதந்திரம், கல்வி உரிமை, பண்பாட்டு உரிமை, சொத்துரிமம், தனி மனித உரிமை ஆகியவற்றோடு மொழி உரிமையும் இடம்பெற்றுள்ளது.

செயற்கை நுண்ணறிவு, மொழி குறித்த

கருத்தோட்டங்களை மாற்றிக்கொண்டு வருகிறது. இயற்கை மொழி முறையாக்கம் என்பது மனிதர் பயன்படுத்தும் மொழியைக் கணினிக்கும் புரியவைக்க ஏதுவாக்கும் கணினியியல் நுட்பம் ஆகும். மொழியின் கட்டமைப்பைப் பகுத்தாய்ந்து கணித்தலுக்கு ஏற்றவாறு அமைப்பது இயற்கை மொழி முறையாக்கத்தின் ஒரு முக்கிய செயற்பாடு ஆகும்

மொழிகளுக்கு மரணமிலாப் பெரு வாழ்வைத் தற்காலத் தொழில் நுட்பம் வழங்கத் தொடங்கிவிட்டது. இணையத்தில் ஒரு மொழி சேர்ந்துவிட்டால் அந்த மொழியைப் பேசுபவர்கள் குறைந்தாலும் அந்த மொழியின் வாழ்வை இனி இணையம் காப்பாற்றும்.அடுத்து மனிதர்கள் வாழ்வதற்குத் தேவைப்படும் மொழிகளின் எண்ணிக்கையையும் தொழில் நுட்பம் குறைத்துக்கொண்டு வருகிறது. ஒரு காலத்தில் கைகளின் எண்ணிக்கை கொண்டு வலிமை கணக்கிடப்பட்டது. தலைகளின் எண்ணிக்கை கொண்டு ஆளுமை புகழப்பட்டது. எத்தனை மொழி தெரியும் என்பதைக்கொண்டு அறிவு எடை போடப்பட்டது. ஆனால் இப்போதுள்ள தொழில் நுட்பம் நிலைமையை மாற்றிப் போட்டுக் காட்டுகிறது.

இப்படியான தொழில் நுட்பம் எதுவும் இல்லாத காலத்திலேயே தமிழ்த் தாத்தா உ.வே. சா., தமிழ்மொழி மட்டும் தெரிந்தவராக இருந்தும் உலகப் புகழ் பெற்றிருக்கிறார். அவருக்கு ஆங்கிலம் தெரியாது. ஆனாலும் 1906 —ஆம் ஆண்டு சென்னை வைஸ்ராய் மிண்டோ மகாமகோபாத்யாய பட்டம் வழங்கியிருக்கிறார். 31/1/1917 —இல் காசி பாரத தர்ம மகா மண்டல சபை திராவிட வித்யா பூஷனம் வழங்கிச் சிறப்பித்திருக்கிறது. அவருடைய பிறந்த நாளைத்தான் தமிழக முதல்வர் தமிழிலக்கிய மறுமலர்ச்சி நாள் என்று அறிவித்திருக்கிறார்.

தமிழும் ஆங்கிலமும் மட்டும் படித்தவர்தான் முன்னாள் குடியரசுத் தலைவர் அப்துல் கலாம். முன்னாள் இந்நாள் இஸ்ரோ விஞ்ஞானிகள் பலரும் பள்ளிகளில் இருமொழிக் கொள்கையில் படித்தவர்கள்தாம். ஆனால், இப்போது இரண்டு மொழி கூடத் தேவையில்லை என்று தொழில் நுட்பம் வந்திருக்கிறது. ஒரு மொழி தெரிந்தால் போதும். அதுவும் தாய்மொழி மட்டும் தெரிந்தால் போதும். ஆனால் அந்த மொழியில் பிழை இல்லாமல் பேசவும் எழுதவும் தெரிந்திருக்க வேண்டும். தனக்கு என்ன தேவை என்பதைத் தெளிவாகவும் சுருக்கமாகவும் கேட்கத் தெரிந்திருக்க வேண்டும். சாட் ஜி பிடி 90 முதல் 100 மொழிகளையும்,



டெஸ்க் டிபீல் 32 மொழிகளையும் கூகுள் 133 மொழிகளையும் தெரிந்து வைத்திருக்கின்றன. கூகுள் மொழிபெயர்ப்புச் செயலியைப் பயன்படுத்தத் தெரிந்தவரை 133 மொழிகள் தெரிந்தவராகத் தொழில் நுட்பம் ஆக்குகிறது. அவரால் 133 மொழிகளில் இருப்பவற்றை அவர் தாய்மொழியில் தெரிந்துகொள்ள முடிகிறது.ஹேஜென் செயலி மூலம் தமிழ் மட்டும் தெரிந்த ஒருவரை இந்தியில் மட்டுமில்லை பல மொழிகளிலும் பேசுபவராக, அதற்கேற்ற உதட்டசைவுகளோடு பேசுபவராகக் காட்ட முடிகிறது. பாரதப் பிரதமர் தமிழுக்கேற்ற உதட்டசைவுகளோடு பேசுவதைத் தொலைக்காட்சியில் பார்க்க முடிகிறது.

இப்படி வளர்ந்து வரும் தொழில்நுட்பக் காலத்தில் வாழ்ந்து கொண்டு கடந்த காலச் சிந்தனை ஆதிக்கத்தில் மொழிச்சுமைகளை மாணவர்கள் தலையில் ஏற்றுவதும் மொழி அரசியல் அதிகாரத்தால் மற்றவர் தாய் மொழிகளின் வாழ்வுரிமையைப் பறிக்க நினைப்பதும் மொழி உரிமையை மீறுவது மட்டுமல்ல, மனித உரிமை மீறலும் ஆகிறது.

மொழி இருப்பதைக் காக்கவும், எதிர்க்கவும், வருவதை உருவாக்கவும் மாற்றவும் வரலாறு முழுதும் பயன்பட்டு வந்திருக்கிறது ; வருகிறது. எனவே, அரசு உருவாக்கத்திலும் அதை நிலைநிறுத்தலிலும் மொழிச் சிக்கலை அந்தந்த நாடு எதிர்கொண்டு தீர்வு காண வேண்டி இருக்கும்.

பன்மொழிச் சமுதாயத்தில் ஒரு குறிப்பிட்ட மொழியின் ஆதிக்கத்திலிருந்து மற்ற மொழிகள் விடுபடவும் தத்தம் உரிமைகளை நிலைநிறுத்தவும் அந்தந்த மொழிக்காரர்கள் தொழில் நுட்பக் காலத்திலும் தொடர்ந்து போராட வேண்டியிருக்கிறது.

பிறப்பிலிருந்து இறப்பு வரை மனித வாழ்க்கையின் அனைத்து நிலைகளிலும் மொழிக்கு இடம் உண்டு. ஒரு நீதி, நிதி, அரசியல், கல்வி, பண்பாடு, சடங்கு,சமூகத் தொடர்பு, சுதந்திரம், தன்மானம் என்று அங்கு இங்கு எனாதபடி மக்கள் வாழ்க்கையில் எல்லா நிலைகளிலும் மொழியின் ஆளுமையும் செல்வாக்கும் இடம் பெறும்.

எனவே, மொழி உரிமை என்பது அந்த மொழி பேசும் மக்களின் உரிமையாக இருக்கிறது. எனவே அடிப்படையில் மனித உரிமை என்பது அவர் பேசும் மொழி உரிமையாகவே இருக்கிறது. ஆகவே மனித உரிமைகள் குறித்து சிந்திக்கும் அனைவரும் மொழி உரிமை பற்றியும் கவலையோடு சிந்திக்கிறார்கள். உலகத் தாய்மொழி நாளில் மொழியின் உரிமை பற்றியும் சிந்திப்போம்.


VARSHA™
Ready to Cook
Made with Quality Natural Products
Idli / Dosa Wet Mix
இட்லி / தோசை மாவு
ఇడ్లీ దోస పిండి
ಇಡ್ಲಿ ದೋಸೆ ಹಿಟ್ಟು
ഇഡ്ഡലി / ദോശ മാവ്
CRISPY DOSA * SOFT & FLUFFY IDLI
100% Pure Vegetarian
ઈડલી ડોસા નું ખીરું
इडली/ दोसा आटा

நினைவு

# அழியும் அரசியல்

## அரசியல்... அன்றும் இன்றும்!

இந்திய நாட்டின் அரசியல் என்பது சுதந்திரப் போராட்டத்திலிருந்து தொடங்குகிறது. அந்தக் காலத்தில் ஆங்கிலேயர்கள் இந்தியா மட்டுமல்லாமல், இலங்கை, பர்மா, மலேயா, சிங்கப்பூர், தாய்லாந்து ஆகிய நாடுகளைப் பிடித்து ஆளத் தொடங்கியிருந்தனர்.

அப்போது இந்தியா ஒன்றாக இல்லை. 56 தேசங்களாகப் பிரிந்து கிடந்தது. வணிகம் செய்ய வந்த பிரிட்டிஷ் கிழக்கிந்திய கம்பெனி இந்தியர்களின் ஒற்றுமையின்மையைப் பயன்படுத்தி, அவர்களை அடிமைப்படுத்தி ஆட்சி செய்யத் தொடங்கினர். குறுநில மன்னர்களும், நிலக்கிழார்களும், ஜமீன்தார்களும் எளிதாக ஆங்கிலேயரிடம் சரணடைந்தனர்.

தென்னாப்பிரிக்காவிலிருந்து இந்தியாவுக்கு வந்த காந்தியார் ஆங்கிலேயரின் அடக்குமுறைகளைக் கண்டு வெகுண்டெழுந்தார். தாய்நாட்டைக் காக்க இளைஞர்களை அறைகூவி அழைத்தார். அவரது அகிம்சைக் கொள்கையால் கவரப்பட்டு இளைஞர்களும் தம் உடல், பொருள், உயிரை அர்ப்பணித்திட அவர் பின்திரண்டனர்.

இதே காலகட்டத்தில் தீவிரவாத இளைஞர்கள் வன்முறைகளில் இறங்கினர். வெள்ளையர்கள் நடத்திய நாடாளுமன்றத்தில் குண்டு வீசிய பகத்சிங், ராஜகுரு, சுகதேவ், ஆஷ் துரையைச் சுட்டு வீழ்த்திய வாஞ்சிநாதன் போன்று எண்ணற்ற இளைஞர்களைக் கூறலாம். இவர்களுடைய நோக்கம் பணம், பதவி இல்லை. தேசத்தை விடுவிப்பதே நோக்கமாக இருந்தது. அதற்காக எல்லாவற்றையும் இழக்கத் தயாராக இருந்தனர்.இன்று அரசியல் எப்படி இருக்கிறது? எங்கே சென்றால் பணமும், பதவியும் கிடைக்கும் என்று கணக்குப் போட்டு கட்சியில் சேர்கிறார்கள். அல்லது கட்சியைத் தொடங்குகின்றனர். கட்சியைத் தொடங்கும் போதே முதலமைச்சர் நாற்காலியைத் தவிர, வேறு எதுவும் கண்ணுக்குத் தெரிவது இல்லை.




அந்தக் காலத்தில் மக்களுக்குச் சேவை செய்யவே அரசியலுக்கு வந்தனர். மக்களிடம் சென்று, மக்களிடம் கற்றுக் கொண்டு, மக்களுக்குப் பணியாற்றுவதே அரசியல் என்று அரசியல் விற்பன்னர்கள் கூறினர். இப்போது அதையெல்லாம் எடுத்துக் கூற யாரும் இல்லை. சொன்னாலும் கேட்பதற்கு எவரும் இல்லை. இன்றைய அரசியல்வாதிகள் மக்களைப் பற்றிக் கவலைப்படுவது இல்லை. மக்களிடம் போவதும் இல்லை; மக்களை மதிப்பதும் இல்லை; தேடிவரும் மக்களைச் சந்திப்பதும் இல்லை. வாக்காளர்களைப் பற்றிக் கவலைப்படாமல் வாக்குகளைப் பெறுவதற்கென வியூகம் வகுத்திட

**A leader is best when people barely know he exists, when his work is done, his aim fulfilled, they will say: we did it ourselves.**

—LAO TZU

# நாகரிகம்

நிபுணர்களை ஏற்பாடு செய்து கொள்கின்றனர். மக்களின் வாக்குகளைப் பெறுவதே இவர்களின் நோக்கமாகும். இவர்களுக்குக் கோடிக்கணக்கில் ஊதியம் வழங்கவும், வாக்காளர்களுக்குப் பணம் செலவு செய்யவும் அரசியல் கட்சிகள் தயாராக இருக்கின்றன. எந்தக் கட்சியும் தனித்து நிற்கும் துணிச்சலைப் பெறவில்லை. கூட்டணிக்காக ரகசியமாக மற்ற கட்சிகளுடன் பேரம் பேசுகின்றனர். இந்தப் பேரத்தில் பணமும், இடங்களும் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. பெரும்பாலான கட்சிகளுக்கு கொள்கை என்பதே இல்லை. எப்படியாவது வெற்றிபெற வேண்டும். இது ஒன்றே பொதுவான கொள்கையாகும்.

மக்களாட்சி என்பது என்ன? "மக்களால் மக்களுக்காக நடத்தப்பெறும் அரசாங்கம்' என்னும் வரைவிலக்கணம் கொண்டது. மக்களால் மக்களுக்காக மக்களே நடத்தும் ஆட்சி மக்களாட்சி என்று அமெரிக்க முன்னாள் அதிபர் ஆபிரகாம் லிங்கன் மக்களாட்சிக்கு வரையறை கூறினார். உலகில் பெரும்பாலான நாடுகளில் இந்த முறையே செயல்படுத்தப்படுகிறது. பொதுவாக ஒரு நாட்டின் மக்கள் தங்களின் கருத்துகளைத் தேர்தலின்





உதயை மு. வீரையன்

மூலம் பதிவு செய்து தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பர். தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகள் தனியாகவோ அல்லது கூட்டாகவோ ஆட்சி செய்வர். பழங்கால கிரேக்க, ரோமானிய அரசுகளில் மக்களாட்சிக் கொள்கை பின்பற்றப்பட்டது. மக்களாட்சி என்பது ஏதென்ஸ் பாரம்பரிய நகரத்தில் உள்ள தத்துவச் சிந்தனையைக் குறிக்கப் பயன்படுத்தப்பட்டது. ஏதென்ஸ் நகர மக்கள் அனைவரும் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர்.




இடைக்காலத்தில் மக்களாட்சியில் சில இடர்ப்பாடுகள் ஏற்பட்டன. ஆனால் அமெரிக்க விடுதலைப் போர், பிரெஞ்சுப் புரட்சி, ரஷியப் புரட்சி மற்றும் இந்தியச் சுதந்திரப் போர் ஆகியவை மன்னராட்சிக்கு மாற்றாக, மக்களாட்சி என்ற புதிய வடிவத்துக்குச் செயல்வடிவம் கொடுத்தன. இதன் அடிப்படையில் உலகில் பல நாடுகள் மக்களாட்சியை ஏற்றுக் கொண்டன.

சோழர்கள் காலத்தில் குடவோலை முறை மூலம் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுத்து நிர்வாகம் செய்யும் ஊராட்சி முறை கி.பி. 9}ஆம் நூற்றாண்டு முதல் கி.பி. 16—ஆம் நூற்றாண்டு வரை நடைமுறையில் இருந்தது. இதற்கான ஆதாரம் முதலாம் பராந்தக சோழன் கால கல்வெட்டில் இருக்கிறது.





உத்திரமேரூர் கல்வெட்டில் இந்தக் குடவோலை முறை பற்றி அறிய முடிகிறது. இதில் ஒருவர் வேட்பாளராக நிற்பதற்குப் பல தகுதிகளைப் பெற்றிருக்க வேண்டும். கிராமத்தில் பகுதி வாரியாக மக்கள் கூடி தகுதியான உறுப்பினர்களின் பெயர்களை ஓலைச் சுவடிகளில் எழுதுவார்கள். பிறகு அதை மொத்தமாகக் கட்டி ஒரு பானையில் இட்டுக் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுப்பார்கள்.

இந்திய வரலாற்றில் முதன் முதலில் குடியுரிமை மற்றும் வாக்குச் சீட்டு ஆகியவற்றை அறிமுகம் செய்தவன் முதலாம் பராந்தக சோழன் ஆவான். சோழர் காலத்தில் மக்கள் பிரதிநிதியைத் தேர்ந்தெடுத்த முறை, இன்றைய மக்களாட்சி முறைக்கு முன்னோடி என்று சொல்லலாம்.

கிராமங்கள் பல வாரியங்களாகப் பிரிக்கப்பட்டு ஆட்சி செய்யப்பட்டன. சம்வத்சர வாரியம், தோட்ட வாரியம், ஏரி வாரியம், பஞ்ச வாரியம், பொன் வாரியம் எனப் பிரிக்கப்பட்டிருந்தன. இந்தக் குழுவில் ஒருவர் ஏதேனும் குற்றத்தில் ஈடுபட்டதாகக் கண்டறியப்பட்டால் அவர் உடனடியாக நீக்கப்படுவார்.

சோழ மன்னர்களின் ஆட்சிச் சிறப்புக்கும், நாட்டு மக்கள் பயன்பெற்று அமைதியாக வாழ்ந்தமைக்கும் முதற்காரணம், அக்காலத்தில் ஊர்தோறும் நிலைபெற்றிருந்த ஊராட்சி மன்றங்களின் தன்னலமற்ற தொண்டுதான். ஊர் சபைகள் பொறுப்புடன் அறநெறி பிறழாமல் நடுநிலைமையுடன் கடமையை நிறைவேற்றி வந்ததால், அச்சபைகள் மீது மக்கள் பெருமதிப்பும், நம்பிக்கையும் வைத்து அவற்றின் முடிவுகளை ஏற்றுக் கொண்டு கீழ்ப்படிந்து நடந்து வந்தனர் என்று வரலாற்று ஆராய்ச்சியாளர்கள் பதிவு செய்துள்ளனர்.




மன்னர்களின் ஆட்சிக் காலத்தில் மக்கள் அடங்கிக் கிடந்தனர். காரணம், மன்னர்களைக் கடவுளின் அவதாரமாக எண்ணியிருந்தனர். அதனால்தான், “மன்னன் உயிர்த்தே மலர்தலை உலகம்‘ என்று புலவர்கள் பாடினர். அரசர்களின் ஆதிக்கத்திலிருந்து விடுதலை பெற வேண்டியே “மக்களாட்சி’ உருவாக்கப்பட்டது.

ஆனால், காலம் செல்லச் செல்ல மக்களாட்சியில் அமைச்சர்களே அரசர்களைப் போல ஆதிக்கம் செலுத்தத் தொடங்கிவிட்டனர். இப்போது மக்கள் என்ன செய்வது என்று தெரியாமல் “இருதலைக் கொள்ளி எறும்பாகத்’ தவிக்கின்றனர். மக்கள் மேலும் மேலும் ஏழையாகிக் கொண்டிருக்கின்றனர். அரசியல்வாதிகள் நாள்தோறும் மாளிகைவாசியாக மாறிக் கொண்டிருக்கின்றனர்.

“விதையில்லாமல் புல் முளைக்கிறது. வேர் இல்லாமல் ரோமம் முளைக்கிறது. விதையும், வேரும் இல்லாமலேயே அரசியல் முளைக்கிறது’ என்றார் கவிஞர் கண்ணதாசன்.

எந்த மூலதனமும் இல்லாமல் கோடி கோடியாக



# தமிழ்

**நற்றமிழரின் நாடித்துடிப்பு**






VARSHA™




சம்பாதிக்கும் தொழிலாக அரசியல் மாறிக் கொண்டிருக்கிறது. அதனால்தான் போட்டியும் அதிகமாக இருக்கிறது. இனிமேல் சாதாரண மனிதர்கள் அரசியலில் ஈடுபட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சட்டமன்றமும், நாடாளுமன்றமும் கோடீஸ்வரர்களின் கூடாரமாகி விட்டது என்பது தேர்தல் வல்லுநர்களின் கணிப்பாகும்.




“உலகத்தில் மிகவும் உயர்வானது அறிவோடு கூடிய கட்டுப்படுத்தப்பட்ட மக்களாட்சி. வெறுப்பும், அறியாமையும், மூடநம்பிக்கையும் கொண்ட மக்களாட்சி, குழப்பத்தில் கொண்டு போய் விடுவதோடு, தன்னைத் தானே அழித்துக் கொண்டு விடும்” என்று காந்தியடிகள் கூறினார்.




அரசாங்கத்தின் அரியணையில் அமர்வது என்பது புலியின் மேல் சவாரி செய்வது போன்றது. அதிகாரபீடத்தில் இருப்பவர்களுக்கு ஓய்வும் இல்லை, உல்லாச வேளையும் இல்லை என்று கூறிய அன்றைய அரசியல் மறைந்து விட்டது.

நாட்டின் சுதந்திரத்துக்காகப் பாடுபட்ட தியாகிகள் இப்போது இல்லை. நாட்டுக்காகத் துரும்பைக் கூட அசைக்காதவர்கள் தான் அரியணைக்காக அடித்துக் கொள்ளுகின்றனர். மக்களும் யாரைத் தேர்ந்தெடுப்பது என்று தெரியாமல் “நோட்டா’வை நோக்கி கைநீட்டுகின்றனர்.

“அரசாங்கம் மக்கள் சேவைக்காக ஏற்படுத்தப்படுவது. ஆனால் அது அமைக்கப்பட்டவுடன், பொது மக்களை எதிரிகளாக நினைக்கத் தொடங்கி விடுகிறது” என்றார் அறிஞர் அட்கின்சன். அது எவ்வளவு உண்மை என்பது இப்போது நடைமுறையில் தெரிகிறது.

எதிர்க்கட்சியாக இருக்கும்போதெல்லாம் மக்கள் பிரச்னைகளைப் பேசும் அரசியல் கட்சிகள், ஆளும் கட்சியானதும் தாங்கள் கொடுத்த வாக்குறுதிகளை மறந்து விடுகின்றனர். அமைக்கப்படும் அரசாங்கம் அனைவருக்கும் பொது என்பது மாறி, தங்கள் கட்சிக்காரர்களுக்கு மட்டுமே சேவை செய்வது என்பது வழக்கமாகி விட்டது. இது அரசியல் அமைப்புச் சட்டத்துக்கும், மக்களாட்சியின் மாண்புக்கும், எடுத்த உறுதிமொழிக்கும் எதிரானது என்பதை யார் எடுத்துக் கூறுவது?

இது எழுதப்படாத சட்டமாகி விட்டது. அன்றைய அரசியலுக்கும், இன்றைய அரசியலுக்கும் உள்ள வேறுபாடு இதுதான்.

# கரையேறும் நாளெதுவோ ?

கடலோடி மீன் பிடித்த
களைப்போடு கரையோரம்
படகோடு வலைக் கயிறு
தோணிகளும் ஓய்வெடுக்கும்

சேற்று மணம்; அத்தோடு
சேர்ந்திருக்கும் மீன் வாசம்
காற்றோடு கலந்து வந்து
கரையேறி நாசி தொடும்

தாலாட்டும் சிற்றலைகள்
தண்ணீரில் இசை படிக்கும்
தாழ்வாகப் பறந்தபடி
பறவைகளோ இரைதேடும்

கருவாட்டுச் சிதறல்கள்
காலடியில் உப்பு மணல்
கரைமீது பழுதாகிக்
கிடக்கின்ற ஒரு படகு

வலைவீசி மீன் பிடிக்கும்
பலபேரைச் சுமந்தபடி
தொலைவிலே பாய் விரித்துப்
படகுகளோ நகர்ந்து செல்லும்

கடல் தாயே உன் மடியில்
காலமெல்லாம் பரதவர்கள்
கலக்கத்தில் பெண்டு பிள்ளை
கரையேறும் நாளெதுவோ ?

இராதை. பிரபாகரன்



சரித்திரத் தொடர்



# சேரமான் கனவு

பாகம் - 2 அத்தியாயம் 4

## 4 சதிகாரர்கள் மத்தியில் சிவனடியார்கள்

கொற்றவன்

காஞ்சனாவின் குடிலை நோக்கி நடந்துக் கொண்டிருந்த இளங்கோ அடிகளும் உதயனும் தனக்குப் பின்னால் வந்த உருவத்தைக் கவனிக்கவில்லை! ஆயினும், சட்டெனக் கண்களை மூடிச் சில நொடிகள் நின்றார் இளங்கோ.

“பின்னால் யாரேனும் வருகிறார்களா என்பதை அவர்கள் அறியாமல் கவனி உதயா!” என்றவாறே நடையைத் தொடர்ந்தார்.

அவர் கணநேரம் நின்றபோதே அந்த உருவம் சடாரென அருகிருந்த செடிகொடிகள் இடையே தன்னை மறைத்துக் கொண்டது.

அதனால், நடையைத் தொடர்ந்தவாறே எதேச்சையாக அக்கம் பக்கம் பார்ப்பதுபோல் பின்னால் திரும்பித் தன் பார்வையை ஓட்டிய உதயனுக்கு எவரும் தென்படவில்லை.

ஆனாலும், எழுந்த ஐயப்பாட்டை தீர்த்துக் கொள்ள வேண்டும் என்ற உறுதி அவனுக்குள் கிளர்ந்தது.




நடையில் வேகம் காட்டிய இளங்கோ மீண்டும் ஏதோ சிந்தித்தவராய் உதயன் பக்கம் திரும்பினார்.

“உதயா! நாம் இப்போது நாட்டியம் பார்ப்பதை விடவும், நீ அடைத்து வைத்திருப்பவர்களைப் பார்ப்பதுதான் சரியானதாக இருக்கும் என்பதுதானே உன் தற்போதைய எண்ணம்!” எனப் புன்முறுவலுடன் வினவினார்.

“என் எண்ண ஓட்டத்தை அப்படியே பிரதிபலித்து விட்டீர்கள்!”

“அப்படியானால் நாம் அங்கேயே செல்லலாம் வா!”

“இப்படியேவா?”

“பிறகெப்படி?”

“அடிகளார் அங்கு விஜயம் செய்வது பொதுமக்களுக்கு வேண்டுமானால் மகிழ்ச்சியைத் தரலாம். ஆனால் அதுவே, ஏன் இங்கே இவர் வந்திருக்கிறார் என்ற கேள்வியையும் எழுப்பி விடக் கூடாதே!”

“புரிகிறது. உன் திட்டப்படியே நடக்கட்டும். சரி வா!” என்றவர், திரும்பித் தன் குடிலுக்கே நடக்கத் தொடங்க, அவரைப் பின்தொடர்ந்தான் உதயன்.

சற்றைக்கெல்லாம் அவர்கள் இருவரும், காஷாயம் உடுத்தியபடி, தாடியும் மீசையும் நீண்ட சடாமுடியுமாய் சிவனடியார்கள் கோலத்தில்

முசிறித் துறைமுகத்தில் மக்களோடு மக்களாய் நடந்துக் கொண்டிருந்தார்கள்.

கடற்கரையின் மேட்டுப் பாங்கான இடத்தில் அமைந்த அம்மாளிகையின் முகப்பருகே வந்து நின்றபோது, அவர்களை எதிர்பார்த்துக் காத்திருந்தாற்போல, கையில் வேல்கம்புடன் நின்ற ஒரு வீரன், இருவரையும் வணங்கினான்.

அதைக் கண்டு சிந்தனையில் ஆழ்ந்த இளங்கோ, “நம்மை இவன் அடையாளம் கண்டு கொண்டு விட்டானோ?” என உதயனுக்கு மட்டும் கேட்கும் வகையில் வினவினார்.

“ஆம். ஆனால் அதற்குக் காரணம், சற்றுத் தொலைவிலேயே நான்தான் வருகிறேன் என்பதற்கான சமிக்ஞையைக் கொடுத்து விட்டேன்.”

“அப்படியானால் என்னை இவனுக்கு அடையாளம் தெரியவில்லைதானே!”

“என் ஒப்பனை தங்களைக் காட்டிக் கொடுக்காது என்றுதான் நினைக்கிறேன்” எனக் குறுநகை புரிந்தான் உதயன்.

அவர்கள் இருவரும் உள்ளே வந்து இரண்டு அறைகளைக் கடந்து மூன்றாவது அறைக்குள் நுழைந்தபோது, அது ஒரு சிறைக்கூடம் போல் இருந்தது. அங்கே கனமான கம்பிக் கதவுகளுக்குப் பின் எட்டு பேர்கள் சிறைப்படுத்தப் பட்டிருந்தார்கள்.

எந்த நேரமும் தங்களை இங்கிருந்து வேறு இடத்திற்க்குக் கொண்டு செல்ல காவலர்கலள் வருவார்கள் என்பதை எதிர்பார்த்திருந்தவர்களுக்கு அங்கே வந்து சிவனடியார்களைக் கண்டதும் வியப்பும் அதிர்ச்சியும் கொண்டார்கள்.

சிறைக் கதவுக்கு அருகில் வந்து நின்றபோது, அவர்களைப் பார்வையால் அளந்தான் வடநாட்டு உபதளபதி காளிங்கன். பின்னர், தன்னருகே நின்ற ஒருவனிடம் ஏளனமாய்ச் சிரித்தபடி கூறினான்.

“இரும்படிக்கும் இடத்தில் இந்த ஈக்கள் ஏன் உலவுகின்றன?”


அவன் கூறியதைக் கேட்ட இளங்கோவும் நகைத்தார். அதைக் கண்டு சட்டென முகம் மாறி சிவனடியார்களை நோக்கிக் கோபத்துடன் வினவினான்.

“யார் நீங்கள்?”

“ஏனப்பா, பார்த்தால் தெரியவில்லையா?” எனப் பதில் கூறிய இளங்கோவின்





முகத்தில் முறுவல் படர்ந்திருந்தது.

“நீங்கள் சிவனடியார்கள் என்பதை நான் நம்ப வேண்டும் என்கிறீர்களா?”

“நம்புவதும் நம்பாததும் உன் விருப்பம். ஆனால் நீங்கள் இங்கிருந்து தப்புவதற்கு நாங்கள் உதவத் தயாராய் இருக்கிறோம். அதை நீ நம்புவதற்கு நாங்கள் என்ன செய்ய வேண்டும் என்று மட்டும் சொல்! வேறு கேள்விகள் எதுவும் கேட்டு எங்கள் நேரத்தை வீணடிக்காதே! புரிகிறதா?” இப்படியொரு பதில் கேள்வியை எதிர்பார்க்காத காளிங்கன் தடுமாற்றம் அடைந்தாலும், சமாளித்தபடி வினா எழுப்பினான்.



“எனக்கு என்ன புரிகிறது என்பது ஒருபுறம் இருக்கட்டும். என் கேள்விக்கு பதில் சொல்லுங்கள், நீர் யார்?”

“இப்போதைக்கு உங்களைக் காக்க வந்திருக்கும் சிவனடியார்கள்!”

“இது வேடம்! நான் இந்த வேடத்துக்குள் ஒளிந்திருக்கும் உமது பெயரைக் கேட்டேன்.”

“என்னைத் தற்போது யாரும் பெயரிட்டு அழைப்பதில்லை. என்னைப் பற்றிய ஆராய்ச்சியை விடு. நீ தப்பிப்பதற்கு வழி தேடு!”

“நாங்கள் தப்பிப்பதற்கு நீங்கள் அக்கறைக் காட்டுவது ஏன்?”

“ஒருவகையில் அதில் எங்களுக்குப் பலன் இருக்கிறது.”

“விளங்கவில்லையே!”

“விளங்க வைப்பதற்கு எங்களுக்கு இப்போது நேரமும் இல்லையே!”

“நீங்கள் இருவரும் எங்களுக்கு ஏதோ பொறி வைக்கிறீர்கள் என்றுதான் சந்தேகப்படுகிறேன்”

“நீங்கள் அனைவரும் அரசரைக் கொல்ல முயன்ற சதிச் செயலுக்காகச் சிறையிடப்பட்டிருக்கிறீர்கள். நாளையே விசாரணை தொடங்கினால், உங்கள் அனைவருக்கும் மரணம் நிச்சயம்!”

“அதைப் பற்றிக் கவலை இல்லை! அனைத்துக்கும் துணிந்துதான் இந்தக் காரியத்தில் நாங்கள் இறங்கினோம். நாங்கள் தப்பிப்பதனால் உங்களுக்கு என்ன பலன் அதைக் கூறுங்கள்.” என்றான் விடாப்பிடியாக காளிங்கன்.

அதைக்கேட்ட உதயன் சற்றே பொறுமையிழந்தான். ஆயினும் தன் குரலைச் சற்றே கரகரப்பாக மாற்றிக் கொண்டு உரக்கக் கேட்டான்.

“ஏனப்பா? உங்கள் தளபதி தப்பிக்கக் கிடைத்திருக்கும் வாய்ப்பையும் பயன்படுத்திக் கொள்ளாத சந்தேகப் பேர்வழியாய் இருக்கிறார். நீங்களாவது எடுத்துக் கூறக் கூடாதா?”

அவன் கூறியதைக் கேட்டதும், சிறைக் கம்பிகளுக்குப் பின் இருந்த மற்றவர்கள் தங்களுக்குள் ஏதோ முணுமுணுத்துக் கொண்டனர். அதில் ஒருவன் மட்டும் துரிதமாய்க் குரல் கொடுத்தான்.

“தளபதி, இந்த வாய்ப்பைப் பயன்படுத்தி நாம்



"உடனடியாகத் தப்பிப்பதுதான் புத்திசாலித்தனம்!"

அதையே இன்னொருவனும் வழிமொழிந்தான்.

"ஆம். இங்கே நாம் நேரத்தை வீணடித்துக் கொண்டிருக்கக் கூடாது."

"நாம் இப்படிச் சிக்கிக் கொண்டதற்கு தளபதிதான் காரணம்!" என்றான் மற்றும் ஒருவன்.

அதைக் கேட்டதும், காளிங்கன் அருகில் நின்றவன் அவர்களை அமைதிப்படுத்தி விட்டுப் பேசினான்.

"அமைதியாய் இருங்கள். இதுதான் நீங்கள் நம் உபதளபதிக்குத் தரும் மரியாதையா? எத்தனையோ இன்னல்களைச் சந்தித்தபின் தான் நாம் இந்தச் சேரநாட்டுக்குள் இப்போது உயிரோடு இருக்கிறோம். அவற்றில் எல்லாம் நம்மைக் காத்த தளபதி, இதில் இருந்தும் காப்பார் என்று உங்களக்கு ஏன் தோன்றவில்லை? அவர் சொல் கேட்டு நடப்பதுதான் உங்கள் கடமை அதைப் புரிந்துக் கொள்ளுங்கள்!" என்றவன், காளிங்கன் பக்கம் திரும்பினான். காதருகே கிசுகிசுத்தான்.

"இந்தச் சிவனடியார்களை நம்பினால் இப்போது நாம் தப்பிவிட வாய்ப்பிருக்கிறது. அதைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் காளிங்கா!" என்றவன், சிவனடியார்களை நோக்கிக் கை கூப்பினான்.

"ஐயா, நாங்கள் தங்கள் இருவரையும் நம்புகிறோம். இங்கிருந்து தப்பிக்கும் உபாயத்தைக் கூறுங்கள். இனியும் நாங்கள் தாமதிப்பதற்கில்லை!" எனப் பணிவுடன் வேண்டினான்.




"நீ புத்திக் கூர்மை உள்ளவன்தான். உன் பெயர் என்ன?"

"காகதீயன்!"

"காகதீயா, உங்கள் புத்தி இதுவரை உங்களை வேறுதிசையில் செலுத்திவிட்டது. போனது போகட்டும். இனியாவது அதை நேர்வழியில் செலுத்துங்கள். சரி, முசிறியில் இருந்து நீங்கள் மாறுவேடத்தில் செல்ல ஏற்பாடு செய்துள்ளோம். உங்களுக்கான மரக்கலமும் ஆயத்தமாய் இருக்கிறது. உங்களுக்கான உணவுத் தேவைகளை மரக்கலத்தில் உள்ள எங்கள் சிவனடியார்கள் கவனித்துக் கொள்வார்கள். நீங்கள் சென்று சேர்ந்ததும் அவர்களைப் பத்திரமாகத் திருப்பி அனுப்பி வையுங்கள்!" என்றார் இளங்கோ.

"அப்படியே ஆகட்டும்!" என மீண்டும் வணங்கினான் காகதீயன்.

இளங்கோ, உதயனைப் பார்த்து கண்சாடைக் காட்டினார். அதைப் புரிந்து கொண்ட உதயன் சற்றுத் தள்ளி சாளரம் அருகே போய் நின்று வெளியே நோட்டமிட்டுத் திரும்பி வந்து நின்றான்.

"அங்கே நமது அடியார்கள் இவர்களுக்காகக் காத்திருக்கிறார்கள்." என்றவாறு, தன் காஷாய



உடையில் மறைத்து வைத்திருந்த திறவுகோலை எடுத்து அந்தச் சிறைக் கதவில் தொங்கிய பூட்டுக்குள் விட்டுக் குடைய, கடமுடவெனும் சத்துடன் பூட்டு திறந்தது.

அடைபட்ட எட்டு பேர்களும் வெளியில் வந்தனர். காகதீயன் வணங்கியபடியே இளங்கோ அருகில் வந்து நின்றான். அவனைத் தொடர்ந்து மற்றவர்களும் வந்து வணங்கினர். ஆனால் காளிங்கன் மட்டும் இளங்கோவின் மீது சந்தேகப் பார்வையிலேயே மார்புக்குக் குறுக்காகக் கைகட்டி கம்பீரமாய் நிமிர்ந்து நின்றான். அவனை நோக்கி வினவினார் இளங்கோ.

“இன்னுமா எங்கள் மீது உனக்கு ஐயம்?”

“எப்படியோ எங்கள் பழிதீர்க்கும் படலத்தில் நாங்கள் சிறைப்பட வேண்டியதாகி விட்டது. அவர்கள் எங்களைத் துன்புறுத்திக் கொல்வதற்குள் தப்பிக்க வேண்டிய தேவை இருக்கத்தான் செய்கிறது. ஆனாலும், சதி செய்தவர்களைத் தப்பிக்க வைக்கும் நீங்களும்கூட சதிகாரர்களாக சிறையிடப்படும் ஆபத்து இருக்கிறதே! அதை எப்படிச் சமாளிப்பீர்கள்?” என்றான் காளிங்கன் தன் தாடையைத் தடவியபடி.

“சதியைச் சதியால் முறியடிக்கும் கலை பயின்றவர்கள் நாங்கள்!” என்றார் இளங்கோ.

“நாங்கள் யார் என்று தெரிந்தும்தான் உதவி செய்கிறீரோ?”

‘ஆம்’ என்பதற்கு அறிகுறியாக, மெல்லிய முறுவலூடாக தலையசைத்தார் இளங்கோ.



“நான் யார் தெரியுமா?”

“அந்தளவுக்குத் தெரியாமலா உங்கள் அனைவரையும் தப்பிக்க வைக்க முயற்சி எடுத்தோம்? சரி, நீ யார் என்று நாங்கள் தெரிந்து கொள்ள வேண்டும் எனத் துடிக்கிறாய்! சரி, நீயேதான் கூறேன்!” என்றான் குரலை மாற்றிய உதயன். குரல் அவனுக்குத் தன்னைக் காட்டிக் கொடுத்துவிடக் கூடாது என்ற கவனமுடன்.

“நான்தான் கங்கநாட்டு உபசேனாதிபதி காளிங்கன்.” என்றான் கம்பீரம் குறையாமல் காளிங்கன்.

“அந்த ஆணவம்தான் உன்னை இப்படிச் பேசச் செய்கிறது!” என்றார் இளங்கோ.

“அப்படியே வைத்துக் கொள்ளும். ஆனால் எங்களைத் தப்பிக்க வைப்பதில் நீர் மட்டும் ஏதேனும் சதி செய்கிறீர் எனத் தெரிந்தால், உமது தலை உடலில் தங்காது!” எனக் கடுமை தொனிக்கக் கூறினான் காளிங்கன்.

“அப்பனே, என் விருப்பமின்றி என்னை உன்னால் ஒன்றும் செய்ய இயலாது.”

“துறவிக்குள்ளும் ஆணவம் இருக்கிறது பார்த்தாயா? இதிலிருந்து ஒன்று விளங்குகிறதா உனக்கு?” என்ற காளிங்கன், காகதீயன் பக்கம் திரும்பிக் கூறினான்.

“என்ன?” என்றான் சற்றே குழப்பத்துடன் காகதீயன்.

“இவர்கள் உண்மையான சிவனடியார்கள் இல்லை! மேலும் இவர்கள் காட்டிய வழியே தப்பிப்பதும் நம் உயிருக்கு உத்திரவாதமில்லை!”

“காளிங்கா, நீ மடையன்தான்! நானே உன்னைக் காப்பாற்ற நினைத்தாலும், அது முடியாது போலிருக்கிறது.” என்றார் புன்னகை முகமாய் இளங்கோ.

“உண்மை என்னவென்றால், இப்போது உங்களைத்தான் காப்பற்ற இங்கு யாரும் இல்லை!”

என்ற காளிங்கன் சட்டென இளங்கோ மீது, மினலாய்ப் பாய்ந்து அவர் கழுத்தை இறுக்கத் தொடங்கினான்.

நடந்த சம்பவத்தைக் கண்டு உதயன் ஒரு கணம் நிலை மறந்து சிலையானான்.

இப்படி நடக்குமென்று எதிர்பாராத, அங்குள்ளோர் அனைவருமே அதைக் கண்டு பேச்சற்றுப் போனார்கள்.

தான் ஒன்று நினைக்க, காலம் வேறொன்றைக் கொண்டு வந்து நிறுத்தும் அல்லவா?

அந்தக் காட்சிதான் அங்கு அரங்கேறியது.

(கனவு தொடரும்...)


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA
VARSHA
16th
ANNIVERSARY
16
16
THANK
YOU

கவிதை

# இனி ஒரு துன்பமில்லை

இனி ஒரு துன்பமில்லை
ஒரு சோகமில்லை
என்னை இப்படியெல்லாம்
கஷ்டப்படுத்தாதே நண்பா
என்னை கேள்வி கேட்காதே சகோதரி
என்னை எதிர்த்து பேசாதே இவளே
காளிக்கு இருக்கிறது
ஒரு தனிச் சுடலைக்காடு
நடராஜரை நம்பியே நாற்பது கோடி
சில்வானத்துக்குக் குடிபடைகள்

அவன் மார்பழகு எவளுக்குச் சொந்தம்
சிவகாமிக்கு சொந்தம் போட்டி போட்டு
ஆடும் கறுத்த காளி அறிவாள்
அவன் பாகீரதியை மறித்துச் சிரசில்
ஏந்திக் கொண்டவன் சோமனின்
சாபம் மாற்ற சூடிக்கொண்ட சுந்தரன்

பிச்சைக்குப் போனாலும் பூதகணங்களை
இட்டுச் செல்லும் பேரழகன்
அவனழகு எவனுக்கு வரும் —இளமான்
அவன் விழிபார்த்துத் துள்ளுகிறது
உன் முகம் எல்லாம் யாரால்
ஒரு சிவகாமி பொறுதியில்
காளி மேலேயேறி மிதித்தால் காலி நீ
உனக்கொரு காடு, ஆட ஐந்து சபை
உடன் படுக்க ஒரு துடியான தேவி
பிறகு வந்து லோகபரிபாலனம்
பண்ணுவாயோ நீ

ஆனாலும் உன்னை எதிர்பார்த்துதானே
ஒரு கன்னிக்குமரி அவள்
அக்காள் மேற்கே —ஆடு! தன்னை மறந்து
நிருத்தியம் செய் நேரம் காலமில்லாது
காலில் போட்டு மிதி முயல்களை
கண்டம் கறுத்தவனே! —காரைக்கால்
அம்மைக்கு நல்ல கதி தந்தவனே
ஆடு! ஆடுவதுதானே உனக்கு அழகு
ஆடினாலும் அரசனல்லவோ நீ
ஆட்ட வகை
அத்தனையும்
தேறியவனல்லவோ நீ
—ஆடு!
அண்டபகிரண்டம்
குலுங்க ஆடு!



கரும்பைக் கையில்வைத்து
காப்பாற்றிவிடுவாளாம் அவள் நீ
இவளுக்குக் கட்டுப்பட்டு ஏனிருக்கிறாய்
மதுரையில்? —தரையில் கால்பதித்து
நடந்ததுண்டா நீ —சிவகாமி மனசு
தெரிந்திருந்தால் காளி எங்கே வருவாள்
வந்தவளையும் வாழவைத்தவனில்லை நீ
கூட இருந்தவளையும்
கொண்டாடாதவன் நீ தெரியுமா?
பெண்ணருமை தெரியாத உன்னைச்
சிவனென்று மனம் ஒப்பிக் கும்பிடுகிறதே
ஜனம்...என்னை மாதிரி கலைஞர்கள்
என்றென்றைக்கும் சக்தி பக்கம்தான்.

குழல்வாய்மொழி அம்மனின் குரலினிமை
தெரியுமா உனக்கு? —உலகம்மையின்
ஒரு பெரும்பரிவு உணர்வாயா நீ
காந்திமதியின் கண்பார்வை
கண்டு மனம்கொண்டதுண்டா நீ
உலகுயிர்க்கெல்லாம் என்றும்
காமாட்சித்தாய்தான்! —நீ சபையில்
ஆடிக்கொண்டிரு! —சலிப்பு தட்டினால்
சுடலையில் போய் ஆடு

எங்களுக்கு —எங்கள் தாய்
ஆதிசக்தி இருக்கிறாள்.
அன்ன பூரணி இருக்கிறாள்.
அகமும் புறமுமான
அன்னை மீனாட்சி இருக்கிறாள்.

சாந்த ஸ்வரூபிணி
சிவகாமித்தாய் இருக்கிறாள்.
துடியான காளியும் துணையாயிருப்பாள்.
இன்னும் என்ன வேண்டும்
"இனி ஒரு துன்பமில்லை —ஒரு
சோகமில்லை வரும் இன்பநிலை
வெகுதூரமில்லை."

**விக்ரமாதித்யன்**


VARSHA
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY Tamil NEW YEAR
HAPPY TAMIL
NEW YEAR
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு

# கல்யாணி காட்டில் மழை!



## கார்த்தியுடன் கைகோர்க்கும் கல்யாணி!

நலன் குமரசாமி இயக்கும் 'வா வாத்தியார்', பி.எஸ். மித்ரன் இயக்கும் 'சர்தார் 2' படங்களில் நடித்து வருகிறார் கார்த்தி. இதையடுத்து 'டாணாக்காரன்' தமிழ் இயக்கும் படத்தில் நடிக்கிறார். அது, கார்த்தியின் 29—வது படம். ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிக்கும் இந்தப் படத்தில் கல்யாணி பிரியதர்ஷன் ஜோடியாக நடிக்கிறார். தமிழில் சிவகார்த்திகேயனுடன் 'ஹீரோ', சிம்புவின் 'மாநாடு' படங்களில் நடித்துள்ள கல்யாணி பிரியதர்ஷன் மலையாளம் மற்றும் தெலுங்கு படங்களில் நடித்து பிஸியாக வரும் நிலையில் இப்படத்தில் ஒப்பந்தமாகியுள்ளார்.வருகிறது.




# பரபரப்பாகும் 15 நிமிட சிங்கள் ஷாட்!

## ரிஸ்க் எடுப்பதெல்லாம் பெஸ்ட்!

2டி நிறுவனம் மற்றும் ஸ்டோன் பெஞ்ச் நிறுவனம் இணைந்து தயாரிக்க, கார்த்திக் சுப்புராஜ் இயக்கத்தில் சூர்யா, ஜோஜு ஜார்ஜ், பூஜா ஹெக்டே, கருணாகரன் உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'ரெட்ரோ'. இணையத்தில் பெரும் வைரலாகி இருக்கும் இப்படத்தின் 'கனிமா' என்ற பூஜா ஹெக்டேவின் பாடலைத் தொடர்ந்து வரும் ஒரு காட்சி, 15 நிமிடத்துக்கு ஒரே டேக்கில் எடுத்திருக்கிறார்கள். இக்காட்சிக்காக அனைத்து நடிகர்களும் பங்கெடுத்து ஒத்திகைப் பார்த்து, இதனைச் சாத்தியப்படுத்தி இருக்கிறார்கள். இப்படம் மே 1—ம் தேதி வெளியாகவுள்ளது.



## டாக்ஸி வேகத்தில் பான் வேர்ல்ட் படம்?

### டாக்ஸிக் 2026 மார்ச்ல் ரிலீஸ்

பான் இந்தியா ஸ்டாராக மாறியுள்ள யஷ், தற்போது நடிகை கீது மோகன்தாஸ் இயக்கத்தில் நடித்து வரும் பான் வேர்ல்ட் படம், ‘டாக்ஸிக்: எ ஃபேரி டேல் ஃபார் க்ரோன்—அப்ஸ்.’ வெங்கட் கே.நாராயணா, யஷ் இணைந்து கே.வி.என் புரொடக்ஷன்ஸ், மான்ஸ்டர் மைன்ட் கிரியேஷன்ஸ் தயாரிக்கின்றனர். கியாரா அத்வானி, நயன்தாரா, ஹுமா குரேஷி நடிக்கின்றனர். இது வரும் 2026 மார்ச் உலகம் முழுவதும் திரைக்கு வருகிறது. ஒரே நேரத்தில் கன்னடம், ஆங்கிலம் ஆகிய மொழிகளில் படப்பிடிப்புகள் நடக்கிறது.

## ஜனவரியில் வருகிறான் ‘ஜன நாயகன்’

### ஜன நாயகன் பண நாயகனாகவும் வெற்றி பெறட்டும்!

கே.வி.என் நிறுவனத் தயாரிப்பில், விஜய் நடித்துள்ள ‘ஜன நாயகன்’ திரைப்படத்தின் இறுதிகட்டப் படப்பிடிப்பு சென்னையில் மும்முரமாக நடைபெற்று வருகிறது. வெளியீடு குறித்து பல்வேறு தகவல்கள் வெளியான நிலையில், வெளியீட்டுத் தேதியை, அடுத்த ஆண்டு ஜனவரி 9—ம் தேதி வெளியாகும் என்று படக்குழு அதிகாரபூர்வமாக அறிவித்துள்ளது. இதற்கு மிக முக்கியக் காரணம் ஓடிடி உரிமை விற்பனை என்று கூறப்படுகிறது. ஹெச்.வினோத் இயக்கத்தில் விஜய், பாபி தியோல், பூஜா ஹெக்டே, கவுதம் மேனன், பிரியாமணி, மமிதா பைஜு உள்ளிட்ட பலர் நடிப்பில் உருவாகி வருகிறது ‘ஜன நாயகன்’.

ஆன்மிகம்

# தல வலம்

## திருநின்றவூர் (திண்ணனூர்)

### திருநின்றவூர் கோயில்

புவனகிரி செயபாலன்

ஷீர நதிக்கரையில் அமைந்துள்ள திண்ணனூர் 108 திவ்ய தேசங்களில் 58—வது திருத்தலமாகும். பகவத் ஸ்ரீராமானுஜர் வட மொழியில் மங்களா சாசனம் செய்துள்ளார் என்பது இத்தலச் சிறப்புகளில் ஒன்று.

பெருமாள் —பக்தவச்சலப் பெருமாள்

திருநிலை —திருமுகம் மண்டலம் கிழக்கு நோக்கி நின்ற கோலம்.

தாயார் —சூதரவல்லித் தாயார், என்னைப் பெற்ற தாயார்.

விமானம் —சீனிவாச விமானம்

தல விருட்சம் —பாரிஜாதம்

தீர்த்தம் —வருண புஷ்கரணி, விருத்த ஷீரா நதி

காலம் —1500 வருடங்களுக்கு முற்பட்டது.

சமுத்திர ராஜனுடன் கோபித்துக் கொண்ட திருமகள், இவ்விடத்தில் வந்து நின்ற ஊர் என்பதால், திருநின்றவூர் என்னும் பெயர் பெற்றது.

கடலில் இருந்து தோன்றியவள் திருமகள். தந்தையான சமுத்திர










ராஜன் வருணன், தன் புதல்வியைத் தேடி எங்கும் காணாமல் கடைசியில் பூலோகத்தில் தேடியபோது, இத்தலத்தில் எழுந்தருளி இருப்பதைக் கண்டு பேரன்பினால், “என்னைப் பெற்ற தாயே!” என்று அழைக்கவே, அதுவே திருமகளுக்குச் சிறப்புப் பெயராக அமைந்தது. திருநின்றவூர் தேவியின் தலமாகக் கருதப்படுகிறது.

திருமங்கையாழ்வார்

திருமங்கையாழ்வார் திருவள்ளூருக்கு வந்து சில நாள் தங்கி இருந்து, திரு எவ்வுள் கிடந்தான் மீது பல சுருதியுடன் 11 பாசுரம் பாடினார். அதன் பின் தென்கிழக்கில் சுமார் 15 கி.மீ. தூரத்தில் உள்ள திருநின்றவூருக்கு வந்தார். ஆழ்வார் அங்கு வந்தபோது, இரவு நேரமானதால் திருக்கோயில் நடை அடைக்கப்பட்டு பெருமாள் ஏகாந்தத்தில் இருப்பதாகத் தெரிவித்தனர்.

திருமங்கையாழ்வார், திருமகளையும் பக்தவச்சலப் பெருமாளையும் சேவிக்காமலும் பாசுரம் பாடாமலும் சென்றுவிட்டார். ஆழ்வார் சென்றது திருமகளுக்கு மிகுந்த மன வருத்தத்தை அளித்தது.

அவள் பெருமாளிடம், திருமங்கையாழ்வாரிடம் சென்று தங்களுக்கான பாசுரத்தைப் பெற்று வருமாறு சொல்ல, பிராட்டியின் சொல்லைத் தட்ட முடியாமல் ஆழ்வாரைத் தேடிச் சென்றார். அப்போது ஆழ்வார் கடல் மல்லை (மகாபலிபுரம்) தல சயனப் பெருமாள் சன்னிதியில் நின்று சேவித்துக் கொண்டிருந்தார்.

பெருமாள் தான் வந்திருப்பதை ஆழ்வாருக்கு குறிப்பால் உணர்த்தி, தான் வந்த நோக்கத்தை சூசகமாக தெரிவித்தார். பெருமாள் வருகையைப் புரிந்து கொண்ட ஆழ்வார், பெரும் மகிழ்ச்சி அடைந்தார்.

மாமல்லத்தில் இருந்து கொண்டே திருநின்றவூர் பெருமாள்

“பூண்டவத்தம் பிறர்க்கடைந்து தொண்டுபட்டுப்
பொய்ந்நூலை மெய்ந்நூலென் றென்றுமோதி
மாண்டு,அவத்தம் போகாதே வம்மினெந்தை
என்வணங்கப் படுவானை, கணங்களேத்தும்
நீண்டவத்தைக் கருமுகிலை எம்மான்தன்னை
நின்றவூர் நித்திலத்தைத் தொத்தார்சோலை,
காண்டவத்தைக் கனலெரிவாய்ப்
பெய்வித்தானைக் கண்டதுநான் கடல்மல்லைத்
தலசயனத்தே.” —என இந்தப் பாசுரத்தை பாடினார்.

மகிழ்ச்சி அடைந்த பெருமாள் பாசுரத்துடன் சென்று லட்சுமியிடம் தெரிவிக்க, “எல்லா திவ்ய தேசங்களுக்கும் ஆழ்வார் பத்துக்கும் மேற்பட பாசுரங்களைப் பாடியவர். நமக்கு மட்டும் ஏன் ஒரு பாசுரத்துடன் நிறுத்திக் கொண்டார்?” என்று கேட்டு விட்டு, அவரிடம் சென்று மேலும் பாசுரங்கள் பெற்று வர அனுப்பினாள்.




அதற்குள் திருமங்கையாழ்வார் பல திவ்ய தேசங்களைப் பாடியும் சேவித்தும் கொண்டு தஞ்சை மாவட்டத்தில் உள்ள திருக்கண்ணமங்கைக்கு போய்ச் சேர்ந்தார்.

இதில் ஒரு ஆச்சரியமான ஒற்றுமை என்னவென்றால், திருக்கண்ணமங்கை பெருமாளின் திருநாமம் ‘ஸ்ரீ பக்தவச்சலப் பெருமாள்’ என்பதே. அங்கு போன திருநின்ற பெருமாள், ஆழ்வாரிடம் தான் மறுபடியும் திரும்பி வந்த நோக்கத்தை சமிக்ஞையால் தெரிவித்தார். இதைக் கண்டு நெகிழ்ந்த திருமங்கையாழ்வார் கீழ் வரும் பாசுரத்தைப் பாடித் தந்தார்.

“ஏற்றினை இமயத்துள் எம் ஈசனை
இம்மையை மறுமைக்கு மருந்தினை
ஆற்றலை அண்டத்து அப்புறத்து உய்த்திடும்




ஐயனைக் கையில் ஆழி ஒன்று ஏந்திய
கூற்றினை குருமா மணிக்கொன்றினை
நின்ற ஊர் நின்ற நித்தில தொத்தினை
காற்றினை புனலை சென்று நாடி
கன்னி மங்கையும் கண்டு கொண்டேன்”

ஆழ்வார்கள் பொதுவாக அந்தந்தத் தலப் பெருமாளைச் சேவித்து அங்கேயே பாசுரம் பாடியுள்ளனர். ஆனால் வெவ்வேறு தலங்களுக்குச் சென்று திருமங்கையாழ்வாரிடம் வேண்டிப் பாசுரம் வாங்கியது திருநின்றவூர் ஊர் பக்தவச்சலப் பெருமாள் மட்டுமே. இது போன்ற பாக்கியம் வேறு எந்த ஆழ்வாருக்கும் கிடைக்கவில்லை என்றே கூறலாம்.

இரண்டு பாசுரங்களைப் பாடிய திருமங்கையாழ்வார் எட்டாம் நூற்றாண்டை சேர்ந்தவர் என்பதும் கி.பி. 680 முதல் 728 வரை 38 ஆண்டுகள் அரசாட்சி செய்த பல்லவ மன்னன் ராஜ நரசிம்மன் காலத்தில் இக்கோயில் கட்டி இருக்கலாம் என்று கருதப்படுகிறது.

கோயில்

ஐந்து நிலை ராஜகோபுரம் 2 பிரகாரங்களைக் கொண்டது. கோபுரத்தைத் தாண்டி உள்ளே சென்றால், பலிபீடம், கொடிமரம், கருட சந்நிதி, மகா மண்டபம், உள் மண்டபத்தை அடுத்து கருவறை, அதில் பெருமாள், திருமகள் பூமகளுடன் நின்ற திருக்கோலத்தில் பஞ்சாயுதம் தாங்கி சுமார் 11 அடி உயரத்தில் கிழக்கு நோக்கி காட்சி தருகிறார்.

மூலவரின் வலது புறம் ‘என்னைப் பெற்ற தாயாருக்கு’ தனிச் சன்னிதி.

சமுத்திர ராஜனின் வேண்டுகோளுக்கு இணங்க, பெருமாளும் தாயாரும் திருமணக் கோலத்தில் அருளாசி வழங்குகின்றனர்.

சுற்றுப் பிரகாரத்தில் ஆண்டாள், ஆழ்வார்கள், அனுமன், ஏரி காத்த ராமர், ஆதிசேஷன் போன்றவருக்கு தனித்தனிச் சன்னதிகள். இங்கு வருண புஷ்கரணி அருகில் ராமருக்கு தனிச் சன்னதி உள்ளது. இதில் மதுராந்தகம் ஏரி காத்த ராமரைப் போல் ஆறடி உயரத்தில் சீதா லட்சுமண சமேதராக காட்சி தருவதால் இவரை ஏரிக் காத்த ராமர் என்பர்.

லட்சுமணனின் அம்சம் ராமானுஜர் எனவும், இராம பிரானின் அம்சம் முதலியாண்டானாக இருப்பதாகவும் கூறுகின்றனர். முதலியாண்டார் ராமானுஜரின் சீடராக விளங்கியவர். இங்கு ராமானுஜருக்கு சாற்றுமறை செய்த மறுநாள், ராமானுஜருக்கு சற்றுமறை செய்யப்படுகிறது. சீடருக்கே முதல் மரியாதை தரப்படுகிற தலங்களில் இதுவும் ஒன்று.

கல்வெட்டு

ஒன்பதாம் நூற்றாண்டில், பல்லவர் காலத்தில் கோயில் கட்டப்பட்டதாகக் கல்வெட்டு கூறுகிறது. கோயிலின் ஆரம்பக் காலக் கல்வெட்டுகளில்


தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
VARSHA™
Thank You!

நிருபதுவர்மன் காலம் கி.பி. 820 முதல் 890 வரை உள்ள காலம், பிற்காலச் சோழர்களான இரண்டாம் ராஜேந்திர சோழன் கி.பி. 1051 முதல் 1063 வரை, வீர ராஜேந்திர சோழன் கி.பி. 1063



முதல் 1070 வரை மற்றும் இரண்டாம் இராஜராஜ சோழன் கி.பி. 1146 முதல் 1173 வரை, ஆகியோரின் காலக் கல்வெட்டுகள் உள்ளன. பல்லவர் காலக் கல்வெட்டுகளில் இத்தலத்தை நின்ற ஊர் என்று குறிப்பிடுகின்றன.

சமுத்திர ராஜன் வந்து தாயாரை திரும்பி வரவேண்டுமென முயன்றார்.

"என்னைப் பெற்ற தாயே!" எனக் கூறி சமாதானம் செய்ய முயன்றார். எவ்வளவு வேண்டியும் தாயார் சமாதானம் அடையாததால், சமுத்திர ராஜன் பெருமாளிடம் சென்று உதவ வேண்டும் என்று கூற, அவரும் பக்தனுக்காக இங்கு வந்து திருமகளிடம் சமாதானம் கூறி வைகுந்தம் செல்ல சம்மதிக்க வைத்த தலம்.

குபேரன்

குபேரன் தன் நிதியை இழந்து வாடியபோது, என்னைப் பெற்ற தாயாரை வழிபட்டு இழந்த நிதியை மீண்டும் பெற்றான் என்கிறது தலபுராணம். இங்கு தாயார் சகல சௌபாக்கியங்களையும் தரும் வைபவ லட்சுமி ஆக உள்ளார்.



ஆதிசேஷன்

ஆதிசேஷனுக்கு எனத் தனிச் சன்னதி உள்ளது. இச்சன்னதியில் புதன் கிழமைகளில் அர்ச்சனை செய்து, நெய் விளக்கு ஏற்றி, பால் பாயாசத்துடன் படைத்தால், ராகு கேது மற்றும் சர்ப்ப தோஷம் விலகும் என்பதுடன் மாங்கல்ய பலன் உண்டாகும் என்பது நம்பிக்கை!

பரிகாரம்

காணாமல் போனப் பொருளைக் கண்டு பிடிப்பதற்கும், ஆட்களைத் தேடிக் கண்டுபிடிக்கவும், அநியாயமாகச் சொத்தைப் பிடுங்கிக் கொண்டிருப்பவரிடம் இருந்து இழந்த சொத்தை முறைப்படி மீட்பதற்கும், இழந்த பதவியை மீண்டும் பெறுவதற்கும், பதவி உயர்வு பெறுவதற்கும், வேலை கிடைப்பதற்கும், வியாபாரத்தில் இழந்த நஷ்டத்தை மீண்டும் லாபமாக மாற்றுவதற்கும், பெரியவர்கள் செய்யாமல் விட்ட பிரார்த்தனைகளை நிறைவேற்றுவதற்கும், எல்லாவற்றிற்கும் மேலாக பெருமாளின் கடாட்சம் பெறுவதற்கும், இத்தலப் பெருமாளை மனதாரச் சேவித்தால் நற்பலன்களை உடனே அடையலாம் எனத் தலபுராணம் கூறுகிறது.

திருவிழா

பங்குனியில் திருவோண விழா, ஆழ்வார்கள், ஆச்சாரியார்களின் திரு நட்சத்திர விழா, சித்ரா பௌர்ணமி, திருக்கல்யாண உற்சவம், தீபாவளி, திருக்கார்த்திகை, வைகுண்ட ஏகாதசி, மாசி மகம், தைப் பொங்கல், ரத சப்தமி.

பூஜை

தென்கலை வைஷ்ணவர் மரபுகளைப் பின்பற்றி வைகாசன ஆகமத்தைப் பின்பற்றுகிறது. தினமும் ஆறு கால பூஜை நடத்தப்படுகிறது.

கோவில் திறக்கும் நேரம்

தினமும் காலை 7.30 மணி முதல் 11 மணி வரையிலும், மாலை 4:30 மணி முதல் இரவு 8.30 மணி வரை திறந்திருக்கும்.

இருப்பிடம்

திருவள்ளூர் ரயில் பாதையில் திருநின்றவூர் ரயில் நிலையத்தில் இறங்க வேண்டும். அங்கிருந்து 2 கி.மீ. தூரத்தில் உள்ளது. ஆட்டோ வசதி உண்டு.

(தொடரும் வலம்.....)

அலமாரி

# புத்தக விமர்சனம்

## தமிழகத் தொல்லியல் வரலாறு

**ஆசிரியர்: பொ.சங்கர்**

**விலை : ரூ. 210**

**பக். : 176**




**வெளியீடு:**


**கிழக்கு பதிப்பகம்,**
**சென்னை– 14**

**Phone Number:**
**+91 95000 45609.**

இலக்கியங்கள் வாயிலாக தமிழகத்தின் வரலாறு பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்டது எனக் கூறி வந்தாலும், அதற்கான தொல்லியல் சான்றுகள் நீண்ட காலமாக கிடைக்காமல் இருந்து வந்தது. இந்தியா சுதந்திரம் அடைந்த பின்பு தான் தமிழகத்தின் தொல்லியல் சான்றுகள் ஒவ்வொன்றாக வெளிவரத் தொடங்கின. தமிழக தொல்லியல் சான்றுகளை வெளிக்கொணரும் நோக்கில் தொல்லியல் ஆய்வுகளை தொகுத்து வெளியிட்டுள்ளார் நூலாசிரியர். தமிழகத்தின் வணிக நிலை, மக்களின் வாழ்க்கை முறை, மக்கள் பயன்படுத்திய கருவிகள் உள்பட சிந்துவெளி பண்பாட்டுக்கு நிகராகக் கருதப்படும் தமிழகத்தின் தொல்லியல் வரலாற்றை இந்நூல் விவரிக்கிறது.

நொய்யல் நதிக்கரையில் அமைந்துள்ள கொடுமணல் மூலம் பண்டையக் காலத்தில் உருக்குத் தொழில் மேலோங்கி இருந்ததையும், வணிகத்தில் சிறந்திருந்ததையும் அறிய முடிகிறது. ஆற்றங்கரை நாகரிகங்களாக விளங்கும் கருவூர், மாங்குடி, பேரூர் மற்றும் கடற்கரையில் அமைந்த கொற்கை, அழகன்குளம், அரிக்கமேடு என 33 தொல்லியல் தளங்கள் மூலம் தமிழ் நிலத்தின் வரலாறு பதிவு செய்யப்பட்டுள்ளது.

இத்தகைய சிறப்பு வாய்ந்த தொல்லியல் தளங்கள் கண்டுபிடிக்கப்பட்ட விதம், இலக்கியச் சான்றுகள் என ஒருங்கிணைந்த பல தகவல்களைத் தெரிந்து கொள்ள முடிகிறது. தமிழக வரலாற்றை ஆதாரப் பூர்வமாக அறிய விரும்புவோர் கட்டாயம் படிக்க வேண்டிய நூல்.



# அமைதியாக ஓடும் ஆழமான ஆறுகள்

## ஆனந்த் சீனிவாசன்

எதிர்பாராமல் அந்த ஹோட்டல் லாபியில் நின்றிருந்த என்னைப் பார்த்து அவன் வேகமாக வந்துகொண்டிருந்தான். ‘ ஹாய்’ என்று அவன் சொன்னதும் எனக்கு முதலில் ‘சட்’டென்று ஞாபகம் வராமல் போனது. அவன் என் அருகில் வந்து அடையாளம் கண்டு கொண்டு, ‘டேய் சுந்தர்! எப்படிடா இருக்கே?’ என்றான். அவன் சிரிப்பை உணர்ந்ததும் ‘சட்’டென்று, ‘நீ கணேஷ் தானே?’ என்றேன்.

‘ஆமாண்டா’

நான் மீண்டும் அவனைச் சந்திப்பேன் என்று நினைக்கவில்லை. அன்று பார்த்த மாதிரியே மிக எளிமையாக இருந்தான். ஆனால், நானோ கொஞ்சம் ஆடம்பரமான டிரஸ் போட்டிருந்தேன். சரியாக 45 ஆண்டுகள் இருக்கும் என நினைக்கிறேன். என் நினைவுகள் மெல்ல, மெல்ல மன்னார்குடியில் வாழ்ந்த வாழ்க்கைக்குப் போனது.

என் அப்பாவுக்குப் பதவி உயர்வு பெற்று ஒத்தைத் தெரு மின்சார அலுவலகத்தில் தலைமை மின்பொறியாளர். ஜூலை மாத நடுவில் பணியிடமாறுதல் கிடைத்ததால், ‘எனது 11—ஆவது வகுப்பின் படிப்புக்குத் தடைபடுமோ?’ என்று கவலைப்பட்டார். ஆனால் அவருடைய செல்வாக்கால், மன்னார்குடி ஹை ஸ்கூலில் நான் பதினோராம் வகுப்பு மிகுந்த சிபாரிசுடன் சேர்ந்த புதிது. அந்தப் புகழ் பெற்ற பள்ளியில் ‘டி’ செக்ஷன்.



என் பக்கத்தில் அவன். அவன் ஏழ்மை வடிவம் அவன் தோற்றத்தில் நல்லாவே தெரிந்தது. ஆனால் நன்கு படிப்பவன். கணக்கு வாத்தியார் கரும்பலகையில் கணக்குப் பாதிப் போட்டுக் கொண்டிருக்கும்போதே ‘கிடு.. கிடு’வென அந்தக் கணக்கை முடிப்பான். அப்படி ஒரு வேகம். காலாண்டு தேர்வில் நான் கணக்கிலும், ஆங்கிலத்திலும் தேர்ச்சி அடையவில்லை.

அப்பா என்னிடம், ‘ஒனக்கு சிரமப்பட்டு அட்மிஷன் வாங்கி என்ன பிரயோசனம்? நீ பொறுப்பு இல்லாமல் ஃபெயில் ஆகியிருக்கே? ஆர் யூ நாட் அஷமெடு?’ என்று இங்கிலீஷில் கன்னாபின்னவென்று திட்டு வேறு.

‘இரண்டுக்கும் டியூஷன் வைக்கணும். அப்ப தான் நீ உருப்படுவே. சாயந்திரம் ஸ்கூல் வரேன்.’

சொன்னபடியே அன்று மாலை இங்கிலீஷ் வாத்தியாரையும் கணக்கு வாத்தியாரையும் சந்தித்து கேட்டபோது, ‘ஏற்கெனவே டியூஷன்ல

நிறையப் பசங்க. இருக்காங்க? என்னால ஒங்க பையன் மேல தனிக் கவனம் செலுத்த முடியாது.. சாரி' என்று சொல்லவும் இருவருமே திரும்பியிருந்தோம். வகுப்பு வாத்தியார் 'எஸ்ஸார்' என்று சொல்லப்படும் ராமச்சந்திரன் சாரிடம் கேட்டபோதும் மறுத்து விட்டார் .அவர்கள் சொன்ன அதே பல்லவி சரணம்தான். இவரும் சொன்னார்.

சோகத்துடன் திரும்பிய இருவரையும் பார்த்த கணேஷ், ' யூ டோண்ட் வொர்ரி சுந்தர். நீ அரையாண்டு என்ன? பப்ளிக் எக்ஸாமிலும் சென்டம் வாங்கற? 'அங்கிள் நீங்க எதுக்கு டியூஷன் வைச்சு பணம் கொடுக்கணும். வேண்டாம்.' நான் சுந்தர் மேத்ஸ்ல சென்டம் வாங்க வைப்பேன்' என்றான்.

தினமும் மாலை வகுப்புகள் முடிந்தவுடன் அன்று நடந்த கணக்குப் பாடத்தையும் ஆங்கிலபாடத்தையும் மீண்டும் நடத்தி எனக்கு நன்கு புரிய வைப்பான். எனக்குக் கணக்கு சொல்லிக் கொடுப்பதால் மட்டும் அவன் மீது பாசமும் பிரியமும் கிடையாது. பொதுவாக அவனின் அமைதியும் பிறருக்கு உதவும் தன்மையும் எனக்குப் பிடித்திருந்தது . ஆர்ப்பாட்டம் என்பதே துளியும் கிடையாது. பள்ளிக்கு வெளியில் உள்ள வள்ளலார் டீக்கடையில், இடைவேளை பீரியட் சமயம் மற்ற மாணவர்களுடன் வடையும் டீயும் குடிக்கும்போது, கணேஷை, 'குடிடா?' என்றால் கூட குடிக்க மாட்டான். அந்த அளவுக்கு சுய கௌரவம் அதிகம் பார்ப்பான்.

இவ்வளவுக்கும் அந்தக் கடை வடையும் டீயும் தரமாக இருக்கும். அந்தக் கடை முதலாளி மாணவர்களின் உடம்புக்கு ஏதும் ஆகக் கூடாது என்கிற நல்ல எண்ணத்தில் தரமான பதார்த்தங்களைச் செய்யக் கூடியவர்.

மேல் இரண்டாம் தெரு அவன் வீட்டை தாண்டி எஸ்ஸார் வகுப்பு வாத்தியார் வீட்டை தாண்டி தான் என் வீட்டுக்கு போகணும். அன்று கணேஷ் ஸ்கூல் வரவில்லை. முதல்முறையாக அவன் வீட்டைப் பார்த்த போது என் கண்ணில் தண்ணீர் வந்தது. சாதாரண வீடு தான் .அப்பா எங்கோ பக்கத்துக் கிராமத்தில் உள்ள பண்ணையார் வீட்டில் கணக்குப் பிள்ளை வேலை. நெல் சம்பளம் மட்டும்தான். உடம்பு முடியாத அம்மாவுக்கு அன்று பணிவிடை செய்து கொண்டிருந்தான்.

'டேய் சுந்தர் ?என்னடா திடும்ன்னு..'

'இல்லை கணேஷ்... நீ இன்னிக்கு ஸ்கூல் வரலியா.. அதான் பாக்க வந்தேன்.'

அவன் வீட்டுத் திண்ணையில் ஆறாம் வகுப்பு முதல் 11—ஆம் வகுப்பு வரை படிக்கும் மத்த



ஸ்கூல் ஏழை பசங்க, பணக்கார, நடுத்தரப் பசங்க டியூஷன் படித்துகொண்டிருந்தார்கள்.






ஏழை பசங்ககிட்ட மட்டும் பணம் வாங்காமல் மற்றவர்களிடம் வாத்தியார் வாங்கும் பீஸை விட குறைவாக வாங்கி கொண்டு காலை எட்டு மணியில் இருந்து 9 மணி வரை டியூஷன் பின் ஸ்கூல். பிறகு இரவு 7 மணியிலிருந்து 8 மணி வரை டியூஷன். அந்த வீட்டில் மேல் செலவுக்கு இவன் டியூஷன் ஃபீஸ் தான் வருமானம். 'நாம் கற்ற கல்வியைப் பிறருக்கு சொல்லிக்கொடுக்கும் போது அதற்கு ஊதியம் வாங்கக் கூடாது' என்று என் அப்பா பணம் கொடுத்தபோது வாங்க மறுத்தவன்.

அப்பா அப்போது ஒரு பழமொழியை ஞாபகப்படுத்தினார். 'ஆகுங்காய் பிஞ்சில தெரியும்' என்று. அதன் விளக்கத்தையும் சொன்னார். கணேஷ் அப்படி ஒரு நல்ல ப்ரெண்ட் என்றார். ஆனால் அவன் அம்மா தான் குடும்பச் செலவை எப்படிச் சமாளிப்பது என்று வற்புறுத்தியதால் ஏழைப் பையன்களைத் தவிர்த்து மற்றவர்களிடம் ஃபீஸ் வாங்கிக் கொண்டிருந்தான். அந்தப் பள்ளியில் படித்த அந்த நாள்கள் பொன்னான காலம்.

எல்லா சப்ஜெக்டிலும் நல்ல மதிப்பெண்கள் வாங்கியதால், அவன் பள்ளியின் முதல் மாணவன். நான் அவன் முயற்சியால் கணக்கில் நூற்றுக்கு நூறு வகுப்பில் இரண்டாவது மாணவன். அப்பாவுக்கும் சந்தோஷம் . கணேஷ் நல்லா படிப்பவன் மட்டுமல்ல;

கிளாஸ் ஆரம்பிக்கும் முன்பு அந்தந்த வகுப்பு வாத்தியார் வரும் வரைக்கும் அந்த வாத்தியார் பேச்சு, செயல் எல்லாவற்றையும் மிமிக்ரி செய்து வகுப்பை கலகலப்பாக வைத்திருப்பான்.

மற்ற வாத்தியார்கள் இந்த மிமிக்ரி குறும்பை 'ஸ்போர்ட் டிவா' எடுத்துகொண்டனர். ஆனால் எஸ்ஸார் சார் மட்டும் அதைரசிக்கவில்லை. மொத்தம் 56 பேர். அதில் நான்கு மாணவிகள். அரையாண்டு வரை மற்ற மாணவர்கள் மத்தியில், கணேஷை கொண்டாடியவர், அந்தச் சம்பவத்துக்குப் பிறகு அவனை வெறுப்புடன் பார்க்க ஆரம்பித்தார்.



அன்று ஞாயிற்றுக்கிழமை மதியம் 4 மணிக்கு, கிரிக்கெட் விளையாட என்னையும் கூப்பிட்டு இருந்ததால் அவன் வீட்டுக்குச் சென்றேன். கணேஷ் வேட்டியை மடித்துக் கட்டி கொண்டு, கால் ட்ராயர் தெரியும்படி, கையில் கிரிக்கெட் பேட்டை வைத்துகொண்டு, வீட்டுக்குள் இருந்து வேகமா, வெளியே ஓடி வரவும், எஸ்ஸார் சார் கடக்கும்போது , கக்கத்தில் இருந்த பேட் கீழ விழுந்து விட ,அவரைப் பார்த்த பயத்தில் அனிச்சையா வேட்டியை இறக்கி விட்டு ,'சாரி சார்' என்று சொல்லியும் நானும் 'சாரி சார்' என்று சொல்லியும், அவர் அவன் சொன்னதைக் காதில் வாங்காமல் எங்களைக் கடந்துச் சென்றார்.

மறுநாள் வகுப்பில் ஜாடை மாடையாக அவன் பெயர் என் பெயர் குறிப்பிடாமல், 'என்ன பிரயோசனம்? ரேங்க் வாங்கியும் வாத்தியார்ன்னு சிலருக்கு மரியாதை துளி கூடதெரியவில்லை?' என்றார்.

நானும், கணேஷும் 'சாரி' கேட்டும் ,அவர் மனது ,எங்களை மன்னிக்கவில்லை என்று பின் வரும் வகுப்புகளில் எங்க இரண்டு பேரையும் மட்டும் அவர் டார்ச்சர் செய்தபோது தெரிந்தது.

ஒருநாள் மதிய உணவு இடை வேளை முடிந்து, முதல் பீரியட் ஷேக்ஸ்பியர் 'டெம்பஸ்ட்' பாடம் ரிவிஸன். அன்று வீட்டில் ஏதோ விசேஷ சாப்பாடு சாப்பிட்டு வந்த மயக்கம். தூங்கி தூங்கி, பக்கத்துச் சீட்டில் இருக்கும் என் தோளில் விழுந்த, அவனை நிமிர்த்திவிட , இதைக் கவனித்த வாத்தியார், கணேஷை எழ சொல்லி கேள்வி கேட்டார்.




'ப்ரோஸ்பரோ யார்?' என்று கேட்டதற்கு, 'மிரண்டாவின் மனைவி' என்று தூக்க கலக்கத்தில் சொல்லிவிட வகுப்பு முழுவதும் நக்கல் சிரிப்பு. உண்மையில், 'ப்ரோஸ்பேரோ மிரண்டாவின் தந்தை' என்று சொல்லியிருக்க வேண்டும். பலமுறை அப்படித்தான் அவன் சொல்லி உள்ளான் ஆனாலும் அவர் ஸ்போர்டிவா எடுத்துகொள்ளாமல் அவனையும் என்னையும் 'கெட் அவுட் பிரம் தி கிளாஸ்' என்று விரட்டி விட்டது அவமானமாகப் போனது.

'பாருங்க உங்களை விட இந்த நாலு பெண்ணுங்க தான், முதல் நாலு ரேங்க் வாங்க போகுதுன்னு' என்று அடிக்கடி வகுப்பில் சொல்லி கொண்டு இருந்தார்.

ஆண்டுத் தேர்வு பப்ளிக் எக்ஸாம். ஹால் டிக்கெட் வாங்கிய பிறகு ,அவரிடம் வாழ்த்து பெற போனபோது, அவர் 'முகத்தைத் திருப்பிக் கொண்டார். அவர் எங்கள் இருவரையும் அவமானப்படுத்திய விதம், எங்க இரண்டு பேருக்கும் படிப்பில் ஒரு வெறியையும், புத்துணர்ச்சி யையும் கொடுத்தது . எல்லா பரீட்சைகளையும் நன்றாகவே எழுதியிருந்தோம். அவருக்கும் அந்த வருட பேட்ச் மாணவர்கள் 56 பேரும் பாஸ். ஒருங்கிணைந்த, தஞ்சை மாவட்டத்தில் முதல் மாணவன். பள்ளியிலும் முதல் மாணவன் என்பதால் அவன் போட்டோ தாங்கி நின்றது. எல்லா பாடங்களிலும் 80 விழுக்காடு. கணக்கில் நூற்றுக்கு 100. 1970களில் 80 சதவீதம் வாங்குவது மிகவும் சிரமம்.

எஸ்ஸார் வாத்தியாரின் வகுப்பில் முதல் முறையாக எல்லோரும் ஆல் பாஸ், அதுவும் அந்தப் பள்ளியில் இவர் வகுப்பு மட்டும் 'ஆல் பாஸ்' என்றதும், சக ஆசிரியர்கள். தலைமை ஆசிரியர்,வகுப்பு மாணவர்கள் எல்லோருக்கும் தன் சொந்த செலவில், எஸ்ஸார் சார் ஒரு தேநீர் விருந்து, ஏற்பாடு செய்தார். விருந்து தினம் அன்று எங்கள் இருவரையும் கூப்பிட்டு அனுப்ப நான்கு முறை ஆள் அனுப்பியும் , நாங்கள் கலந்து கொள்ளவில்லை. பின்னர் அவன் கல்லூரி படிப்புக்குத் திருச்சி புனித வளனார் கல்லூரி செல்வதாகவும், திருவானைக்கோவிலில் உள்ள திருவாவடுதுறை ஆதீனம் சார்பில் ஏழை மாணவர்களுக்குச் சாப்பாடும், தங்குமிடமும் கொடுக்கும் சத்திரத்தில் படிக்கப் போவதாகவும் டிகிரி வரை கவலை இல்லை என்றும் சொல்லிவிட்டுப் போனான். எங்க வீடு வசதி என்பதால், நான் பக்கத்தில் உள்ள பூண்டி புஷ்பம் கல்லூரியில் டிகிரி முடித்தேன்.



அடுத்த நான்கு வருடத்தில் ஓரிருமுறை சந்தித்துப் பேசியதுதான். பாதைகள் மாறியது. பயணங்களும் மாறியது. எந்தவித போக்குவரத்தோ, இல்லை.

இப்போது லாபியில் அவனைப் பார்த்தபோது அவன் மிக எளிமையாக முன்பு பார்த்த மாதிரி இருந்தான். எளிய உடைகளை அணிந்திருந்தான். தோற்றமும் அப்படியே. என்னுடன் ஒப்பிடுகையில், என்னைவிட கொஞ்சம் வசதி குறைவாகவே தான் தெரிந்தது. அதுக்கு காரணம் என் வீடு வசதி அதிகம். என் மனைவி வீடும் வசதி அதிகம்தான். அவன் பாவம் சிரம நிலையில் இருக்கிறான் என்று நினைத்தேன்.

நான் கொஞ்சம் கர்வத்துடன் அதே சமயம் நிம்மதியாகவும் உணர்ந்தேன். கடவுள் என்னை நல்ல நிலையில் வைத்துள்ளார் என்று. அந்த ரிசார்ட் வகை ஹோட்டலில் டைனிங் ஹாலில் காப்பி குடித்துகொண்டே வகுப்பில் அடித்த கூத்துகள் பற்றிப் பேசினோம். தமிழ் வாத்தியார் பாடம் நடத்தும்போது ,கடைசிப் பெஞ்சுக்கு நான் போய் நிம்மதியாகத் தூங்கியதையெல்லாம் நினைவுக்கு வந்தது.

ஒருநாள் தமிழ் வாத்தியார், ‘ மாடு மேய்க்க தான் நீ லாயக்கு’ என்று திட்டியதும் வகுப்பு முடிஞ்சதும் ‘செய்யட்டுமா? இல்லை இப்பவே போகட்டுமா சார் ?’ என்று நான் சொன்னதைக் கேட்டு,மொத்த வகுப்பும் கணேஷ் உட்பட மாணவர்கள் சிரித்துச் சிரித்து வயிறு வலிக்கும் அளவுக்குப் போனது.

‘எஸ்ஸார் தங்களைப் பழிவாங்கியது, ரமாகிட்ட கோண்டு லவ் புரோபோசல் பண்ணி அடி வாங்கியது, வள்ளலார் கடை பின்புறம் விசு சாஸ்திரிகள் வீட்டு பையன் தம் அடித்ததை அந்த வழியா வந்த விசு அப்பாகிட்ட கோண்டு போட்டுக் கொடுத்தது, சோஷல் ப்ரேக் அன்னிக்கு எல்லோருக்கும் ஒத்த தெரு பிள்ளையார் கோயிலில் வகுப்பில் காசு வசூல் பண்ணி பிள்ளையாருக்கு அபிஷேகம் பண்ணி பிரசாதம், சர்க்கரைப் பொங்கல், புளியோதரை சுண்டல் வாங்கி அதை வகுப்பில் உட்கார வைத்துப் பரிமாறிக் கொண்டிருந்த போது, கரண்ட் கட் ஆனதும் , இது தான் சமயம் எனத் தன்னைப் பழி வாங்கிய ரமாவின் இலையில் அவளுக்குப் பிடிக்காத சர்க்கரைப் பொங்கலை உக்கார்ந்து இடத்திலிருந்து ரமா இலைக்குத் தன் இலையில் பரிமாற பட்டத்தை தூக்கிப் போட்டது, அவள் புரியாமல் தவித்தது..’ என அப்பப்பா எவ்வளவு இனிமையான நினைவுகள்.

கிட்டத்தட்ட ஒரு மணி நேரத்தில் எல்லாவற்றையும் மலரும் நினைவுகளாக நாங்கள் இருவரும் பகிர்ந்தபோது அது சந்தோஷத்தைக் கொடுத்தது. குழந்தைகளாக மாறிவிட்டோம் என்றால் அதுதான் உண்மை. நாங்கள் தொலைபேசி எண்களையும், தொடர்பு விவரங்களையும் பரிமாறிக் கொண்டோம். என் கார்டை கொடுத்தபோது அவன் முகத்தில் ஒரு மகிழ்ச்சியைக் காண முடிந்தது. ஆனால் கணேஷ் என்ன செய்கிறான் என்கிற விவரத்தை கேட்க மறந்துவிட்டேன்.




இருவரும் எங்களுடைய காரை எடுக்க பார்க்கிங் இடத்துக்குச் சென்றோம் .அவன் காரைப் பார்த்ததும் பழையதாகத் தோன்றியது.அது ‘2001 சான்ட்ரா’ மாடல் கார். லாபியில் அந்த வார ஞாயிற்றுக்கிழமை என் வீட்டில் மதிய உணவுக்கு அவனை, அவன் மனைவியுடன் அழைத்ததை மீண்டும் அவன் தன் காரில் ஏறும்போது நினைவூட்டினேன்.

‘நிச்சயமாக வருகிறேன்’ என்றான்.

அடுத்த ஞாயிற்றுக்கிழமை நான் வசித்த பார்க்வியூவுக்கு அவன் மட்டும் காரில் வந்தான். தன் மனைவியை அழைத்து வர முடியாததற்குக் காரணம் சொன்னான். எனது வீட்டைப் பார்த்து ஈர்க்கப்பட்டது மட்டுமல்லாமல், ‘வெகு நேர்த்தி’ என்று சொன்னதும் என்னைவிட என் மனைவி

மிகவும் சந்தோஷமானான். அந்த வீட்டை வாங்க அவள் அப்பாவிடமிருந்து அறுபது சதவீதம் பண உதவி .மீதி லோன் போட்டுக் கடனில் தான் வாங்கி இருந்தேன். நாங்கள் மதிய உணவு சாப்பிட்டோம். மனைவியின் சமையலை வெகுவாகப் பாராட்டினான்.

‘அன்னிக்கு கேட்கணும்ன்னு நினைச்சேன்; அவசரமாக நீ கிளம்பி போனதால் கேட்க முடியல .நீ இப்ப என்ன பண்ணிட்டு இருக்கே?’ என்று நான் கேட்டபோது, ‘நான் என்ன செய்கிறேன் என்று நேரில் வந்து பாரு. இப்போதைக்கு அப்படித்தான் சொல்ல முடியும்‘ என்றான்.



ஏதோ அவன் சிரம நிலையில் இருப்பதாக உள்ளுக்குள் நினைத்து இப்படிக் கேட்டேன். ‘ஏதாவது உதவி வேண்டுமா கணேஷ்?’

தனக்கு ஒரு பிரச்னையும் இல்லை. நலமாக இருப்பதாகக் கூறி மறுத்துவிட்டான். ஆர்வம் மிகுதியால், ‘ஏதாவது கடனில் இருந்தால் சொல்லு நண்பனுக்காகக் கடனை அடைக்க உதவுகிறேன்.தயக்கம் வேண்டாம் கணேஷ்’ என்று கூடச் சொல்லிப் பார்த்தேன்.

‘டேய் சுந்தர் ! எப்ப வேணும்ன்னு எனக்குத் தோணும்போது, நிச்சயமாகக் கேட்பேண்டா!’ என்று புன்முறுவலுடன் சொன்னான் கணேஷ்.

சுந்தருக்கு மனதில் ஒரு எண்ணம் பிறந்தது.நிச்சயம் ஒரு நாள் தன்னை நாடி வருவான் என்று. வாசல் வரை வந்து கணேஷை வழி அனுப்பும்போது டைனிங் டேபிளில் சொன்னதை மறுபடியும் சொல்றேன்.

‘நீங்க இரண்டு பேரும் அவசியம் என் வீட்டுக்கு லஞ்ச்சுக்கு வரணும். நான் வீட்டுக்குப் போனதும் மனைவியுடன் கன்சல்ட் பண்ணி என்னிக்கு அழைக்கணும்ன்னு சொல்றேன்டா?’ என்றான் கணேஷ்.

அவனுடைய பழைய காரில் ஏறி கிளம்பி போனான் கணேஷ். என்னிடம் சொகுசான கார் வைத்திருப்பதற்கு நான் கடவுளுக்கு நன்றி சொன்னேன் .



‘விரல்கள் அனைத்தும் சமமாக இல்லை’ என மனதுக்குள் நினைத்துகொண்டேன்.

நான் அதிர்ஷ்டசாலி. நான் நல்ல கம்பெனியில் வேலை செய்கிறேன். நல்ல சம்பளம். சொகுசான வீடு.ஒரு ஆண் ,ஒரு பெண் குழந்தைகள்.மாமனார் சப்போர்ட் வேறு கூடுதல் பலம்.

இரண்டு வாரங்கள் கழித்து, ஒரு ஞாயிற்றுக்கிழமை மதியம் லஞ்சு சாப்பிட கூப்பிட்டு இருந்தான். கணேஷின் அந்தஸ்தில் அவள் ஈர்க்கப்படாததால், என் மனைவி கொஞ்சம் தயங்கி, ‘நானும் வரணுமா?’ என்றாள். கூட வர தயங்கினாள்.

‘பள்ளியில் நாங்கள் நெருங்கிய நண்பர்கள் என் படிப்புக்கு நிறையச் சொல்லிக் கொடுத்தவன், போகாமல்இருந்தால்நல்லா இருக்காது’ என்பதைச் சொல்லி அவளைச் சமாதானப்படுத்த வேண்டியிருந்தது. கடைசியில் வர சம்மதித்தாள். அவன் தங்கியிருக்கும் இடம் கடல் மட்டத்திலிருந்து 200 அடி மேல். இருந்தது போகும் வழியில் ஒரே பசுமை. தேயிலை எஸ்டேட்டைப் பார்த்துகொண்டே பயணித்தோம்.

அவனது வீட்டுக்குச் செல்லும் வழியைக் கேட்டோம். அவனுடைய பெயரை கேட்டவுடன் மரியாதையுடன் எழுந்து நின்று பேசினார்கள். வழியைச் சொன்னார்கள். அது ஒரு எளிய ஆனால் அழகான வீடு. ஒரு 4 படுக்கையறை பங்களா. முன்னால் இரண்டு பழைய மாடல் கார் நிற்பதைப் பார்த்தேன். வீட்டுக்குள் நுழைந்தபோது, வீட்டின் உள்ளே மனதை தொடும் அழகுடன் எளிமையாக நேர்த்தியாக இருந்தது. நுழைந்ததுமே ஒருவித இதமான மெல்லிசை, கூடவே வீடு முழுவதும் நறுமணக் காற்று உள்ளத்தைக் கொள்ளை கொண்டது. எங்களை வாசலிலேயே அன்புடன் வரவேற்றான் கணேஷ்.

போனவுடன் நறுமணம் மிக்கக் காப்பி கொடுத்தான். பின்னர் வீட்டைச் சுற்றி காண்பித்தான். மதிய உணவு நன்றாகப் பரிமாறப்பட்டது. அந்த நேரத்தில் அங்கிருந்த பட்டாபி, எஸ்ஸார் பையன் மாதிரி இருந்தது. அவனோடு பழகியது இல்லை. கையில் லேப் டாப் வைத்திருந்தான் கணேஷ். ஏதோ சொல்ல டைப் அடிக்கக் கொஞ்ச நேரம் கழித்துப் பிரின்டு எடுத்து வந்தான்.

‘உன் மைண்ட் வாய்ஸ் கேட்டுது சுந்தர் நீ நினைச்சது சரி தான். பட்டாபி எஸ்ஸார் பையன் தான். எஸ்ஸார் இறந்து போனதை கேள்விப்பட்டு பட்டாபியை வரச் சொல்லி என்னுடன்

வைத்துள்ளேன். இப்ப அவன் என் பெர்சனல் அசிஸ்டன்ட்.'

மதிய உணவின்போது, எனது எம்.டி. பற்றிப் பேச்சு வந்தது .

'கோபிநாத்தா? நாங்க இரண்டு பேரும் நண்பர்கள்டா?' என்றான் கணேஷ். அருகில் இருந்த டேபிள் ஒன்றில் கம்பெனி கிஃப்ட் ஹாம்பேர் ஒன்றைப் பார்த்தேன். நான் பணிபுரியும் கம்பெனியின், சுமார் 50% பங்குகளை அந்தக் கம்பெனி வைத்திருந்தது எனக்குத் தெரியும். அதுபற்றி விசாரித்தேன். என்னிடம், அந்தக் கம்பெனி தன்னுடையது என்று சொன்னான்.



இப்படிச் சொன்னதும் அதிர்ச்சியை நான் காட்டிக் கொள்ளவில்லை. வீட்டின் பின்புறம் உள்ள இந்தப் பெரிய தோட்டமும் தனக்குச் சொந்தமானது என்றும் சொல்ல வியப்பில் ஆழ்ந்தேன் , எவ்வளவு நேர்த்தியாக அழகாக ஒரு தோட்டம். ஒரு பக்கம் காய்கறிகள். இன்னொரு பக்கம் பழ தோட்டங்கள். பணியாள்கள் மிக அக்கறையுடன் தோட்டத்தைப் பராமரித்து வருவது தெரிந்து. உடம்புக்கும் மனதுக்கும் நிம்மதி தந்தது என்றால் அது உண்மை.

நான் கொஞ்சம் மிரண்டு போனேன்.எனக்குப் பெரிய பிரமிப்பு ஏற்பட்டது. அது அடங்க வெகு நேரமாயிற்று! இதுவரை 'வாடா' என்று கூப்பிட்டு வந்தவன் , எப்போது 'சார்' என்று கூப்பிட்டேன் ஏன் என்று தெரியவில்லை.

கிளம்பும்போது என் மனைவிக்குப் பட்டு புடவை வெள்ளிதட்டு தாம்பூலம். என் குழந்தைகளுக்கு டிரஸ். போன்றவற்றை அவன் மனைவி கொண்டு வந்தார். அப்போது தான் கவனித்தேன் ஒரு கால் ஊனத்தோடு.

'சாரிடா இப்போது தான் அவள் டாக்டரை பார்த்து விட்டு வந்தாள்?'

என்னையும் என் குடும்பத்தையும் அறிமுகப்படுத்தினான்/ தினார். தோட்டத்தில் காய்த்த பழங்கள் ,காய்கறிகளைக் காரின் டிக்கியில் பணியாளர்கள் வைத்தார்கள்..அவன் டேபிளில் இருந்த கிஃப்ட் ஹாம்பேரை என்னிடம் கொடுத்தான்.

அன்று பணிவு எப்படி என்பது பற்றி நான் ஒரு பாடம் கற்றுக்கொண்டேன். அது ஒரு பெரிய பாடம். தோற்றம் ஏமாற்றும். 'யாரையும் தரக்குறைவாகவோ,ஏளனமாகவோ, நினைக்கக் கூடாது' என்று நினைத்தேன். அன்று லாபியில் என் அந்தஸ்து பற்றி நான் கொண்ட கர்வம் இன்று கணேஷ் இருக்கும் நிலைமை. அவன் உழைப்பால், இந்த இடத்தை அடைந்துள்ளது என்பது மட்டும்




நிச்சயம். அவனை அவமானப்படுத்திய எஸ்லார் பையனுக்கு வேலைப் போட்டுக் கொடுத்து, தன்னுடன் வைத்துள்ளான். இரண்டுக்கும் உள்ள இடைவெளி பார்த்தபோது, நான் வெட்கப்பட்டேன். 'அல்பனுக்கு அந்தஸ்து வந்தால் அர்த்தராத்திரியில் குடை பிடிப்பானாம்' என்கிற பழமொழி நினைவுக்கு வந்தது. 'நிறைகுடம் தளும்பாது' என்ற பழமொழிக்கு அவன் பொருத்தமானவன்.

வீட்டுக்குத் திரும்பும்போது காரில் நான் மிகவும் அமைதியாக இருந்தேன். என் மனைவி பணிவாகவும் மிகவும் அமைதியாகவும் இருந்தாள். அவள் மனதில் உள்ள எண்ணங்களை என்னால் உணர முடிந்தது. கார் கண்ணாடியில் நான் என்னையே பார்த்தேன். கடன்கள், சுமைகளில் பகட்டான வாழ்வு வாழ்கிறேன், ஆனால் ,எனக்குச் சம்பளம் கொடுப்பவர் மிகவும் அமைதியானவர், எளிமையான வாழ்க்கை வாழ்கிறார்.

உண்மையில் ஆழமான ஆறுகள் அமைதியாகத் தான் ஓடுகின்றன.

# அறிவோம் தமிழர்

## குயிலி வரலாறு

சிவகங்கை ராணி வேலு நாச்சியாரின் மெய்க்காப்பாளராக இருந்தவர் குயிலி, 1780 ஆம் ஆண்டு ஆங்கிலேயரை எதிர்த்து சிவகங்கையை மீட்க வேலு நாச்சியார் நடத்திய போரில், தற்கொலை படையாக மாறி உடலில் எண்ணெய் பூசிக்கொண்டு ஆங்கிலேயரின் ஆயுதக்கிடங்கிற்கு தீவைத்து தன்னுயிரையே பலியாக்கி சிவகங்கை சீமையின் வெற்றிக்கு உதவியவர் இவர்.

ஆங்கிலேயர்களை எதிர்த்த வீரப்பெண்களில் வேலுநாச்சியாரும், குயிலியும் முக்கியமானவர்கள். அவர்களின் போர் தந்திரம், வீரம், விவேகம், சமூகநீதி, தாய்நாட்டுப்பற்று ஆகியவை நம் கண்முன் தோன்றி நிற்கின்றன. நவராத்திரி விழாவின் கடைசி நாளான விஜயதசமி தினத்தன்றுதான், சிவகங்கை அரண்மனைக்குள் ஆங்கிலேயர்கள் குவித்து வைத்திருந்த ஆயுதக் கிடங்குக்குள் குயிலி தன் உடல் முழுவதும் எண்ணெய் தடவி தீ வைத்துக்கொண்டு குதித்தார். இதனால், ஆங்கிலேயர்களின் ஆயுதக்கிடங்கு முழுவதுமாக அழிக்கப்பட்டது. குயிலி ஆயுதக்கிடங்கை அழித்த தினம் செப்டம்பர் 30.

பெரியமுத்தன் — ராக்கு தம்பதியினரின் மகளாகப் பிறந்தார் குயிலி. தயார் ராக்கு விவசாயத் தொழிலில் மட்டுமல்ல; வீரத்திலும் கெட்டிக்காரர். யாராலும் அடக்கமுடியாத காளை ஒன்று, அந்தக்காலத்தில் விவசாயத்தை அழித்துக்கொண்டிருந்தது. அந்தக் காளையை அடக்கப்போய் அதன் கொம்பு முட்டியதில் உயிரிழந்தார். நீண்டநாள்கள் குழந்தையில்லாமல், குயிலியைப் பெற்றதால் குயிலி மீது தந்தை முத்தன், அளவுகடந்த பாசம் வைத்திருந்தார். மனைவி ராக்கு இறந்த துக்கம் தாங்காமல் குயிலியை அழைத்துக்கொண்டு சிவகங்கை அருகேயுள்ள முத்துப்பட்டி என்ற கிராமத்துக்கு முத்தன் சென்றுவிடுகிறார். அங்கிருந்த பட்டியல் இன மக்களோடு சேர்ந்து அரண்மனைக்கு தோல்தைக்கும் வேலைக்குச் செல்கிறார்.



வேலுநாச்சியாரின் வீரம் பற்றி குயிலியின் இளம் வயதிலேயே எடுத்துக்கூறி வளர்த்தார் முத்தன். வேலுநாச்சியாரின் வீரமும், விவேகமும் இளம் ரத்தத்திலேயே பாய்ச்சப்பட்டதால் குயிலியும் வீரபெண்மணியாக உருவெடுத்தார். ஒரு கட்டத்தில் குயிலி, வேலுநாச்சியாரைப் பார்க்கவேண்டும் என்று எண்ணும்போது, பாதுகாவலர்கள் அவருக்கு அனுமதி மறுத்தனர். பாதுகாவலர்களிடம் முத்தனும் கேட்டுப்பார்த்து முடியாமல் போய்விடுகிறது. இந்தத் தகவல் வேலுநாச்சியாருக்குப் போனதும் முத்தனையும், குயிலியையும் அழைத்து, "நீங்கள் அரண்மனையில் எங்கு வேண்டுமானாலும் சென்று வரக்கூடிய அளவுக்கு சுதந்திரம் உண்டு" என உத்தரவிடுகிறார். காலப்போக்கில் வேலுநாச்சியாரின் அன்பிற்குரியவராக அவரின் மனதில் இடம்பிடித்தார் குயிலி. வேலுநாச்சியாருக்கு சிறந்த ஒற்றனாகச் செயல்பட்டார் குயிலியின் தந்தை முத்தன்.

வேலுநாச்சியார், குயிலியை தன்னுடன் வைத்திருக்கிறார். தன் தந்தையைப் போலவே அவ்வப்போது சிவகங்கைப் பகுதிக்குள் என்ன நடக்கிறது என்கிற தகவல்களைக் கொண்டு வந்து சேர்த்திருக்கிறாள் குயிலி. இதனால் பெரும் நம்பிக்கைக்குரிய உளவாளி என பெயர்பெற்றார். இந்தச் செய்தி ஆங்கிலேயர்களுக்குத் தெரிந்ததும், 'யார் அந்த குயிலி?' என விசாரிக்கத் தொடங்கினர். குயிலி பற்றியும், சிவகங்கையைச் சுற்றியுள்ள மக்கள் யாரும் வேலுநாச்சியாரை காட்டிக்கொடுக்க மாட்டார்கள் என்பதும் ஆங்கிலேயர்களுக்குத் தெரியவருகிறது. பின்னர் குயிலியைக் கொலைசெய்ய ஆங்கிலேயர்கள் திட்டம் தீட்டினர்.

ஒருநாள் இரவு வேலுநாச்சியாரின் சிலம்பாட்ட ஆசிரியர் வெற்றிவேல் ஓர் ஓலையும், பையுமாக வந்து, "இந்த ஓலையை சிவகங்கை அருகேயுள்ள ஓர் இடத்தைச் சொல்லி அங்கே ஒப்படைத்துவிடு. அதற்குக் கூலியாக இந்தப் பையை வைத்துக்கொள்" என்று சொல்லியபோது மறுக்கமுடியாமல்

# பெருமை

குயிலி அந்த ஓலையை வாங்கிக்கொண்டார். அந்த ஓலையைப் பிரித்துப் படித்தபோதுதான், நாச்சியாரின் போர் தந்திரங்களும், நுட்பங்களும் அதில் எழுதப்பட்டிருந்ததைக் கண்டு அதிர்ச்சியடைந்தார்.


## பாலமுருகன். தெ


அடுத்த கணமே வெற்றிவேல் அறைக்குப் போனாள் குயிலி. இனியும் தாமதித்தால் நாச்சியாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படும் என்று எண்ணிய குயிலி, உடனே வெற்றிவேலின் உயிரை ரத்த வெள்ளத்தில் மிதக்கவைத்தாள். நாச்சியார் ஓடிவந்து பார்க்கிறாள் குயிலியின் கையில் ஓலை; மறுகையில் கொடுவாள் இருந்ததைக்கண்டு அதிர்ச்சியடைந்த வேலுநாச்சியார், குயிலியின் கையில் இருந்த ஓலையை வாங்கிப் படித்துப் பார்த்தவுடன் மெய்சிலிர்த்துப் போய் நின்றார். அந்த நிமிடமே வேலுநாச்சியாரின் மெய்க்காப்பாளராக நியமிக்கப்பட்டார் குயிலி. அதன் பிறகு மெய்க்காப்பாளரை ஏமாற்றி வேலுநாச்சியாரை கொலைசெய்ய ஆங்கிலேயர்கள் திட்டம் தீட்டினார்கள்.

வேலுநாச்சியார் ஆழ்ந்த உறக்கத்தில் இருந்தபோது, ஒரு கறுப்பு உருவம் ஊடுருவியது. அந்த உருவம் வேலுநாச்சியார் மீது கத்தியை வீசியதும்








மறுகணமே குயிலி, தன் கையால் தடுத்ததும் கத்தி கீழே விழுந்துவிட்டது. அந்தச் சத்தம் கேட்டு வேலுநாச்சியார் எழுந்து பார்க்கிறார் குயிலியின் கையில் ரத்தம். குயிலி துடிதுடித்துக் கொண்டிருந்தாள். உடனே தன்னுடைய சேலையால் ரத்தத்தை துடைத்து மருந்துபோட்டு குயிலியைக் காப்பாற்றினார் நாச்சியார். சிறு வயதிலேயே தாயை இழந்த குயிலிக்குத் தாயாக இருந்து பாதுகாத்து வந்தவர் வேலுநாச்சியார். இந்தச் செய்தியெல்லாம் ஆங்கிலேயர்களுக்குச் செல்கிறது. குயிலிக்கும், வேலுநாச்சியாருக்கும் எதிராக மக்களைத் திரட்ட திட்டம் தீட்டுகிறார்கள்.



அப்போது, மக்களிடம் சாதிப் பாகுபாட்டை ஆயுதமாக ஆங்கிலேயர்கள் பயன்படுத்துகிறார்கள். ஆங்கிலேயர்கள் தலித் மக்களின் விவசாய நிலங்களையும் ஆடு, மாடுகளையும் அபகரித்து கொடுமைப்படுத்துகிறார்கள்.

“எந்தநேரத்திலும் குயிலியின் உயிருக்கு ஆபத்து ஏற்படலாம்” என்று கருதிய வேலுநாச்சியார், பெண்கள் படைக்குத் தளபதியாக அவரை நியமித்தார். வேலுநாச்சியாருக்கு குயிலியும், குயிலிக்கு வேலுநாச்சியாரும் பாதுகாப்பு அரணாக ஒருவருக்கொருவர் இருந்தார்கள்.

பிரான்மலையில் இருந்து வெள்ளச்சி நாச்சியாரை, ஆங்கிலேயர்கள் சிறைப்பிடித்து வேலுநாச்சியாரை வீழ்த்துவது என்பது ஆங்கிலேயர்களின் திட்டம். அதன்படி வெள்ளச்சி நாச்சியாரை சிறைப்பிடித்துக்கொண்டு, காட்டுவழியாக ஆங்கிலேயர்கள் வரும் செய்தி குயிலிக்கும், நாச்சியாருக்கும் கிடைத்தது. உடனே இருவரும் காட்டுக்குள் விரைந்தார்கள். நடுக்காட்டில் நுழைந்ததும் ஆங்கிலேய சிப்பாய் வேலுநாச்சியாரை நோக்கி துப்பாக்கியை நீட்ட, உடனே குயிலி கொடுவாளைக்கொண்டு அவன் கையை வெட்டினாள். அடுத்த கணமே வேலுநாச்சியாரின் வாள், அந்த சிப்பாய் தலையைச் சீவியது. நாச்சியாரை பாதுகாப்பாக மீட்டு, விருப்பாச்சி அரண்மனைக்குக் கொண்டு வந்தனர்.



வேலுநாச்சியார் சிவகங்கைச் சீமை மக்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் அழைப்பு விடுத்தார். மக்கள் படை, திப்பு சுல்தான் படை, கோபால் நாயக்கர் படை, மருது சகோதர்கள் படை, குயிலி தலைமையில் வாள்படை வளரிபடை,கவன்கற்படை, வெட்டரிவாள் படை, வீச்சரிவாள்படை, சக்கந்தி வைரவன்படை, பெரியஉடையத்தேவர் படை என அலைகடலென விருப்பாச்சிக்கு விரைந்தனர். உடல்நலம் குன்றியிருந்த முத்தன், தனியாக ஒரு படையைத் திரட்டி, அந்தப் படைகளோடு இணைத்துக்கொண்டார்.

குயிலிக்கு எந்தநேரத்திலும் ஆபத்து ஏற்படலாம் என்பதால், யாரையும் நம்பமுடியாத சூழ்நிலை ஏற்பட்டதும், தானே ஒற்றனாக களமிறங்கினார் குயிலி. சிவகங்கை அரண்மனையில் நவீன ஆயுதங்களும் கருமருந்து பொட்டலங்களும் வெடிப்பொருள் மூட்டைகளும் வாங்கிக் குவிக்கப்பட்டிருந்தன. இந்தத் தகவல் குயிலிக்கு கிடைத்தது. அந்தத் தகவலை தன் தந்தை முத்தனிடம் கேட்டு உறுதிசெய்து கொண்டார். உடனே ஆயதக்கிடங்கில், தான் தீ வைத்துவிட்டு வருவதாகச் சொன்னதற்கு முத்தன் அனுமதி மறுத்துவிட்டார். இவரைப்போன்றெ வேலுநாச்சியாரும் “நீ சிறுவயதுப் பெண்; அப்படியெல்லாம் செய்ய வேண்டாம்“ என்று அனுமதி மறுத்தார். ஆனால், குயிலியோ முடிவு செய்துவிட்டாள். எப்படியாவது ஆயுதக்கிடங்கை அழித்துவிடவேண்டும் என்று.

சிவகங்கை சீமையை ஆண்டு வந்த மன்னர் முத்துவடுகநாதர் ஆங்கிலேய அரசாங்கத்தால் சுட்டுக்கொல்லப்படுகிறார்.கணவனின் கொலைக்கு பழி தீர்க்கப் புறப்பட்ட வேலு நாச்சியார் கடுமையான போரில் தோற்கடிக்கப்பட்டு எட்டு ஆண்டுகள் தலை மறைவு வாழ்கை வாழ்ந்து கொண்டிருந்தார். இங்குதான் காலம் வேலு நாச்சியாரையும், அவர் வெற்றிக்கு உறுதுணையாக இருந்த குயிலியையும் இணைக்கிறது. பதினெட்டு அகவை மட்டுமே கொண்ட குயிலிக்கு வேலு நாச்சியார் மேல் மிகுந்த மரியாதை.

வேலு நாச்சியாரின் சிலம்பு வாத்தியாராக

இருந்த வெற்றிவேல், அவர் ஆங்கிலேயருக்கு உளவாளி என்று அவர் எழுதிய கடிதத்தின் மூலம் அறிந்த குயிலி அவரை கொன்று தன் முத்திரையை அழுத்தமாக வரலாற்றில் பதிக்க ஆரம்பிக்கிறார். தன் மீது பற்று கொண்டு கொலையும் செய்யத்துணிந்த குயிலியை ராணி தன் மெய்க்காப்பாளராக நியமித்துக் கொண்டார் . தனது பணியில் விழிப்புடன் இருந்த குயிலி சிறிது காலத்தில் ராணி உறங்கி கொண்டிருக்கும்போது நடைபெற்ற கொலை முயற்சியை வெற்றிகரமாக முறியடிப்பதின் மூலம், பெண்களை மட்டுமே கொண்டு இயங்கும் உடையாள் படைப்பிரிவுக்கு தளபதியாகவும் நியமிக்கப்படுகிறார் .



திப்பு சுல்தான் மூலமாக ஆயுதங்கள் வந்து சேர 1780 களில் பழிதீர்க்கப் புறப்பட்டது வேலு நாச்சியாரின் படை,மூன்றாக பிரிக்கப்பட்ட அவரது படைக்கு தலைமை தாங்கியவர்கள் பெரிய மருது, அவரது தம்பி சின்ன மருது, ராணியின் பெண்கள் படை தளபதி குயிலி. மதுரை கோச்சடையில் ஆரம்பித்த முதல் போரிலேயே அவரின் படை மகத்தான வெற்றி பெறுகிறது. தொடர்ந்து ஆங்கிலேயர் படையை, காளையார்கோயில் போரிலும் வெற்றிகொண்டார். வேலு நாச்சியாருக்கு மிகப்பெரிய சவாலாக இருந்தது சிவகங்கை கோட்டையில் குவிக்கப்பட்டிருந்த ஆயுதங்கள். வெற்றி அல்லது வீர மரணம் என்று அவர் படை போரிட்டாலும், குவித்து வைக்கப்பட்டிருந்த ஆயுதங்கள் பின்னதையே தரும் என்ற நிலை.

போர் வியூகங்கள் வகுக்கப் பட்டன. திருப்பத்தூரை தோற்கடித்தது சின்ன மருதுவின் படை சிவகங்கை நோக்கி வருவது, இன்னொரு படை பெரிய மருதுவின் தலைமையில் அரண்மனையின் வெளிப்புறம் தாக்குவது. எனினும் கோட்டைக்குள் எப்படிப் போவது? அதற்கான வழியை மாறுவேடமிற்று உளவறிந்து சொன்னார் குயிலி .

ஆரம்பம் ஆகிற்று இறுதிப்போர். கோட்டையில் இருந்த அம்மன் கோயிலில் வைக்கப்பட்டிருந்த கொலுவை பார்ப்பதற்கு பெண்கள் மட்டுமே அனுமதிக்கப்பட்டனர். அவர்களுடன் பூச்சரங்களுக்குள் வாளினை வைத்து ஊடேறியது ராணியின் பெண்கள் படை .

விஜயதசமி நாளன்று அரண்மனை ராஜராஜேஸ்வரி அம்மன் கோயில் விழாக்கோலம் பூண்டிருந்தது. பெண்கள்படையினர் பழக்கூடைகள் மற்றும் பெரியமாலைகளுக்குள் சூரிக்கத்தி, கட்டாரி போன்ற ஆயுதங்களை மறைத்துக்கொண்டு




சென்றார்கள். அரண்மனைக்குள் ஆங்கிலேயப் படைகளுடன் புதுக்கோட்டை, தஞ்சாவூர் மற்றும் உள்ளூர் ஆங்கிலப் படையினரும் இருந்தார்கள். அந்தப் படையில் தமிழர்கள்தான் அதிகம் என்பதால் ஆயுதபூஜை அன்று ஆயுதங்களை வைத்து சாமி கும்பிடுவது மரபு. அந்த சமயம் பார்த்து ஆயுதக்கிடங்கில் விளக்குக்கு ஊற்றும் எண்ணெயை உடல் முழுவதும் ஊற்றிக்கொண்டு ‘வீரவேல் வெற்றிவேல்’ என்று உரத்த குரலில் குயிலி முழக்கமிட்டதும் ஆங்கிலேயர்கள் நிலைகுலைந்து போனார்கள். அப்போது தன் உடலில் தீவைத்துக்கொண்டு ஆயுதக்கிடங்குக்குள் குதித்தார் குயிலி. ஆயுதங்கள் முற்றிலும் கருகி சாம்பலாகின. தற்கொலைப்படை போராளியாக மாறினார் அவர். குயிலியின் தியாகத்தால் சிவகங்கைச் சீமை ஆங்கிலேயர்களிடம் இருந்து மீட்கப்பட்டது. இந்தத் தகவல் வேலுநாச்சியாருக்கு தெரியவந்ததும் கதறி அழுதார். குயிலியின் இழப்பை வேலுநாச்சியாரால் ஏற்றுக்கொள்ளமுடியவில்லை என்பது மறுக்கமுடியாத உண்மை.




# சிவகாமியின்

## மூன்றாம் பாகம் : பிக்ஷுவின் காதல்

### வீதி வலம் 47

ஆயிரத்து முந்நூறு வருஷங்களுக்கு முன்னால் பரத கண்டத்தில் பிரசித்தி பெற்றிருந்த மூன்று சாம்ராஜ்யத் தலைநகரங்களில் வாதாபி ஒன்றாகும். கன்யாகுப்ஜத்தையும் காஞ்சியையும் போலவே வாதாபி நகரத்தின் புகழும் அந்த நாட்களில் கடல் கடந்து வெகுதூரம் சென்றிருந்தது.

ஒவ்வொரு தடவை திக்விஜயம் செய்து திரும்பும் போதும் புலிகேசியின் படை வீரர்கள் வெற்றி கொண்ட தேசங்களிலிருந்து ஏராளமான செல்வங்களைக் கொண்டு வந்து வாதாபியில் சேர்த்து வந்தார்கள். இதனால் வாதாபி நகரம் வளங்கொழிக்கும் நகரமாய் அந்தக் காலத்தில் விளங்கிற்று. அந்நகரில் வர்த்தகம் சிறந்தோங்கியிருந்தது. தூர தூர தேசங்களிலிருந்தெல்லாம் அந்நகருக்கு இரத்தின வியாபாரிகள் வந்து போய்க் கொண்டிருந்தார்கள்.




பிரசித்தி பெற்ற ஜைன ஆலயங்களும் பௌத்த மடங்களும் வாதாபியில் இருந்தபடியால், பற்பல நாடுகளிலிருந்தும் யாத்திரிகர்கள் அந்நகருக்கு வருவதுண்டு. இதனாலெல்லாம் வாதாபி நகரம் எப்போதும் கலகலப்பாகவே இருந்து வந்தது.

அதிலும் சக்கரவர்த்தி தலைநகரில் இருக்கும் போது கேட்க வேண்டியதில்லை. சக்கரவர்த்தியைப் பேட்டி காண்பதற்காகச் சிற்றரசர்கள் காணிக்கைகளுடன் வருவார்கள். சீனம், பாரசீகம் முதலிய தூர தூர தேசங்களிலிருந்து அரசாங்கத்தூதர்கள் வருவார்கள். மாடமாளிகைகள், கூடகோபுரங்களுடன் விளங்கிய வாதாபியின் வீதிகள் எப்போதுமே திருவிழாக் காலத்தைப் போல் ஜனக்கூட்டம் நிறைந்து விளங்கும். வண்டிகள் வாகனங்களின் சப்தம் ஓயாமல் கேட்ட வண்ணமிருக்கும்.

வாதாபி நகரில் வீதிக் காட்சிகளைப் பார்த்துக் கொண்டு சிவகாமி பல்லக்கிலே போய்க் கொண்டிருந்த போது அவளுடைய உள்ளம் அடிக்கடி காஞ்சியையும் வாதாபியையும் ஒப்பிட்டுக் கொண்டிருந்தது. பழமையான காலத்திலிருந்து செல்வமும் பண்பாடும் சேர்ந்து வளர்ந்து வந்த நகரத்துக்கும் திடீரென்று செல்வம் படைத்துச் செழிப்படைந்த புதுப் பட்டணத்துக்கும் உள்ள வித்தியாசங்கள் அவளுக்கு நன்கு புலனாகி வந்தன.

காஞ்சியில் செல்வத்திற் சிறந்த சீமான்களும் சீமாட்டிகளும் ஆடை ஆபரணங்கள் பூணுவதில் அடக்கம் காட்டுவார்கள். அவர்களுடைய அலங்காரங்களில் கலை உணர்ச்சியே பிரதானமாயிருக்கும். இந்த நகரிலோ எங்கே பார்த்தாலும் யாரைப் பார்த்தாலும் படாடோபமும் பகட்டும் தாண்டவமாடின.

காஞ்சி வீதிகளில் தெரிந்தவர்கள் சந்தித்தால் ஒருவருக்கொருவர் அன்புடனும் மரியாதையுடனும் முகமன் கூறிக் கொண்டார்கள். வாதாபியின் தெருக்களிலோ, தெரிந்தவர்கள்






சந்திக்கும் போது இடி முழக்க ஒலியில் சிரித்து ஆர்ப்பரித்தார்கள்.

காஞ்சியில் எஜமானர்கள் வேலைக்காரர்களுக்குக் கட்டளையிடும் போது கூட அன்புடனும், ஆதரவுடனும் பேசினார்கள். வாதாபியில் எஜமானர்கள் வேலைக்காரர்களிடம் பேசும் போது கடுமையான மொழிகளையும் துர்வசனங்களையும் கையாண்டார்கள்.

இவற்றையெல்லாம் தவிரக் காஞ்சிக்கும் வாதாபிக்கும் உள்ள இன்னும் ஒரு வித்தியாசத்தையும் சிவகாமி கவனித்தாள்.

காஞ்சி வீதிகளில் புத்த பிக்ஷுக்கள், திகம்பர சமணர்கள், வைதிக சந்நியாசிகள், ஆண்டிகள், கபாலிகர்கள், வெறும் பிச்சைக்காரர்கள் ஆகியவர்கள் மொய்த்துக் கொண்டு வீதியில் போவோர் வருவோரின் பிராணனை வாங்குவது வழக்கம். தர்ம



தமிழ்
HAPPY TAMIL NEW YEAR
VARSHA
VARSHA



புத்தியுள்ள தனவான்கள் அதிகம் உள்ள இடத்திலே யாசகர் கூட்டமும் அதிகமாகப் பெருகி விடும் போலும்!

வாதாபியின் வீதிகளில் அம்மாதிரி பிக்ஷுக்களும் யாசகர்களும் அதிகம் காணப்படவில்லை. தர்மம் கொடுப்பவர்கள் இல்லாதபடியால் யாசகர்களும் இல்லை போலும்! இம்மாதிரியெல்லாம் எண்ணமிட்டுக் கொண்டும், வாதாபியின்



மனோதைரியம் அவளுக்கு ஏற்படவில்லை. சிவிகை மேலே சென்றது.

நாற்சந்தி முனையிலிருந்து சிவிகை கொஞ்ச தூரம் போன பிறகு சிவகாமி தடுக்க முடியாத ஆவலினால் திரும்பிப் பார்த்தாள். அந்தக் கூட்டத்திலிருந்தவர்களில் சிலர் கட்டப்பட்ட கைகளினால் தன்னுடைய சிவிகையைச் சுட்டிக்காட்டுவது போலவும், கண்ணீர் ததும்பிய கண்களால் தான் போகும் திசையை உற்றுப் பார்ப்பது போலவும் அவளுக்குத் தோன்றியது. உடனே சிவகாமி தன் பார்வையைத் திருப்பிக் கொண்டாள். பல்லக்குச் சுமந்தவர்களை நேரே வீட்டுக்குப் போகும்படி கட்டளையிட்டாள்.

வீடு போய்ச் சேர்ந்ததும் சிவகாமி தான் கண்ட காட்சியைத் தாதியிடம் சொல்லி, அதைப் பற்றி ஏதேனும் தெரியுமா என்று கேட்டாள். தாதி தனக்குத் தெரியாது என்று சொல்லவே, போய் விசாரித்துக் கொண்டு வரும்படி பணித்தாள். அவ்விதமே அந்தத் தாதி வெளியே போய் விசாரித்துக் கொண்டு வந்தாள். அவள் கூறிய விவரம் சிவகாமிக்குச் சொல்ல முடியாத பயங்கரத்தையும் மன வேதனையையும் அளித்தது.

தாதி விசாரித்து வந்து கூறிய விவரம் இதுதான்: பல்லவ நாட்டிலிருந்து புலிகேசிச் சக்கரவர்த்தி அநேக ஸ்திரீ, புருஷர்களைச் சிறைப் பிடித்துக் கொண்டு வந்திருந்தார். அவர்களில் சிலர் சிறையிலிருந்து தப்பிப் போக முயன்றார்கள். சிலர் அடிமைத் தொண்டு செய்ய மறுத்தார்கள். சிலர் உணவு உட்கொள்ளாமல் பிடிவாதம் பிடித்தார்கள். இத்தகைய குற்றங்களைச் செய்த கலகக்காரர்களை வாதாபி நகரின் நாற்சந்திகளில் நிறுத்திச் சாட்டையினால் அடிக்கும்படியாகப் புலிகேசிச் சக்கரவர்த்தி கட்டளையிட்டிருக்கிறார். இந்தச் சாட்டையடி உற்சவம் இன்றைக்குத்தான் ஆரம்பமாகியிருக்கிறது. இன்னும் இரண்டு மாதம் வரையில் நடக்கும். தினம் சாயங்கால வேளையில் வீதிகளில் நடக்கும் வாதாபி நகரவாசிகள் அந்த வேடிக்கையைப் பார்த்துக் களிப்பார்கள்.

சிவகாமி அன்றிரவு ஒரு கணமும்

கண்ணுறங்கவில்லை. வேதனையும் துன்பமும் நிறைந்த அவளுடைய வாழ்க்கையில் இதுவரை என்றும் அனுபவித்தறியாத வேதனையை அவள் அனுபவித்தாள். சுளீர் சுளீர் என்று அவளுடைய உடம்பில் சாட்டையடி விழுவது போன்ற உணர்ச்சி அவளுக்கு அடிக்கடி உண்டாயிற்று. பொன்முகலியாற்றங்கரையில் அவள் புலிகேசியை வேண்டித் தன்னுடன் சிறைப்பட்டிருந்த மாதர்களை விடுதலை செய்தது அவளுக்கு நினைவு வந்தது. அன்று விடுதலையானவர்கள் சளுக்கர் சைனியத்தினால் சிறைப் பிடிக்கப்பட்டவர்களில் ஒரு சிலர்தான் போலும். இன்னும் எத்தனையோ பேரை முன்னால் சென்ற பெருஞ்சைனியம் சிறைப் பிடித்துக் கொண்டு போயிருக்க வேண்டும்.

இன்று பகலில் சக்கரவர்த்தி வந்து தன்னுடன் பேசியதன் கருத்தும், தனக்கு வாதாபி நகரைச் சுற்றிப் பார்க்க அனுமதியளித்ததன் கருத்தும் இப்போது சிவகாமிக்குப் புதிய பொருளில் விளங்க ஆரம்பித்தன. சிவகாமியைத் தன்னுடைய காலிலே விழுந்து கெஞ்சும்படி செய்வதற்காக இம்மாதிரியெல்லாம் ஏற்பாடு செய்திருக்கிறான் அந்தக் கிராதகன். ஆனால், அவனுடைய எண்ணம் நிறைவேறப் போவதில்லை. யார் எப்படிப் போனாலும் சரி. இனித் தான் புலிகேசியின் காலில் விழுந்து கெஞ்சப் போவதில்லை. ஒருநாளும் முடியாது! இப்படியா வஞ்சம் தீர்க்க நினைத்திருக்கிறான், அந்தப் பாவி!

"எதற்காக வாதாபி நகரைச் சுற்றிப் பார்க்கக் கிளம்பினோம்?" என்று எண்ணி எண்ணிச் சிவகாமி தவித்தாள். இரவெல்லாம் தூக்கமின்றித் துடித்துக் கொண்டிருந்தாள்.

மறுநாள் பொழுது விடிந்தது; சூரியோதயம் ஆயிற்று. வானவெளியில் சூரியன் மேலே வர வர, சிவகாமியின் இதயத் துடிப்பு அதிகமாயிற்று. சூரியன் மேற்கு நோக்கிப் பிரயாணம் செய்யச் செய்ய அவளுடைய உள்ளமும் உடம்பும் பதறத் தொடங்கின.

இத்தனை நேரம் அந்தப் பல்லவ நாட்டு ஸ்திரீகளும் புருஷர்களும் நாற்சந்தியில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டிருப்பார்கள்! அவர்களுடைய கைகள் பின்னால் சேர்த்துக் கட்டப்பட்டிருக்கும். இத்தனை நேரம் யமகிங்கரர்கள் போன்ற காவலர்கள் கையில் பெரிய சாட்டைகளுடன் வந்து நிற்பார்கள். இன்னும் சிறிது நேரத்துக்கெல்லாம் சாட்டையினால் அடிக்கத் தொடங்கி விடுவார்கள். சிவகாமி முதல் நாள் இரவு கொண்டிருந்த மன உறுதியெல்லாம் பறந்து போயிற்று. பரபரப்புடன் பல்லக்குக் கொண்டு வரும்படி வாசற் காவலர்களிடம் கட்டளையிட்டாள். பல்லக்கு வந்ததும் அதில் விரைந்து ஏறிக் கொண்டு நேற்றுப் பார்த்த நாற்சந்தி முனைக்குப் போகும்படி சொன்னாள்.

நாற்சந்தியின் சமீபத்தில் இன்று சிவகாமியின் சிவிகை போய்ச் சேர்ந்த போது, அங்கே கரங்கள் கட்டப்பட்டு நின்றவர்களிடம் நேற்றுக் காணாத கிளர்ச்சியை இன்று கண்டாள். அவர்கள் ஒருவருக்கொருவர் ஏதோ பேசிக் கொண்டார்கள். அவர்களில் பலர் சிவகாமியை நோக்கி, "அம்மா! தாயே! எங்களைக் காப்பாற்று!" என்று கூச்சலிட்டார்கள்.

எதிர்பாராத இந்த அபயக் கூக்குரலினால் சிவகாமியின் உள்ளம் பெருங்குழப்பமடைந்தது. 'ஐயோ! இவர்களைக் காப்பாற்றும் சக்தி உண்மையில் நம்மிடம் இருக்கலாகாதா?' என்ற ஏக்கம் ஒரு பக்கம் உண்டாயிற்று. பல்லக்கைத் தரையில் இறக்கச் சொல்லித் தானும் இறங்கிக் கூட்டத்தை அணுகினாள்.

மீண்டும், "அம்மா! தாயே! எங்களைக் காப்பாற்று!" என்ற கூக்குரல்கள் அக்கூட்டத்திலிருந்து எழுந்தன.




சிவகாமி அவர்கள் அருகில் இன்னும் நெருங்கிச் சென்றாள். அவர்களில் சிலருடைய உடம்பில் முன்னமே சாட்டையடி பட்ட காயங்களைக் கண்டாள். அந்தக் காயங்களிலிருந்து இரத்தம் கசிந்து கொண்டிருப்பதையும் தரையில் பல இடங்களில் இரத்தம் சொட்டிக் கறையாகியிருப்பதையும் பார்த்தாள்.

சிவகாமியின் தலை சுற்றியது; வயிறு குமட்டியது; மயக்கம் வந்தது. அதையெல்லாம் சமாளித்துக் கொண்டு ஒருவாறு சித்தத் தெளிவை நிலைநாட்டிக் கொண்டாள்.

கூட்டத்தில் அவளுக்குச் சமீபத்தில் நின்ற ஸ்திரீயைப் பார்த்து, "அம்மா! உங்களைக் காப்பாற்றும்படி என்னை வேண்டிக் கொள்கிறீர்களே, அது ஏன்? உங்களைப் போல் நானும் ஓர் அபலைப் பெண்தானே! சளுக்கரால் சிறைப் பிடித்துக் கொண்டு வரப்பட்டவள்தானே? உங்களைக் காப்பாற்றும் சக்தி எனக்கு ஏது?" என்றாள்.

"எங்களைக் காப்பாற்றும் சக்தி உனக்கு உண்டு, தாயே! அதோ அந்த ராக்ஷதனைக் கேள். அவன்தான் அவ்விதம் சொன்னான்" என்றாள் அந்த ஸ்திரீ.

அவள் சுட்டிக்காட்டிய ராக்ஷத வடிவங்கொண்ட

வீரர் தலைவனைச் சிவகாமி அணுகினாள். வாதாபிவாசிகள் பேசிய கலப்புப் பாஷையில், "ஐயா! இவர்களை ஏன் இப்படிச் சாட்டையால் அடித்துச் சித்திரவதை செய்கிறீர்கள்? வேண்டாம்! இந்தப் படுபாதகச் செயலை நிறுத்துங்கள்!" என்றாள்.

அந்த வீரர் தலைவன் கலகலவென்று சிரித்தான். என்னவோ யோசிப்பவன் போல் சற்று இருந்து விட்டுப் பிறகு, "நாங்கள் என்ன செய்வோம், தாயே! சக்கரவர்த்தியின் ஆக்ஞை!" என்றான்.



"அப்படியானால் கொஞ்ச நேரம் பொறுத்திருங்கள். நான் உங்கள் சக்கரவர்த்தியிடம் சென்று வேண்டிக் கொண்டு பார்க்கிறேன். அதுவரையில்..." என்று சிவகாமி சொல்வதற்குள், அவ்வீரன், "வேண்டாம், அம்மா! சக்கரவர்த்தியிடம் நீ போகவே வேண்டாம். இவர்களைச் சாட்டையால் அடிப்பதை நிறுத்தும் அதிகாரம் உன்னிடமே இருக்கிறது. நீ சொன்னால் நிறுத்தி விடுகிறோம்; ஆனால், அதற்கு ஒரு நிபந்தனை உண்டு!" என்றான்.

அந்த வீரன் முதலில் கூறிய வார்த்தைகளை வியப்போடும் உவகையோடும் கேட்ட சிவகாமி, "நிபந்தனை" என்றதும் திடுக்கிட்டாள். இதில் ஏதோ வஞ்சம் இருக்க வேண்டும் என்ற எண்ணத்துடன், "என்ன நிபந்தனை?" என்றாள்.

"நீ இந்த இடத்தில், எங்கள் எல்லாருடைய முன்னிலையிலும் நடனம் ஆட வேண்டும். நீ ஆடும் வரையில் நாங்கள் இவர்களை அடிக்காமல் இருக்கிறோம். சூரியன் அஸ்தமிக்கும் வரையில் நீ ஆடிக் கொண்டிருந்தால், நாங்களும் பார்த்துக் கொண்டேயிருப்போம். சூரியன் அஸ்தமித்ததும் நீ வீட்டுக்குத் திரும்பலாம். நாங்கள் இவர்களைச் சிறையிலே கொண்டு போய்ச் சேர்ப்போம். நாளைக்கும் இவர்கள் அடிபடக் கூடாது என்று நீ கருதினால் நாளைக்கும் இம்மாதிரியே நீ இவ்விடம் வந்து நடனம் ஆடலாம்!" என்றான் அந்தக் கிராதகன்.



சிவகாமியின் உள்ளத்திலிருந்து எரிமலை, தீக்குழம்பையும் கரும்புகையையும் கக்கத் தொடங்கியது.

ஆஹா! இதுவா அந்தப் பாதகனுடைய எண்ணம்? இப்படியா என் மீது பழிவாங்கப் பார்க்கிறான்? இப்படியா என் அற்புதக் கலையை இழிவுபடுத்த நினைக்கிறான்? புத்த பிக்ஷு வேஷத்தில் வந்து என் கலையைக் கண்டு மெய்ம்மறந்து பரவசமடைந்ததாக நடித்ததெல்லாம் இதற்காகத்தானா?

ஆனால் அந்த வஞ்சக நெஞ்சனுடைய உத்தேசம் ஒருநாளும் நிறைவேறப் போவதில்லை. யார் எப்படிப் போனாலும், நான் வாதாபியின் நாற்சந்தியில் நின்று நடனம் ஆடப் போவதில்லை, ஒரு நாளுமில்லை.

முகத்தில் குரோதம் பொங்க, கண்களில் தீப்பொறி பறக்க நின்ற இடத்திலே ஸ்தம்பமாய் நின்று யோசித்துக் கொண்டிருந்த சிவகாமியைப் பார்த்து மேற்படி வீரர் தலைவன், "என்ன முடிவு சொல்கிறாய், தாயே! நடனம் ஆடப் போகிறாயா? அல்லது இவர்களைத் தங்கள் காரியத்தைப் பார்க்கச் சொல்லட்டுமா?" என்று கேட்டான்.

அந்தக் கேள்வி சிவகாமியின் செவிகளில் பழுக்கக் காய்ந்த வேல் நுழைவது போல் நுழைந்தது.

திடீரென்று பிரக்ஞை பெற்றவள் போல் அவள் துள்ளி நிமிர்ந்து நின்று அவ்வீரனைப் பார்த்தாள்.

"ஆஹா! இந்த நாற்சந்தியில் நின்று என்னை நடனம் ஆடவா சொல்கிறாய்? மாட்டேன். ஒருநாளும் மாட்டேன்!" என்றாள்.

அவ்வீரர் தலைவன் முகத்திலே புன்னகையுடன், "சரி உங்கள் வேலையை நீங்கள் நடத்துங்கள்!" என்று கையில் சாட்டையுடன் நின்றவர்களைப் பார்த்துக் கட்டளையிட்டான்.

(சபதம் தொடரும்)

# விழித்திடு பெண்ணே !..

மா தவங்கள் பற்பல செய்து
மாதராய் பிறப்பெடுத்தவளே!
மடந்தையாய் நீ இருந்தே
மானம் இழந்ததும் போதுமடி!

வளையல் பூட்டிய கரங்கள்தான்
வாளையும் ஓங்கிய தேசமடி!..
குள்ளநரிக் கூட்டம் உன்னைக்
குறிவைத்து தாக்கிடக் கூடுமடி!

சீறும் சிங்கமாய் நீ மாற —அந்தச்
சீற்றம் கண்டு நடுங்கியே ஓடுமடி!
பேதையென உனைத் தூற்றியவர்
மேதையெனப் போற்ற வேண்டுமடி!

வாழத்தான் நீ துணிந்து விட்டால்
வானமும் நித்தம் உந்தன் வசமடி!
விழித்திடு பெண்ணே!.. விழித்திடு!
விடியல்தோறும் உனக்காய் நீ....

**உமையாள் ராணி**





# நீர்

## குடிநீர் பாட்டிலை எவ்வாறு கழுவ வேண்டும்?

ஒவ்வொரு முறை நீங்கள் பாட்டிலில் இருந்து தண்ணீர் குடிக்கும் போதும் அதில் பல பாக்டீரியாக்களை விட்டு செல்கிறீர்கள். நாள் முழுவதும் அது இன்னும் லட்சக்கணக்கில் அதிகரிக்கும். இதிலிருந்து தப்பிக்க நீங்கள் என்ன செய்யலாம் என்பதை விஞ்ஞானிகள் விளக்குகின்றனர்.

மீண்டும்மீண்டும் பயன்படுத்தக்கூடிய பாட்டில்கள் எந்த அளவில் சுகாதாரமாக இருக்கின்றன என்பது குறித்து கார்ல் பெஹன்கே எப்பொழுதுமே சிந்தித்து வந்துள்ளார். ஒருமுறை பாட்டிலில் பேப்பர் டவலை நிரப்பிய அவர் சிறிது நேரம் கழித்து அதில் படலம் ஒன்று படிந்திருப்பதை பார்த்து அதிர்ந்துள்ளார்."நான் டவலை வெளியே எடுத்தவுடன் அது வெள்ளை நிறத்தில் தான் இருந்தது, அந்த துணியில் நான் உணர்ந்த வழவழப்பு அதில் வளர்ந்திருந்த பாக்டீரியாவால் உருவாகியிருந்தது," என்று இண்டியானாவில் உள்ள பர்டூ பல்கலைக்கழகத்தில் உணவுத் துறை பாதுகாப்பு நிபுணரான கார்ல் பெஹன்கே தெரிவித்தார்.இது தொடர்பாக ஆராய்ச்சி செய்ய திட்டமிட்ட அவர், தனது குழுவினருடன் இணைந்து அந்த பல்கலைக்கழகத்தில் எதார்த்தமாக சென்றுகொண்டிருந்த அனைவரிடமும் அவர்களது தண்ணீர் பாட்டிலை கடனாக பெற்றுக்கொண்டார். அதன் சுத்தத்தை அவர் சோதிக்க விரும்பினார்.

"ஆய்வு முடிவை தெரிந்துகொள்ள விருப்பம் காட்டாத மக்கள் அதிகளவில் இருந்தது தான் இதில் முக்கிய பகுதியாக இருந்தது. அதாவது பெரும்பாலானோருக்கு அதன் விடை தெரிந்திருந்தது. ஏனெனில் பலரிடம் அதை சுத்தம் செய்யும் பழக்கம் குறைவாகவோ அல்லது அவை சுத்தம் செய்யப்படாமலோ இருந்தன. இதே போன்ற ஒரு முடிவை தான் ஆராய்ச்சியும் வெளிப்படுத்தியது," என்கிறார் பெஹன்கே.2024 ஆம் ஆண்டு உலகளாவிய அளவில் மறுபயன்பாட்டிற்கு உட்படுத்தப்பட்ட பாட்டில்களின் சந்தை மதிப்பீடு 10 பில்லியன் டாலராக இருந்தது. இத்தாலியில் உள்ள சுகாதாரத் துறை பணியாளர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில், பாதி பேர் இது மாதிரியான பாட்டில்களைப் பயன்படுத்துவது தெரியவந்துள்ளது.அதேசமயம் பல்கலைக் கழக மாணவர்களிடம் நடத்தப்பட்ட ஆய்வில் 50—இல் இருந்து 81 சதவீதத்தினர் பாட்டில்களைப் பயன்படுத்துவது கண்டறியப்பட்டுள்ளது,


நமது உடலில் உள்ள நீர் சத்தை மேம்படுத்த அடிக்கடி தண்ணீர் குடிப்பது மிக முக்கியம் என்றாலும், நாம் எங்கு சென்றாலும் தண்ணீர் பாட்டில்களை எடுத்து செல்வதில் ஆரோக்கியம் சார்ந்த சில சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன. அப்போது பாட்டில்கள் பயன்பாட்டை முழுமையாக தடுப்பது தான் இதற்கு இருக்கும் தீர்வா அல்லது இதிலிருந்து தப்பிக்க வேறு வழிகள் ஏதேனும் இருக்கின்றதா என்பதை காண்போம்.

பாட்டில் உள்ளே இருப்பது என்ன?

சமையலறையில் உள்ள குழாய்களில் இருந்து நேரடியாக தண்ணீர் குடிப்பது சிறந்த வழியாக இருந்தாலும், அதிலும் பாக்டீரியா வளர்ந்திருக்கும். அதனால் தான் தண்ணீர் பாட்டிலில் எவ்வளவு நாட்களுக்கு தண்ணீரை சேமித்து வைக்கிறோமோ அந்த அளவிற்கு அதில் பாக்டீரியாவின் வளர்ச்சி அதிகரிக்கும் என்கிறார் லண்டனில் உள்ள லீசெஸ்டர் பல்கலைக்கழகத்தில் மருத்துவ நுண்ணுயிரியல் இணை பேராசிரியர், ப்ரிம்ரோஸ் ஃப்ரீஸ்டோன்.மனித உடலில் தொற்றை ஏற்படுத்தக் கூடிய பாக்டீரியாக்கள் 37 டிகிரி செல்சியசில் வாழும் என்றும் 20 டிகிரி செல்சியசில் அது வளர்ச்சியடையும் என்றும் அவர் தெரிவித்தார்.

"இந்த வெப்பநிலையில் இருக்கும் தண்ணீரை நீண்ட நேரம் பாட்டிலில் சேமித்து வைத்தால் பாக்டீரியாவின் எண்ணிக்கை பல மடங்கு





# நிலை

## ஜெசிகா பிரவுன்

"உயரும்," என்கிறார் அவர்.சிங்கப்பூரில் கொதிக்க வைக்கப்பட்ட குழாய் நீரைக் கொண்டு நடத்தப்பட்ட ஆய்வு ஒன்றில், அழிந்திருக்க வேண்டிய பாக்டீரியாக்கள் அனைத்தும், நீரை பாட்டிலில் வைத்து நாள் முழுவதும் பயன்படுத்துகையில் வளர்ந்திருந்தது கண்டுபிடிக்கப்பட்டது.

ஒருவர் பயன்படுத்தும் பாட்டிலில் மதிய நேரம் வரையில் சராசரியாக மில்லிலிட்டர் ஒன்றுக்கு 75,000 பாக்டீரியாக்கள் உருவாகும் எனவும் 24 மணி நேரத்தில் 10 முதல் 20 லட்சம் பாக்டீரியாக்கள் உருவாகும் எனவும் கண்டறியப்பட்டுள்ளது. பாக்டீரியா வளர்ச்சியை குறைப்பதற்காக ஒவ்வொரு முறை பாட்டிலில் இருந்து தண்ணீர் குடித்த பிறகும் குளிர்சாதன பெட்டியில் வைக்கலாம், ஆனால் இது முழுமையாக பாக்டீரியா வளர்ச்சியைத் தடுக்காது.

சில சமயங்களில் பாக்டீரியாவின் வளர்ச்சி, தண்ணீரின் தன்மையைப் பொறுத்து அமைந்தாலும், பெரும்பான்மையாக அதை குடிப்பவர் மூலமாகவே இது ஏற்படுகிறது. அலுவலகம், உடற்பயிற்சி கூடம் போன்ற இடங்களுக்கோ அல்லது வீட்டிலேயே வைத்திருந்தால் கூட பாட்டிலின் வெளிப்புறத்தில் நிறைய நுண்ணுயிர்கள் இடம்பெற்றிருக்கும்.இவை நீங்கள் தண்ணீர் குடிக்கும் பொழுது வாய் வழியாக வரும் பாக்டீரியாவுடன் இணைந்து கலக்கப்படும், என்கிறார் ஃப்ரீஸ்டோன். அடிக்கடி கை கழுவாதவர்கள் பயன்படுத்தும் பாட்டில்களில் ஈ—கோலி எனப்படும் பாக்டீரியா உருவாகலாம் என்கிறார் அவர்.







இந்த பாக்டீரியா நமது கைகள் சுத்தமாக இல்லையென்றால் குறிப்பாக கழிவறை சுகாதாரம் குறைவாக இருந்தால் உருவாகக் கூடிய பாக்டீரியா ஆகும்.இந்த பாட்டிலை மற்றவர்களுடன் பகிரும் பொழுது அதனால் பல்வேறு வைரஸ் தொற்று பாதிப்பும் ஏற்படலாம். உதாரணமாக நோரோ வைரஸ் இந்த வழிமுறையில் எளிதாக பரவலாம்.

பொதுவாக மனிதர்களின் வாயில் 500 முதல் 600 வகையான பாக்டீரியாக்கள் இருப்பதாக ஃப்ரீஸ்டோன் தெரிவித்தார்.

"உங்களுக்கு நோய் ஏற்படுத்தாத பாக்டீரியா மற்றவருக்கும் எந்த பாதிப்பையும் ஏற்படுத்தாது என்று கூறிவிட முடியாது. உங்களுக்கு ஒரு தொற்று ஏற்பட்டிருக்கலாம், ஆனால் உங்களுக்கு அது தெரியாமல் இருக்கலாம், ஏனென்றால் நம்மை பாதுகாப்பதில் நமது நோய் எதிர்ப்பு சக்தி தீவிரமாக வேலை செய்யும்,"என்றார் அவர்.

பாக்டீரியா வளர்ச்சிக்கு வித்திடும் இன்னொரு காரணி, நீங்கள் தண்ணீரோடு கலக்கும் மற்ற பொருட்கள், அதாவது உதாரணமாக சுத்தமான குடிநீருடன் சர்க்கரை கலக்கப்பட்டால், பாட்டிலில் பாக்டீரியா அல்லது பூஞ்சை உருவாகும். ஏனெனில் உங்களுக்கு சத்து அளிக்கக் கூடிய அனைத்துமே பாக்டீரியாவின் வளர்ச்சிக்கும் சத்து அளிப்பதாக இருக்கும், என்கிறார் ஃப்ரீஸ்டோன்."தண்ணீர் தவிர, புரோட்டின் ஷேக்ஸ் போன்றவை பாக்டீரியா வளர கூடாரமாக அமைகின்றன," என்கிறார் அவர்.பாலை ஒரு குவளையில் சிறுது நேரம் விட்டுவிட்டு, திரும்பி வந்து பார்க்கும் பொழுது அதில் ஏடு உருவாகியிருக்கும். இந்த ஏடு தான் பாக்டீரியாக்களுக்கு மிகவும் பிடிக்கும் என்கிறார் ஃப்ரீஸ்டோன்.

பாக்டீரியா ஏற்படுத்தும் பாதிப்பு

நம்மை சுற்றி இருக்கும் நிலம், காற்று ஆகிய எல்லாவற்றிலும் பாக்டீரியாக்கள் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் அதில் பெரும்பான்மையானவை பாதிப்பற்றதாகவோ அல்லது பலனளிக்கும் வகையிலோ இருக்கும்.ஈ—கோலி போன்ற பாக்டீரியாக்கள் வயிற்றுப்போக்கு மற்றும் வாந்தி பிரச்னைகளை உருவாக்கலாம். ஆனால் எல்லா சமயங்களிலும் அல்ல. இந்த பாக்டீரியா சுற்றுசூழலில் இயற்காகவே கலந்திருக்கும், குறிப்பாக மனித உடலின் வயிற்றுப் பகுதியில் இருக்கும். இது எப்போது குறிப்பிட்ட சில பண்புகளை வெளிப்படுத்துகிறதோ அப்பொழுது தான், ஆபத்தாக உடல் உபாதைகளை உண்டாக்கும். இதனால் குடலில் ஏற்படும் வீக்கம், நமது குடலில் நீடித்த மாற்றத்தை ஏற்படுத்திவிடும்.

"நமது குடல் பல்வேறு மாற்றங்களுக்கு உட்படுத்தப்படுகிறது. கிட்டத்தட்ட 1000 வகையான உயிரிகள் நமது குடலில் இருக்கின்றன. ஆனால் பாக்டீரியா இருக்கும் தண்ணீரைக் குடித்து வயிற்றில் கோளாறு ஏற்படுவதால் உருவாகும் மாற்றம் நல்லதுக்காக இருக்காது."

ஆன்டிபயாடிக் எடுத்துக் கொண்டிருந்தால், அது அவர்களது உடலில் மாற்றங்களை விட்டு செல்லும். இவ்வாறு இருப்பவர்கள் மற்ற தொற்று நோய்க்கு எளிதாக ஆளாகலாம். பாட்டிலில் இருந்து எடுக்கப்பட்ட மாதிரிகளில் க்ளெப்சியெல்லா கிரிமோண்டி என்ற பாக்டீரியாவை, ஆய்வாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். பொதுவாகவே மனிதனின் உணவுக் குழாயில் இது காணப்பட்டாலும், ஆன்டிபயோடிக் எடுத்துக்கொண்டோருக்கு குடைமயான வயிற்றுப்போக்கை ஏற்படுத்தலாம். பாட்டிலில் பூஞ்சை போன்றவை உருவாகியிருந்தால், அலர்ஜி இருப்பவர்கள் அதை பயன்படுத்தும் போது அவர்களின் அறிகுறிகள் அதிகரித்துவிடும்.ஆனால் இதுவரையில் மறுபயன்பாட்டிற்கு உட்படுத்தப்படும் இந்த பாட்டில்களால் தீவிரமான உடல் உபாதைகள் ஏற்பட்டதாக எந்த ஆதாரமும் இதுவரை இல்லை. அதனால் இவ்வாறு நிகழ வாய்ப்பே இல்லை என்றும் கூற முடியாது. அதேபோல ஒரு பிரச்னைக்கு குறிப்பிட்ட ஒரு காரணியை சுட்டுவது மிகவும் கடினமான ஒன்றே.



குடிநீர் பாட்டிலை எத்தனை நாளைக்கு ஒருமுறை, எவ்வாறு கழுவ வேண்டும்?

தான் வைத்திருந்த பாட்டிலில் இருந்த நீரின் சுவை நன்றாக இல்லை என்பதை உணர்ந்த பெஹன்கே, "இது போல ஏற்படும் நேரத்தில் சூடான நீரை ஊற்றி, அதன் பின்னர் அதை ஊற்றிவிடுவேன். ஆனால் இதைத் தாண்டி நான் வேறு எதுவும் செய்ததில்லை," என்றார்.

இவருடைய பேப்பர் டவல் ஆராய்ச்சி, ஒருவர் தான் பயன்படுத்தும் பாட்டிலை சுத்தமாக எவ்வாறு பாதுகாப்பது குறித்து அனைவரையும் சிந்திக்க வைத்தது.ஆய்விற்கு உட்படுத்தப்பட்ட 90 மாணவர்களில், பாதி பேர், தன்னுடைய பாட்டிலை மற்றவர்களுடன் பகிர்வதாகவும், 15% அவர்களுடைய பாட்டில்களை இதுவரை சுத்தம் செய்ததில்லை என்றும் கூறினர். ஆனால் பாட்டிலை அலசியவர்களுக்கும் அதை அலசாதவர்களுக்கும் இடையில் பெரிய வேறுபாடு இல்லை.

பாட்டிலை எவ்வளவு நாளுக்கு ஒருமுறை கழுவுகின்றோம், எப்படி கழுவுகின்றோம் என்பது பெரிய அளவில் மாற்றத்தை ஏற்படுத்தவில்லை. இருந்தாலும் சோப் மற்றும் பிரஷ் ஆகியவற்றைக் கொண்டு கழுவியவர்களின் பாட்டிலில் குறைந்த அளவிலான பாக்டீரியாக்களே இருந்தது கண்டறியப்பட்டது. பெஹன்கே மற்றும் இவருடைய குழுவினர், பாத்திரம் கழுவும் சோப்பைக் கொண்டு, குறைந்த இடைவெளையில் பாட்டிலைக் கழுவுவது இதற்கு ஒரு சிறந்த தீர்வாக இருக்கும் என்று அறிவுறுத்துகின்றனர்.ஆனால் சிலர் இதை வேறு விதமாக விளக்குகின்றனர். ஆய்வில் பங்கேற்றவர்கள் தெரிவித்த செயல்முறைகளைக் கேட்ட ஆய்வாளர்கள், அனைத்துமே சுத்தமாக, கழுவி இருக்க வேண்டும் என்ற பொதுக் கருத்திற்கேற்ப அதன் முடிவுகளை மாற்றியமைத்துள்ளதாக தெரிவித்தனர்.

டீ, காப்பி மற்றும் ஜூஸ் போன்ற திரவங்கள் இருக்கும் பாட்டில்கள் இன்னும் அதிக அளவில் பாதிக்கப்பட்டுள்ளதாக இந்த ஆய்வில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. பாட்டிலை சுத்தமாக




கழுவி பயன்படுத்துவதே இதற்கான ஒரே தீர்வு. பாட்டிலுக்கு இருக்கும் நீர் சுத்தமானதாக இருந்தாலும் கூட, தண்ணீர் குடிக்கும் பொழுது உங்கள் எச்சில் அதில் விழுந்தால், அதில் இருக்கும் ஊட்டச்சத்துக்களில் அந்த பாக்டீரியா செழுமையாக வளரும்.

குளிர்ந்த நீரில் கழுவுவதால் இந்த பிரச்னை தீரப் போவதில்லை. ஏனென்றால் குளிர்ந்த நீர் பாட்டிலில் இருக்கும் படலத்தை முழுமையாக நீக்குவதில்லை. அதனால் பாக்டீரியாக்கள் நன்றாக வளரும்.ஆகவே 60 டிகிரி செல்சியசிற்கு அதிகமான வெப்பநிலையில் உள்ள நீரைக் கொண்டு கழுவுவதே இதிலிருக்கும் கிருமிகளைக் கொல்லும். சூடான நீருடன் பாத்திரம் கழுவும் சோப்பை நன்றாக கலக்கிவிட்டு 10 நிமிடங்களுக்கு ஊறவிட்ட பின்பு மீண்டும் சுடுநீரில் கழுவுவது சிறந்த வழி.இதற்கு அடுத்தப்படியாக பாட்டிலை காற்றில் காய விடவேண்டும். ஏனென்றால் ஈரப்பதம் இருக்கும் இடத்தில் தான் இந்த நுண்ணுயிரிகள் உருவாகும். ஒவ்வொரு பயன்பாட்டிற்கு பிறகும் இந்த வழிமுறையைப் பின்பற்றி கழுவுவது அவசியம்.

அல்லது குறைந்தபட்சமாக வாரத்திற்கு சிலமுறை கழுவுவது நல்லது. அதிலிருந்து வாடை வரும் வரை கழுவாமல் வைத்திருக்காதீர்கள் என்று ஃபிரீஸ்டோன் அறிவுறுத்துகிறார்."உங்கள் பாட்டிலில் மோசமான வாடை வந்துவிட்டது என்றால் அதை நீங்கள் உடனே தூக்கிப் போட்டுவிட வேண்டும்."

சுத்தமான பாட்டிலை பயன்படுத்தும் பொழுது உங்கள் கைகள் சுத்தமாக இருப்பதும் அவசியம்.பெஹன்கே, இப்பொழுது பாட்டிலை பராமரிப்பில் அதிக கவனம் செலுத்துகிறார். வாரத்திற்கு ஒரு முறை பிளீச் பயன்படுத்தி கழுவி, அதை காற்றில் காய வைத்த பின்னர் அதை பயன்படுத்துகிறார். பிரஷை பயன்படுத்தி பாட்டிலின் வாய்ப் பகுதி மற்றும் அடிப்பகுதி என அனைத்து இடத்தையும் சுத்தமாக கழுவுகிறார்.

எந்த பாட்டிலை பயன்படுத்தக் கூடாது ?

ஸ்டீல் பாட்டில்களுடன் ஒப்பிடுகையில் நெகிழி பாட்டில்களில் அதிக பாக்டீரியா இருப்பதாக ஆய்வுகள் தெரிவித்தாலும், அதை சுத்தமாக பராமரிப்பதில் தான் வித்தியாசம் இருக்கின்றது. பாட்டிலின் எல்லா பகுதியையும் சுத்தமாக கழுவுவது மிகவும் அவசியம்.

ஆனால் நெகிழியை விட்டு ஸ்டீல் பாட்டிலை பயன்படுத்துவது பல காரணங்களுக்கு சிறந்ததாக பார்க்கப்படுகின்றது.




"நெகிழியில் நிறைய வேதியியல் கலப்புகள் உள்ளன. இது தான் அவற்றின் உறுதி, சூடு தாங்கும் தன்மை மற்றும் குறைந்த எடை மற்றும் பல நாட்களுக்கு பயன்படுத்தும் வகையில் இருக்கக் காரணம்," என்கிறார் கத்தாரில் உள்ள வெயில் கார்னல் மருத்துவத்தில், மருத்துவ மக்கள் தொகை அறிவியலில் சுகாதார அறிவியல் உதவி பேராசிரியராக இருக்கும் அமித் ஆபிரகாம்.

"நெகிழியில் இருக்கும் இந்த வேதியியல் கலப்புகள் தண்ணீருடன் இணைந்துவிடும்," என்கிறார் அவர்.இதய நோய், ஹார்மோன் செயல்பாட்டில் கோளாறு, பக்கவாதம் போன்ற பல்வேறு தீவிரமான நோய்கள் ஏற்பட வழிவகுக்கும் என்று பல்வேறு ஆய்வுகள் அறிவுறுத்துகின்றன. ஒருமுறை பயன்படுத்தவோ அல்லது மறுபயன்பாட்டிற்காகவோ உருவாக்கப்பட்ட நெகிழி பாட்டில்கள் அனைத்திலும் இந்த வேதியியல் கலப்புகள் இருக்கும். அதனால் கண்ணாடி மற்றும் ஸ்டீல் பாட்டில்களைப் பயன்படுத்துவது நல்லது.

எந்த பாட்டிலை பயன்படுத்தினாலும் அதை சுத்தமாக பராமரிப்பது அவசியம். அப்படி இருந்தால் மட்டுமே நீங்கள் பருகும் நீர் சுத்தமாக, பாக்டீரியாக்கள் இல்லாத நீராக இருக்கும்.





## சுக்கு, மிளகு, திப்பிலி என்பது திரிகடுகம் !

திரி என்றால் மூன்று. கடுகம் என்றால் மருந்து. மூன்று மூலங்களினால் ஆன மருந்துதான் திரிகடுகம். பழந்தமிழர் வாழ்வில் இரண்டறக் கலந்திருந்த இந்த மருந்தைப் பற்றி, இன்றைய தலைமுறையினருக்கு எத்தனை தெரியும் என்பது கேள்விக்குரியது. திரிகடுகம், திரிகடுகு என்றழைக்கப் படும் இந்த மருந்துதான் பழந்தமிழரின் நோயற்ற பெருவாழ்வுக்கு அடிப்படையாகவும், ஆதாரமாகவும் இருந்ததென்றால் மிகையில்லை.

"சுக்கு","மிளகு","திப்பிலி" என்கிற இந்த மூன்றும் கூடியதுதான் திரிகடுகம். ஆம், எளிதாய் கிடைக்கிற இந்த மூன்று தாவரப் பொருட்களே நோயற்ற வாழ்வின் ரகசிய மருந்து. திரிகடுகம் போலவே திரிபலா என்கிற ஒன்றும் தமிழர்கள் வாழ்வில் முக்கிய இடம் பெற்றிருந்தது. நெல்லிக்காய், தான்றிக்காய், கடுக்காய் மூன்றும் சேர்ந்ததுதான் திரிபலா. திரிகடுகத்தை மும்மருந்து என்றும், திரிபலாவை முப்பலை என்றும் அழைப்பர்.

சுக்குக்கு மிஞ்சிய வைத்தியமும் இல்லை என்று சொல்வார்கள் ! இஞ்சி காய்ந்தால் சுக்கு ஆகும். இது பல மருத்துவப் பயன்களைக் கொண்டிருக்கிறது.திரிகடுகம் (சுக்கு, மிளகு, திப்பிலி ஆகியவற்றின் சேர்க்கை) என்ற பெயரில் அழைக்கப்படும் இந்த மருந்து, பல மருந்துகளுக்குத் துணைமருந்தாக, அனுபானமாக பயன்படுத்துவது உண்டு. திரிகடுகம் சிறந்த கார்ப்புள்ளது. நுரையீரல், ஜீரண மண்டலப் பிரச்சினைகளைத் தீர்க்கவல்லது. நெஞ்சு சளி, ஜலதோஷத்தை நீக்கும். நுரையீரல் மற்றும் ஜீரண மண்டல உறுப்புகளின் செயல்திறனைக் கூட்டும்.




இனப்பெருக்க உறுப்புகளின் கோளாறுகளை நீக்கும், கரு முட்டை வெடித்தல் குறைபாடுள்ள பெண்களுக்கு நல்லது. மேலும் உடல் எடை கூடிய நோயாளிகள், அதிகக் கொழுப்பு சத்துள்ள நோயாளிகள், உடல் வீக்கம், வளர்சிதை மாற்றமுள்ள நோயாளிகளுக்கு இது தக்க துணை மருந்துகளோடு நன்றாக வேலை செய்யும். பல பற்ப, செந்தூரங்களைக் கொடுக்கும்போது, திரிகடுகம் மூல மருந்து சூரணமாகப் பயன்படுத்தலாம்.

சுக்கின் மருத்துவப் பயன்கள்

கார்ப்பு சுவை உடைய இது உஷ்ண வீர்யம் உடையது. இருமலை மாற்றும், கபத்தைக் குறைக்கும், பசியை உண்டாக்கும், ஆண்மையை உண்டாக்கும், தாய்ப்பாலைச் சுரக்கச் செய்யும். சவுபாக்ய சுண்டி என்ற மருந்து இதனால் செய்யப்படுகிறது. இது ருசியை அதிகரிக்கும், இலகு குணம் உடையது, மலத்தைப் பிரிப்பது.இதனால்




செய்யப்பட்ட நெய், கிரஹணி ரோகத்தை மாற்றும். சுக்கை வெல்லத்துடன் சாப்பிட விக்கல் நிற்கும். சுக்குக் கஷாயம் இருமலைப் போக்கும், பசியை அதிகரிக்கச் செய்யும். சுக்கு சேர்த்துக் காய்ச்சப்பட்ட பால், தலைவலியைக் குறைக்கும்.

குழந்தைகளுக்குச் சுக்கு நல்ல மருந்து. கடுக்காய், மாசிக்காய், ஜாதிக்காய் ஆகியவற்றில் ஒன்றிரண்டுடன் சுக்கை அரைத்து மருந்தாகப் புகட்டுவார்கள்.




பிரசவ மருந்தாகவும் சுக்கு பயன்படும். மசக்கை நேரத்தில் இஞ்சியும், சுக்கும் குமட்டலைப் போக்கும் மருந்தாகப் பயன்படுகின்றன. சுக்கை மேல் தோல் நீக்கியே, மருந்து தயாரிக்கப் பயன்படுத்த வேண்டும். பல் வலிக்கு — சுக்குத் துண்டு ஒன்றை வாயிலிட்டு கடித்து மென்றுவரப் பல்வலி, ஈறுவலி குறையும்.

இரண்டு ஸ்பூன் சுக்குப் பொடியை அரை லிட்டர் தண்ணீரில் போட்டுக் கால் லிட்டர் ஆகும் வரை காய்ச்சி, மூன்று வேளை ஆறு ஸ்பூன் அளவுக்குக் குடித்தால் வயிற்றுவலி, பொருமல், பேதி, குல்மம், குமட்டல், ருசியின்மை ஆகியவை நீங்கும்.

சுக்கைத் தட்டி போட்டு வெந்நீர் தயார் செய்து குளிக்கத் தலையில் நீர்க்கோர்வை தலைவலி, முகநரம்புவேக்காளம் தீரும். ஜலதோஷத்துக்கு நோய்க்காரணியான வைரஸைத் தாக்கி அழிக்கிறது; தலைவலியைப் போக்குகிறது. ரத்த ஓட்டம் சீராக இருக்க உதவுகிறது. கொழுப்புச்சத்தைக் குறைக்கிறது. மத்திய நரம்பு மண்டலத்தைத் தூண்டி இதய, சுவாசத் தசைகள் சீராக இயங்க உதவுகிறது.

கலைமதி சிவகுரு

இஞ்சி சாற்றைப் பாலில் கலந்து சாப்பிட வயிற்று நோய்கள் தீரும், உடல் இளைக்கும்.ஒவ்வொரு நாளும் உணவில் ஐந்து கிராம் இஞ்சியைச் சேர்த்துக்கொள்வது, இதய நோயாளிகளுக்கு மாரடைப்பு வராமல் காக்கும். இஞ்சியானது இதய ரத்தக்குழாய்கள் எதிலும் அடைப்பு உண்டாகாமல் தடுத்தும், புதிய அடைப்பு உண்டாவதைக் கரைத்தும் உதவுவதாக ஆய்வுகள் கூறுகின்றன.இஞ்சியைச் சுத்தம் செய்யும்போது, அதன் மேல் தோலை நன்றாக நீக்கவேண்டும். அதன் மேல் தோல் நஞ்சாகும். அதேபோல் சுக்கைச் சுத்தம் செய்யும்போது, அதன் மேல் சுண்ணாம்பைத் தடவிக் காயவைத்து நெருப்பில் சுட்டு, பின் அதன் தோலை நன்கு சீவி எடுக்கவேண்டும். இது மிக முக்கியமானது; சுத்தம் செய்யாமல் பயன்படுத்தவேண்டாம்.






மிளகு

மூச்சுமுட்டு நோய், சுவாசக் குழாய் நோய்களுக்குச் சிறந்தது. தேனுடன் சேர்த்துக் கொடுக்கவேண்டும். தொண்டை வலிக்குத் தேனுடன் கொடுப்பார்கள். இது வாயு வருவதைத் தடுக்கும். தலைவலிக்கு இதை அரைத்துப் பற்று போடலாம். சில வறண்ட தோல் நோய்களுக்கு, மிளகுத் தைலம் சிறந்தது. இது பித்தத்தை அதிகரிக்கும்.

கபத்தைக் குறைக்கும். சிறு குழந்தைகளுக்குக் கொடுக்க வேண்டாம். வெயில் காலத்தில் இதைப் பயன்படுத்த வேண்டாம். வயிற்றுப்புண், குடல் புண் உடையவர்கள் இதைப் பயன்படுத்த வேண்டாம். உஷ்ண வீரியமானது என்பதை நினைவில் கொள்ளவேண்டும். மரிசாதி தைலம், தாளிஸாதி சூரணம் போன்றவற்றில் எல்லாம் இது சேருகிறது.

மிளகுச் சூரணத்தைத் தேன் மற்றும் நெய்யுடன் சேர்த்துக் கொடுத்தால் காசத்துக்குச் சிறந்தது. மிளகுச் சூரணத்தை மோர் அல்லது தயிருடன் சேர்த்துக் கொடுத்தால் வயிற்றுப் போக்குக்கு நல்லது. மிளகுச் சூரணம், சீரகம் மற்றும் தேனுடன் தினமும் இரண்டு வேளை எடுத்துக்கொள்வது மூல நோய்க்குச் சிறந்த சிகிச்சை. பல் நோய்களுக்கு



மிளகுச் சூரணத்தை லவங்கத்துடன் சேர்த்து வைக்கலாம். மிளகுச் சூரணத்தை உணவுடன் எடுத்துக்கொள்வதால் அது சிரைகளிலும், தமனிகளிலும் ரத்த ஓட்டத் தடை ஏற்படாமல் தடுக்கும். இது ரத்த உறைதலையும் கட்டுப்படுத்தும்.

விஷத்தை முறிக்கும் தன்மை கொண்டது என்பதைக் குறிக்கவே பத்து மிளகு கையிலிருந்தால் பகைவன் வீட்டிலும் உண்ணலாம் என்றார்கள் முன்னோர்கள். மிளகின் வெளிப்புறக் கருப்பு அடுக்கு, கொழுப்பின் காரணமாக உண்டாகும் உயிரணுக் களை முறிப்பதற்கு உதவுகிறது. எனவே, மிளகு கலந்த உணவைச் சாப்பிட்டு வருவதன் மூலம் எடையைக் குறைக்கலாம்.

திப்பிலி

திப்பிலியின் வேரைத் திப்பிலி மூலம் என்று அழைப்பார்கள். திப்பிலி என்றும், மாதவி என்றும் இதற்குப் பெயர். கணா என்றும் சொல்வது உண்டு. உலர்ந்தால் உஷ்ணவீர்யமாக மாறும். இருமல், சளி, கபம், அதிகரித்த மூட்டு வாதம் போன்றவற்றுக்குச் சிறந்தது. இதனைப் பத்து பத்தாகக் கூட்டிக் குறைக்கும் முறை உண்டு. இதற்குத் திப்பிலி வர்த்தமானப் பிரயோகம் என்று பெயர்.



பழங்காலத்தில் இவ்வாறு செய்கிறபோது, செம்மறி ஆட்டுப் பாலைக் கொடுத்துக் கொண்டிருந்தார்கள். திப்பிலி ரசாயனம் இருமல், சளிக்கு ஒரு சிறந்த மருந்து. திப்பிலியை வறுத்துப் பொடியாக்கி அரை கிராம் தேனுடன் கலந்து இரண்டு வேளை சாப்பிட்டுவர இருமல், தொண்டை கமறல், வீக்கம், பசியின்மை, தாது இழப்பு குணமாகும். இரைப்பை, ஈரல் வலுப்பெறும்.

பல நோய்களுக்கு அற்புத மருந்தாகும் திப்பிலி !

திப்பிலி ஒரு மூலிகைத் தாவரமாகும். திப்பிலியில் ஏராளமான மருத்துவ குணங்கள் உள்ளது. இது உடலில் பல நோய்களை குணப்படுத்தும் சக்தி கொண்டது. தோல் நீக்கிய சுக்கு, மிளகு, திப்பிலி மூன்றையும் சம அளவு எடுத்து வறுத்து பொடி செய்து அரை கிராம் அளவு தேனில் கலந்து மூன்று வேளை சாப்பிட்டு வந்தால் வயிற்று வலி, வயிற்றுப் பொருமல், நீர்க்கோவை, தொண்டைக் கமறல் ஆகியவை குணமாகும்.

திப்பிலி, சித்தரத்தை, அதிமதுரம், பனங்கற்கண்டு நான்கையும் தலா 100 கிராம் அளவு எடுத்து அரைத்து தினமும் இரண்டு கிராம் அளவு தேனில் குழைத்து சாப்பிட்டு வந்தால் சைனஸ், தும்மல், தலைபாரம் போன்றவை குணமாகும். எலுமிச்சை சாறில் திப்பிலியை ஊற வைத்து காய வைத்து பொடி செய்து தினமும் இரண்டு கிராம் அளவு எடுத்து தேனில் கலந்து சாப்பிட்டு வந்தால் நெஞ்செரிச்சல், ஏப்பம் போன்றவை குணமாகும். உடலில் ஏற்படும் தசை வலி, வயிற்றுப் போக்கு, தொழு நோய், இருமல், கபம், சுவாசக்குழல் அடைப்பு, மார்புச்சளி ஆகியவற்றிற்கு சிறந்த மருந்தாகப் பயன்படுகிறது.

திப்பிலிப் பொடி, கடுக்காய் பொடி இரண்டையும் சம அளவு எடுத்து தேனில் கலந்து அரை டீஸ்பூன் அளவு காலை மாலை என இரண்டு வேளை சாப்பிட்டு வந்தால் இளைப்பு நோய் நீங்கும். பசும்பாலில் திப்பிலி பொடியை போட்டுக் காய்ச்சி அருந்தி வந்தால் இருமல், வாயுத்தொல்லை நீங்கும். திப்பிலி மூச்சுக்குழாய் அழற்சி, ஆஸ்துமா, இருமல், தொண்டை புண் போன்ற நுரையீரல் பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிக்கவும், பல்வேறு சுவாச பிரச்சினைகளை சரிசெய்யவும் உதவுகிறது.

பல் வலியை விரட்டும் திப்பிலி

பல்வலி மற்றும் வாய்வழி பிரச்சனைகளை அடித்து விரட்டும் வலி நிவாரணியாக திப்பிலி உள்ளது. இதன் பாக்டீரியா எதிர்ப்பு, அழற்சி எதிர்ப்பு மற்றும் வலி நிவாரணி பண்புகள்

டிக்ளோஃபெனாக் என்ற அழற்சி எதிர்ப்பு மருந்தோடு ஒப்பிடும்போது பல வாய்வழி பிரச்சினைகளுக்கு உதவுகிறது.மேலும், திப்பிலி பழத்தில் தயார் செய்யப்படும் பேஸ்ட் பயன்படுத்தி வந்தால் பல் வலி பிரச்னைக்கு நல்ல தீர்வு கிடைக்கும்.



தூக்கமின்மையை போக்குகிறது

திப்பிலி செடியின் பழங்களிலிருந்து பெறப்பட்ட அத்தியாவசிய எண்ணெய் தூக்கமின்மை போன்ற தூக்கக் பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிக்க பயன்படுகிறது.திப்பிலியில் உள்ள வலி நிவாரண பண்பு, நமது உடலில் ஏற்படும் வலியைக் குறைக்கவும் தூக்கத்தைத் தூண்டவும் உதவுகிறது. திப்பிலியின் வேரிலிருந்து கிடைக்கும் சாறு ஆண்டிஹைபர் கிளைசெமிக் மற்றும் ஆண்டிஹைபர் லிபிடெமிக் பண்பைக் கொண்டுள்ளது. இது அதன் நீரிழிவு எதிர்ப்பு பண்புகளுக்கு காரணமாகிறது. நீரிழிவு காரணமாக ஏற்படும் கல்லீரல் மற்றும் சிறுநீரக பாதிப்புகளுக்கு சிகிச்சையளிக்க உதவுகிறது.

காய்ச்சலை குணமாக்குகிறது

திப்பிலியின் தண்டுகளிலிருந்து பெறப்படும் எத்தனால் சாறு ஆன்டிபிரைடிக், வலி நிவாரணி மற்றும் அழற்சி எதிர்ப்பு பண்புகளை கொண்டுள்ளதாக ஆய்வுகள் தெரிவிக்கின்றன. அவை பாக்டீரியா போன்ற பல அந்நிய பொருட்களால் தூண்டப்படும் காய்ச்சலுக்கு சிகிச்சையளிக்க உதவுகிறது.திப்பிலி போன்ற சில ஆயுர்வேத மூலிகைகள் அதன் ஹெபாபுரோடெக்டிவ் நடவடிக்கை காரணமாக கல்லீரல் அழற்சி நோயை குணப்படுத்த பயன்படுகிறது.

ஏடையை இழக்கவும், கொழுப்பை குறைக்கவும் உதவும்

திப்பிலியில் பைபர் உள்ளதால் அவை கொழுப்பைக் குறைக்கும் திறனை கொண்டுள்ளது. இவற்றில் உள்ள இந்த முக்கிய கலவை பசியை அடக்காமல் எடை இழக்கவும், கொழுப்பின் அளவைக் குறைக்கவும் உதவுகிறது.

மலச்சிக்கலுக்கு உதவுகிறது

மலச்சிக்கல், வாய்வு மற்றும் நெஞ்செரிச்சல் போன்ற பல செரிமான சிக்கல்களைத் தடுக்கும் ப்ரீபயாடிக் ஆற்றலை திப்பிலி கொண்டுள்ளது. இதன் நோய் எதிர்ப்பு பண்பு காரணமாக வயிற்றுப் புண் போன்ற பிரச்சனைகள் ஏற்படாமல் இருக்க உதவுகிறது.

மாதவிடாய்க்கு உதவுகிறது

மாதவிடாய் பிடிப்புகள், மேகவெட்டை நோய், கருவுறாமை மற்றும் பாலுணர்ச்சி போன்ற பிரச்சினைகளுக்கு தீர்வளிக்கும் ஒரு அதிசய மூலிகையாக திப்பிலி உள்ளது. இனப்பெருக்க அமைப்புக்கு இதன் டானிக் பரிந்துரைக்கப்படுகிறது.




ஆனால், இவற்றின் நுகர்வு கர்ப்பிணி பெண்களில் கருக்கலைப்பை ஏற்படுத்தக்கூடும் என்பதால், கர்ப்பிணி பெண்கள் இதை தவிர்க்க வேண்டும் என அறிவுறுத்தப்படுகிறது.புற்றுநோயின் அபாயத்தை குறைக்க உதவுகிறது திப்பிலியில் உள்ள பைப்பர் செயலில் உள்ள ஆல்கலாய்டு கெமோபுரோடெக்டிவ் ஆற்றலைக் கொண்டுள்ளது. இது புற்றுநோய் உயிரணுக்கள் அதிகரிப்பதை தடுக்க உதவுகிறது. மேலும் புற்றுநோயின் வளர்ச்சியைத் தடுக்க உதவுகிறது சுக்கு, மிளகு, திப்பிலி ஆகிய மூன்றும் கலந்த திரிகடுகம் எனப்படும் மூலிகை மருந்திலும் இடம் பெறும். திப்பிலி இனிப்புச் சுவையும், குளிர்ச்சித் தன்மையும் கொண்டது. உடல் வெப்பத்தை அதிகரிக்கச் செய்யும், குடல் வாயுவைப் போக்கும் சத்து மருந்தாகும். திப்பிலி இலைகள், பழங்கள் ஆகியவற்றின் நோய் எதிர்ப்புத் திறன் பரிசோதனைகள் மூலமாக நிருபிக்கப்பட்டுள்ளது.

பொறுப்பு துறப்பு: இங்கே கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் வீட்டு வைத்தியம் மற்றும் பொதுவான தகவல்களை அடிப்படையாகக் கொண்டவை. இவற்றை பின்பற்றுவதற்கு முன் கண்டிப்பாக மருத்துவ ஆலோசனையைப் பெற வேண்டும். அய்தமிழ் இந்த தகவல்களுக்கு பொறுப்பேற்காது.)



# வாழ்க்கை

## வாழ்வதில் இருக்கிறது வாழ்க்கை

தொகுப்பாய்ப் பல குடும்பங்கள் வாழும் பெரியதொரு அடுக்ககத்தில் ஒரு பொதுவிழா. வழக்கமான பட்டிமன்றம், வழக்காடு மன்றம், சிரிப்புச் சொற்பொழிவு எதுவுமில்லாமல் எல்லோருக்கும் மகிழ்வுதரும் ஒரு நிகழ்வாகப் பொதுக் கலந்துரையாடல் நிகழ்வை ஏற்பாடு செய்து நடுவர் என்ற பொறுப்புக்கு மறுதலையாக— இணைப்பாளராக இருப்பது என் பணி.

சில கேள்விகள், சிந்தனைகள், அனுபவ விளக்கங்கள் கொண்டு சில சிக்கல்களுக்குத் தீர்வுகள் என்பதாக விரியும் இந்தக் கலந்துரையாடல் நிகழ்வில் பார்வையாளர்கள் எவரும் பங்கேற்கலாம் என்பது பொது விதி.


'இப்போது கூட்டுக் குடும்பம் சாத்தியமா?' என்கிற பொது வினாவுக்குப் பதில் அளிக்க வந்த ஒருவர் 'தனது குடும்பம் கூட்டுக் குடும்பம்' என்று சொன்னார். பலத்த கரவொலி. ஓய்ந்தபின் என் கேள்வி. 'உங்கள் குடும்ப உறுப்பினர்கள் யார்? யார்?' அவரது பதில், 'நான், என் மனைவி, மகள்'. மீண்டும் கரவொலி, அப்போதுதான் நானும் ஒரு புதுத் தகவலைப் புரிந்து கொண்டேன். இக்காலத்தில் கணவனும் மனைவியும் சேர்ந்து வாழ்ந்தாலே அதுதான் கூட்டுக் குடும்பம். கூடவே, வாரிசுகளும் இருந்தால், அது பெரிய குடும்பம்.

சுற்றம் சூழ வாழ்ந்த அக்காலக் கூட்டுக் குடும்பங்களின் பொதுத்தன்மையை, இவர்களால் கற்பனை செய்துகொள்வது கூட முடியாது. ஆனாலும், ஓர் ஆறுதல், ஒருவகையில் ஒரு பொது கூட்டுக் குடும்பமாக இத்தகு அடுக்கக வாழ்க்கை அமைந்திருக்கிறது. இதுவும் ஒருவகையில், சமத்துவபுரம்தான். இதற்குள்ளும் ஜாதி இருக்கிறது. மதம் இருக்கிறது. பொருளாதார நிலை வேறுபாடு இருக்கிறது. எப்படிப்பட்ட தனித்துவம் இருந்தாலும், அவற்றுக்குள் ஒரு பொதுத்துவம் தோன்றிவிடுவது இயற்கை. அதுபோல், ஒரு பொதுநிலைக்குள் ஒரு தனிநிலை உருவாகிவிடுவதுமுண்டு.



ஒரு புதிய அனுபவம் அன்று எனக்கு வாய்த்தது. சிற்றூர்களில், குறு நகரங்களில் கூட்டுக் குடும்ப வாழ்க்கையில், மாமனார், மாமியார், நாத்தனார், கொழுந்தனார் உள்ளிட்ட உறவுகளோடு கூடி வாழ்ந்துவிட்டு, இப்போது தன் மகள், மகனுடன் இத்தகு கூட்டு வாழ்க்கையில் ஒடுங்கிவிடுகிற முதுமையாளர்களின் உணர்வுகளை, மெய்ப்பாடுகளைத் தெரிந்துகொள்ள முடிந்தது. முந்தையக் கூட்டுக் குடும்பம் என்பது ஒரு பல்கலைக்கழகம் போல பரந்து விரிந்தது. அது கூடி வாழ்ந்த கூட்டு வாழ்க்கை. தற்போதையது ஒரு கூண்டுக்குள் அடைபட்ட தனி வாழ்க்கை.

வாழ்நாள் முழுவதும் கற்றுக்கொள்கிற மனநிலையாளர்களுக்கு இதுவொரு வரம். கற்றுக் கொடுக்கவேண்டும் என்ற கருத்துடையோருக்கு இது ஒரு சவால்.இந்த நிலையில் பிள்ளைகளின், பேரக் குழந்தைகளின் மனப்போக்கைப் புரிந்துகொண்டு, அதற்கேற்பத் தம்மை மாற்றிக்கொள்வது புத்திசாலித்தனம் என்று உணர்ந்துகொள்பவர்கள் தப்பித்துக் கொள்கிறார்கள். இன்னமும் தன் முந்தைய தகுதிப்பாட்டை வைத்துக்கொண்டு






# வாழ்வதற்கே

அறிவுரை சொல்கிறவர்களை, அலட்சியம் செய்துவிடுகிறார்கள். அது உடல்சார் பிணிகளைவிட, மனம் சார்ந்த நோய்களை உற்பத்தி செய்துவிடுகிறது.

நிதிநிலை சார்ந்த நெருக்கடிகள், கசப்பான வார்த்தைகளைக் கக்க வைத்துவிடுகின்றன. திட்டமிட்ட கடமைகளை நிறைவேற்ற முடியாமல், எதிர்பாராது வரும் நேர நெருக்கடிகள், சொற்களில் சூடேற்றிவிடுகின்றன. பொசுங்கிப்போகிறது மனம். சொன்னவர்களுக்கு வருத்தம். கேட்டவர்களுக்குத் துன்பம்.பொறுத்துக்கொள்ள முடியாதவர்களுக்கும், பொறுத்துக் கொண்டு இருப்பவர்களுக்கும் இடையில் நேரும் தர்மசங்கடம் இருக்கிறதே, அது சில புதிய சிக்கல்களையும் உருவாக்கிவிடுகிறது. வாழ்ந்த காலத்து நினைவுகளில் மூழ்கிப் போகிறபோது வாழும் காலத்து நிகழ்வுகள் மங்கிப் போகின்றன. இருக்கும் இடம், கிழமை, பொழுது, உறவுகள் எல்லாமும் மறந்துவிடுகின்றன. இந்த அனுபவங்களை இடைப்பட்ட வயதினர் நுட்பமாகக் கற்றுக் கொண்டுவிட்டால் மிகவும் நல்லது.

இத்தகு நிலைகளில் சிக்கிக் கொள்ளாமல் விடுபட்டுக் கொள்ள வழிவகை தேடும் கருத்தாக்கங்களை அவரவர் அனுபவத்தின்வழி




## கிருங்கை சேதுபதி

பெறுவதற்கான உரையாடலைத் தொடங்கினேன். அது சின்னச் சின்ன கேள்விகளில் மெல்லத் தொடங்கியது. 'காலையில என்ன சாப்பிட்டீங்க?'


பொதுவெளியில் அறிமுகம் இல்லாத ஒரு புதிய மனிதரின் கேள்விக்கு, விவரம் அறியாத பாப்பா விழித்துக்கொண்டு பெற்றோரைப் பார்க்குமே, அப்படி ஒரு பார்வை அவர்களையும் அறியாமல், தன் மகள்அல்லது மருமகள் பக்கம் போனது.




அதுபோல், மற்றுமொரு கேள்வி, 'போன விடுமுறைக்கு எங்கே போனீங்க?' இதற்கு அவர்களின் பார்வை, தன் மகன் அல்லது மருமகன் பக்கம் போனது.நினைவு மறதியும் ஒரு காரணம் என்று சொல்லாமலே புரிந்துகொள்ளலாம். அப்படி ஒரு குழந்தையாய், தன்னை உணர்கிற தேவை அவர்களுக்கு அவசியம் தேவை. தானே புரிந்துகொண்டு அந்த நிலைக்குத் தன்னைத் தயார்படுத்திக் கொள்பவர்கள் இருக்கிறார்கள். அல்லது காலம் அவர்களை அந்த நிலைக்கு உட்படுத்திவிடுகிறது. இதை பெரியவர்களைக் காட்டிலும், வீட்டில் இருப்பவர்கள் புரிந்துகொண்டுவிட்டால், அந்த வீட்டில் அமைதியின் நடனம் அற்புதமாய் இருக்கும்.

சாமர்த்தியம் மிகுந்த பெரியவர்களிடம் இருந்து, அப்போது நான் உணர்ந்து கொண்ட உண்மைகள் பலருக்கும் பாடங்களாய் அமைபவை. விதிமுறைகள் நன்றாகத் தெரிந்த அம்மாவுடன் விதிமுறைகள் கற்று விளையாடத் தொடங்கும் சிறு குழந்தையின்

ஆர்வம் இருக்கிறதே, அதுபோன்ற நிலைப்பாடு அது. தன் காலத்தில் கிட்டாத கைப்பேசிக் கருவியின் நுட்பங்களை, தன் பேரப்பிள்ளைகள்வழி பெரியவர்கள் கற்றுக்கொள்கிறார்கள். தன் காலத்தில் கிட்டாத பல வாழ்வியல் அனுபவங்களையும் கற்றுக்கொள்ள வாய்ப்பளிக்கிறது.




தெரிந்தே தோற்று, தன்னை வெற்றிபெற வைக்கும் அம்மாவின் தியாகம் அப்போது புரியாது பிள்ளைக்கு. அந்த மகிழ்ச்சிக்கு என்ன கொடுத்தாலும் தகும் என்பதை நுண்ணியதாய் உணர்ந்த அம்மா, தன் தியாகம் ஒடுக்கி, அறிவறிந்த அறியாமையில் பெறும் ஆனந்தம் இருக்கிறதே, அது ஈன்றபொழுதிற் பெரிதுவக்கும் பழைய குறுகிய ஆனந்தம்.அதுபோல், எந்த தந்தையின் வெற்றியும் முதலில் தன் சொந்த மகனிடம் தோற்றுப்போவதே என்பதைப் புரிந்துகொள்வது ஒரு பக்குவம். இது படிப்பறிவுக்குக் கிட்டாத பாடம். பட்டறிவு தருகிற ஞானம்.

தன்முனைப்பாகிய 'ஈகோ'வைத் தொலைக்கும் இடம் வீடாக இருக்க வேண்டும். 'குற்றம் பார்க்கில் சுற்றம் இல்லை' என்று அதனால்தான் சொல்லப்பட்டது; அதற்காக, வீடென்பது குற்றங்களின் கூடாரம் ஆகிவிடக்கூடாது; அங்கே நிகழும் தவறுகளைக் குற்றங்கள் ஆகிவிடாமல் முன்னறிந்து காத்துக் கொள்வதில்தான் வாழும் கலை உள்ளது.ஒவ்வொரு வீடும், ஒரு நாட்டிற்கான குறும்படைப்புத்தான். அதற்கென்று அரசன், அரசி, அமைச்சன், பணியாள், பரிவாரங்கள் உண்டு. தனித்துவம் கெடாமல் கூடி வாழும் கலையைக் கற்றுக் கொடுக்கும் கூடாரம் வீடு.




தன் வீட்டில் தனக்கான இடம் எது என்பதைக் கற்றுக்கொள்வது முதற்பாடம். அது புறத்தேவைகளுக்கான இடம் மட்டுமன்று. அகத்தளவில் அவ்வீட்டில் தான் யாராக இருக்கிறோம் என்பதை முதலில் உணர்ந்துகொள்வதையும், அதனை முதலில் உணர்த்திவிடுவதிலும் இருக்கிறது தொடக்கநிலைக் கல்வி.

தன்னளவில் யாரும் மன்னர்தான்.மகாராணிதான். பொதுவாழ்வில் அவர்கள் சில இடங்களில் மந்திரிகளாக இருக்கலாம். தளபதிகளாய்த் திகழலாம். தொண்டர்களாய் வாழலாம். ஆனால், குடிமக்கள் என்பதில் உறுதியாய் இருக்க வேண்டும். இந்த நிலைப்பாடுகளைச் சரியான வகையில் நியதிப்படுத்தத் தெரியாத நேரங்களில், இடங்களில்தான் சிக்கல்கள் நேருகின்றன. தன் அலுவலகத்தில் எத்தகு உயர்பதவியில் ஒருவர் இருந்தாலும், ஓடும் பேருந்தில் ஏறிப் பயணிக்கும்போது, நடத்துநருக்கு முன் அவர் ஒரு பயணி. அவ்வளவுதானே? மருத்துவருக்கு முன் ஒரு நோயாளி. ஆசிரியருக்கு முன் ஒரு மாணவன். தந்தைக்கு முன் பிள்ளை. இப்படிச் சூழலுக்கு ஏற்ப, அமையும் பாத்திரத்தன்மைகளை உணர்ந்து அதற்கான நியதிகளைக் கடைப்பிடிக்கக் கற்றுக்கொள்ள வேண்டும் என்பதை, சைவ உணவு உண்ணும் மூத்தவர், கிராமத்துப் பெரியவர், 'பாம்பு தின்கிற ஊருக்குப் போனால் நடுத்துண்டம் நமக்கு என்று உட்கார்ந்துவிட வேண்டும்' என்றார்.

சிறு வயதில் கிடைக்கும் சலுகைகளை, வசதிகளைக் கடைசி வரைக்கும் எதிர்பார்க்கும் உள்ளம் சவலைத் தன்மை உடையது. அதிலிருந்து பெரியவர்கள் தன்னை விடுவித்துக் கொள்ளவேண்டியது அவசியம் .இப்போது, பெரியவர்களுக்கான நிலைப்பாட்டை, சிறுவர் சிறுமியர் எடுத்துக் கொள்கிறார்கள். 'அது அப்படியில்லே தாத்தா', 'இது இப்படித்தான் பாட்டி' என்று மழலை மொழியில் புதிய வாழ்க்கைப் பாடம் நடத்துகிறார்கள்.

நவீன வாழ்க்கையை நவீன முறையில் எதிர்கொள்வது நவீன மனிதர்களால்தானே முடியும்? மிகுதியும் இயந்திரங்களோடு பழகி, இயந்திரமயமாகிப் போன வாழ்வில் இதயங்கள் கொண்ட மனிதர்களாக இருப்பதில் பல சிக்கல்கள் இருக்கத்தான் செய்கின்றன என்பதை இதயபூர்வமாக உணர்ந்துகொண்டால் எல்லாம் எளிதாக—இனிமையாக இருக்கும் என்பது தெளிவானது.

எழுதுவதிலும், பேசுவதிலும், பார்ப்பதிலும் இல்லாத வாழ்க்கை, வாழ்வதில் இருக்கிறது. உலகம் பலவிதம். அதில் ஒவ்வொருவரும் ஒரு தனி ரகம். 'ஒரு மனிதன் ஒரு வீடு ஒரு உலகம்' என்று எழுத்தாளர் ஜெயகாந்தனும், 'லீலை இவ்வுலகு' என்று மகாகவி பாரதியும் சும்மாவா சொன்னார்கள்?

# கனவுகள்

பேச்சுமூச்சில்லாமல்
ஊரடங்கிக் கிடக்கிறது
தெருக்கள்
யாரேனும் ஒருவராவது
தென்படுவார்களா என்று
ஓட விடுகிறேன் விழியை
யாரேனும் ஒருவரை
கூட காணவில்லை!
அறை ஒதுங்கிக்
கிடக்கலானேன்!

சாத்தப்பட்ட அறைக்கு
வெளியிருந்து சத்தமிட்டு
அழைக்கிறது
ஏதோ ஒரு முகம்
எப்பொழுதும் போலவே
இப்பொழுதும் ஜன்னல்கள்
வழியாகப் பார்க்கிறேன்

பறந்து விரிந்த வானத்தில்
ஒரு நிலா தோன்றியது
பல நட்சத்திரங்களும் கூட
கண்கள் கலங்க மீண்டுமாய்
என் அறை பார்க்கிறேன்
நிறைந்து கிடக்கின்றன
கனவுகள்




சக்தி

# தமிழ் 2025

நற்றமிழரின் நாடித்துடிப்பு

## JANUARY



## FEBRUARY



## MARCH



## APRIL



## MAY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | 1 | 2 | 3 | 4 |
| 5 | 6 | 7 | 8 | 9 | 10 | 11 |
| 12 | 13 | 14 | 15 | 16 | 17 | 18 |
| 19 | 20 | 21 | 22 | 23 | 24 | 25 |
| 26 | 27 | 28 | 29 | 30 | 31 | |

## JUNE

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | 1 |
| 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
| 9 | 10 | 11 | 12 | 13 | 14 | 15 |
| 16 | 17 | 18 | 19 | 20 | 21 | 22 |
| 23 | 24 | 25 | 26 | 27 | 28 | 29 |
| 30 | | | | | | |

## JULY

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| 7 | 8 | 9 | 10 | 11 | 12 | 13 |
| 14 | 15 | 16 | 17 | 18 | 19 | 20 |
| 21 | 22 | 23 | 24 | 25 | 26 | 27 |
| 28 | 29 | 30 | 31 | | | |

## AUGUST

| | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | 1 | 2 | 3 |
| 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
| 11 | 12 | 13 | 14 | 15 | 16 | 17 |
| 18 | 19 | 20 | 21 | 22 | 23 | 24 |
| 25 | 26 | 27 | 28 | 29 | 30 | 31 |

## SEPTEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | | | | | |

## OCTOBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | 1 | 2 | 3 | 4 | 5 |
| | | | | 10 | 11 | 12 |
| | | | | 17 | 18 | 19 |
| | | | | 24 | 25 | 26 |
| | | | | 31 | | |



## NOVEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| | | | | | 1 | 2 |
| 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 |
| 10 | 11 | 12 | 13 | 14 | 15 | 16 |
| 17 | 18 | 19 | 20 | 21 | 22 | 23 |
| 24 | 25 | 26 | 27 | 28 | 29 | 30 |

## DECEMBER

| S | M | T | W | T | F | S |
|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 |
| 8 | 9 | 10 | 11 | 12 | 13 | 14 |
| 15 | 16 | 17 | 18 | 19 | 20 | 21 |
| 22 | 23 | 24 | 25 | 26 | 27 | 28 |
| 29 | 30 | 31 | | | | |

அய் தமிழ் முகநூல்:
http://www.facebook.com/pages/Ithamil-Magazine
www.ithamil.com




Email: editor@ithamil.com


VARSHA™
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு
HAPPY TAMIL
NEW YEAR
HAPPY
Tamil
NEW YEAR
தமிழ்
நற்றமிழரின் நாடித்துடிப்பு